

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 189 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 07 – திங்கள்கிழமை 19 பிப்ரவரி 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 189 : Thiruvalluvar Year - 2055 - Maasi 07 - Monday 19 February 2024 - Chennai 16 Pages ₹ 5.00


## சமூக, கல்வி, பொருளாதார வளர்ச்சி – அடிப்படை உரிமைகள் என

# சிறுபான்மையினர் வளர்ச்சிக்கு கழக அரசு என்றும் துணை நிற்கும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - சமூக வலைதளப் பதிவில் மீண்டும் உறுதி !

**சென்னை, பிப். 19 -**

**சிறுபான்மையினரின் சமூக கல்வி, பொருளாதார வளர்ச்சிக்கும் அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கும் என்றும் துணை நிற்பது தி.மு.க. அரசுதான் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.02.2024) தலைமைச் செயலகத்தில் சிறுபான்மை யினர் நலன் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார். அதில்,

“சில கோரிக்கைகளை நீங்கள் கடந்த காலங்களில் வைத்து வந்தீர்கள். இந்தக் கூட்டத்திலும் பேசியிருக்கிறீர்கள். அதனையும் நாங்கள் நிறைவேற்றி இருக்கிறோம். அது தொடர்பான சில முக்கிய அறிவிப்புகளை இப்போது வெளியிட விரும்புகிறேன்.

❖ சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கு வாழ்நாள் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்பது உங்களது நீண்ட நாள் கோரிக்கை. மாநில அரசால் கல்வி நிறுவனங்களுக்கு இது வழங்கப்படும்.

❖ மதசார்பு சிறுபான்மையினர் (Religious Minority) அந்தஸ்து சான்றிதழ், காலம் குறிப்பிடப்படாமல், நிரந்தரச் சான்றிதழாக வழங்க அரசாணை 02.02.2024 அன்று வெளியிடப்பட்டுள்ளது என்பதை உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

❖ அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்ற



மாணவிகளை ‘புதுமைப் பெண்’ திட்டத்தில் சேர்த்தல் குறித்த ஆணைகள் விரைவில் வெளி யிடப்படும்.

❖ கிராமப்புறங்களில் உள்ள அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கும் ‘மாண்புமிகு முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டித் திட்டம்’ விரிவாக்கம் குறித்த ஆணைகள் விரைவில் வெளியிடப்படும்.

❖ சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையின அந்தஸ்து சான்றிதழைப் பெறுவதற்கான விண்ணப்ப செயல்முறையை எளிதாக்கும் வகையில், வலைதளம் (Web portal) உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதற்கிணங்க, தமிழ்நாடு மின்ஆளுமை (TNeGA) மூலம் உருவாக்கப்பட்டு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 07.02.2024 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இஸ்லாமிய மக்களுக்கான அடக்கஸ்தலங்கள் (கபர்ஸ்தான்) இல்லாத மாவட்டத் தலைநகரங்களில் தேவைப்படும் நிலத்தை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் கையகப்படுத்தி மாநகராட்சி / நகராட்சி சார்பில் கபர்ஸ்தான் அமைப்பதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கி அரசாணை 30.1.2024 அன்று வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**வழிப்பாட்டுத் தலங்களுக்கு முறையான அனுமதி!**

மேலும், 20 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்நாள் சிறை தண்டனை அனுபவித்து வரும் முஸ்லிம் சிறைவாசிகளை விடுதலை செய்யவேண்டுமென்ற கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, தகுதிகளின் அடிப்படையில் ஆயுள் தண்டனை பெற்று நீண்டநாள் சிறையிலிருந்த 10 சிறைவாசிகள் முன்விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் 11 ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் முன் விடுதலைக் கோப்புகள் ஆளுநரின் ஒப்புதலுக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

வழிபாட்டுத் தலங்களுக்கு முறையான அனுமதி பெறுவதிலும், வழிபாட்டுத் தலங்களில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்வதிலும் இருக்கக்கூடிய இடர்ப்பாடுகளைக் களைந்து, ஒரு நிலையான இயக்க நடைமுறை (SOP) வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவும் விரைவில் வெளியிடப்படும்.

பள்ளிக் கல்வித் துறையில், அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அனைத்து வகையான ஆசிரியர்கள் நேரடி நியமனத்திற்கான உச்ச வயது வரம்பினை பொதுப்பிரிவினருக்கு 53 எனவும், இதரப் பிரிவினருக்கு 58 எனவும் நிர்ணயித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்த உச்ச வயது வரம்பு அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த நான் ஆணையிட்டுள்ளேன்.

**வக்ஃபு வாரியத்திற்கு - புதிய அலுவலகக் கட்டிடம்!**

சிறுபான்மையினரின் கல்லூரி ஆசிரியர் பணியிடங்களில் யு.ஜி.சி. மற்றும் அரசு விதிகளுக்குட்பட்டு தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு, பல்கலைக்கழகம் மற்றும் அரசால் நியமன அங்கீகாரம் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் வழங்கப்படும்.

வக்ஃபு வாரியத்திற்குப் போதுமான இடவசதிகளுடன் கூடிய புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும்.

வக்ஃபு வாரியத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், 27 இளநிலை உதவியாளர்கள் பணியிடங்களுக்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. விரைவில் அப்பணியிடங்கள் நிரப்பப்படும்.

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, மற்றும் சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் இஸ்லாத்தைத் தழுவினால் அவர்களுக்கு ‘பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் இடஒதுக்கீடு வழங்க வேண்டும்’ என்ற நீண்ட நாள் கோரிக்கையினை கனிவுடன் பரிசீலனை செய்து, சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து ஆவன செய்யப்படும் என்று ஏற்கனவே சட்டப்பேரவையில் 15.2.2024 அன்று அறிவித்துள்ளேன். அதுவும் விரைவில் கிடைக்கும்”.

- உள்பட பல்வேறு முக்கிய அறிவிப்புகளை அறிவித்து, சிறப்புரையாற்றினார்.

**ஒன்றிய அரசு நிறுத்திய கல்வி உதவித் தொகையை நாம் வழங்குவோம்!**

இந்நிலையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2024) வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

**ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் சிறுபான்மை நல ஆணையக் கூட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வரும் நாம், முதன் முதலாக சிறுபான்மைச் சமூகப் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிக்கும் வகையில் நேற்றைய கூட்டத்தை நடத்தியதுடன் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் 10 அறிவிப்புகளையும் வெளியிட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.**

**குறிப்பாக, சிறுபான்மையின மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மெட்ரிக் கல்விக்கு முந்தைய கல்வி உதவித் தொகையை ஒன்றிய அரசு நிறுத்தியதை எதிர்த்து கடந்த 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பிரதமருக்கும் கடிதம் எழுதியிருந்ததை முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.**

**எனினும் சிறுபான்மையினர் மீதான ஒன்றிய அரசின் பாராமுகத்தையடுத்து, அவர்கள் நிறுத்திய கல்வி உதவித்தொகையை நாமே வழங்க முடிவெடுத் துள்ளதாகவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**ஒன்றிய பா.ஜ.க. நிறுத்திய உதவித்தொகை இனி தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் வக்ஃபு வாரியம் மூலம் முஸ்லிம் மாணவர்களுக்கு வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். சிறுபான்மை யினரின் சமூக, கல்வி, பொருளாதார வளர்ச்சிக்கும் அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கும் என்றும் துணை நிற்பது தி.மு.க. அரசுதான் என இதன் மூலம் மீண்டும் ஒருமுறை நிரூபணமாகியுள்ளது** என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

---

## 2024 – 25 ஆம் ஆண்டுக்கான

# தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை இன்று தாக்கல்!

## சட்டப்பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்கிறார்!

சென்னை, பிப். 19 –

2024–25ம் நிதியாண்டுக்கான தமிழ்நாடு அரசின் பட்ஜெட்டை நிதியமைச்சர் தங்கம் தென்னரசு இன்று (பிப்.20) காலை சட்டப் பேரவையில் தாக்கல் செய்கிறார்.

தமிழ்நாடு சட்டப்பேரவையின் ஆண்டுமுதல் கூட்டம் பிப்ரவரி 12ம் தேதி ஆளுநர் உரையுடன் தொடங்கியது. ஆளுநர் ஆர்.என்.ரவி, அரசு தயாரித்து அளித்த உரையின் முதல் பத்தியை மட்டும் படித்த நிலையில், கூடுதலாக இணைத்து படித்தவை அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்டன.

தமிழ்நாடு அரசு தயாரித்து அளித்த உரை மட்டும் அவைக் குறிப்பில் இடம்பெறும் வகையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இதைத்தொடர்ந்து, பிப்ரவரி 13ம் தேதி ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம் தொடங்கியது.

பிப்ரவரி 15–ம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாத்திற்கு பதிலளித்துப் பேசினார்.

இந்நிலையில், சட்டப் பேரவைக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு கூடுகிறது.

அப்போது, 2024–25ம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசின் பொது பட்ஜெட்டை, நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்கிறார்.

**வேளாண் பட்ஜெட் நாளை தாக்கல்!**

வேளாண் நிதிநிலை அறிக்கையை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நாளை தாக்கல் செய்யவுள்ளார்.

---

## தொடரும் விவசாயிகளின் போராட்டம்!

# விவசாயிகளுடன் 4வது கட்டமாக ஒன்றிய அரசு பேச்சுவார்த்தை!

*புதுடெல்லி, பிப். 19 -*

வேளாண் விலை பொருட்களின் குறைந்த பட்ச ஆதார விலைக்கு சட்டப்பூர்வ உத்தரவாதம், கடன் தள்ளுபடி, உள்ளிட்ட 13 கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் டெல்லி நோக்கி பேரணி செல்லும் போராட்டத்தை கடந்த 13ந் தேதி தொடங்கினர்.

பஞ்சாபில் இருந்து புறப்பட்ட விவசாயிகள் பஞ்சாப், அரியானா இடையே ஷம்பு எல்லையிலும் கனாரி எல்லையிலும் தடுத்து நிறுத்தப்பட்டனர். விவசாயிகள் மீது கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டன. விவசாயிகளை தடுக்க தடுப்புகள் அமைக்கப்பட்டு உள்ளது.

நேற்று 6வது நாளாக விவசாயிகளின் போராட்டம் நீடித்தது.

போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர விவசாய சங்க நிர்வாகிகளுடன் ஒன்றிய அரசு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. மூன்று முறை நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படவில்லை.

நேற்று 4வது முறையாக பேச்சுவார்த்தை நடைபெற்றது.

ஒன்றிய அரசு சார்பில் அமைச்சர்கள் அர்ஜுன் முண்டா, பியூஸ் கோயல், நித்யானந்த் ராய் ஆகியோர் பங்கேற்றனர். இந்த பேச்சுவார்த்தையில் சுமூக உடன்பாடு ஏற்படும் என்று ஒன்றிய அரசு நம்பிக்கை தெரிவித்தது.

பஞ்சாப் கிசான் மஸ்தூர் சங்கர்ஷ் கமிட்டி பொதுச் செயலாளர் சர்வன் சிங் பாந்தர் கூறும்போது, அரசுடன் நான்காவது கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அரசு தரப்பில் அவகாசம் கேட்கப்பட்டு உள்ளது. ஒன்றிய அமைச்சர்களிடம் பேசி தீர்வு காண்பதாக கூறியுள்ளது என்றார்.

இந்நிலையில் பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாவிட்டால் வருகிற 21ந்தேதி உத்தரப்பிரதேசம், அரியானா, பஞ்சாப் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய 4 மாநிலங்களில் தர்ணா போராட்டம் நடத்தப்படும் என்று பாரதிய கிசான் யூனியன் தலைவர் ராகேஷ் திகைத் அறிவித்துள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 19-02-2024

# உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்

'பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்!' - என்பது இந்தியாவுக்கே மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காட்டும் வழியாகும். இந்த முழக்கத்தை முன் வைத்து தமிழ்நாடு முழுவதும் கடந்த மூன்று நாட்கள் மாபெரும் கூட்டங்களை திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திக் காட்டி இருக்கிறது.

**'உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்' என்ற தலைப்பில் நடைபெற்ற இந்தக் கூட்டங்கள், மண்டல மாநாடுகளைப் போல மிகப் பிரமாண்டமாக நடைபெற்றிருக்கின்றன. பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்த நினைக்கும் பல்வேறு மாநிலங்களில் உள்ள அரசியல் இயக்கங்கள், இத்தகைய கூட்டங்களைத் தான் தொடங்க வேண்டும் என்பதையும் உணர்த்தி இருக்கிறார் தி.மு.க. தலைவர் அவர்கள்.**

இந்திய நாடு புதிய அரசைத் தேர்ந்தெடுப்பதற்கான நாடாளுமன்றத் தேர்தலுக்குத் தயாராகி வருகிறது. பத்து ஆண்டுகளுக்கு முன்னால் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாமல் - மக்களுக்கு வேதனைகளையும் துன்ப துயரங்களையும் மட்டுமே கொடுத்த பாசிச பா.ஜ.க. கட்சியானது மீண்டும் வாக்குக் கேட்டு வரப் போகிறது.

**பெட்ரோல், டீசல், சிலிண்டர் விலையை உயர்த்தியும், விலைவாசி அனைத்தையும் விண்ணைத் தொடும் வகையில் அதிகப்படுத்தியும் அப்பாவி ஏழை எளிய சாதாரண சாமான்ய மக்களுக்கு விரோதமான ஆட்சியைத் தான் பத்தாண்டுகளாக பா.ஜ.க. கொடுத்து வருகிறது.**

மாநிலங்களைச் சிதைப்பதன் மூலமாக கூட்டாட்சி மாண்புகளையும் சிதைத்துச் சின்னாபின்னம் ஆக்கிவிட்டது பா.ஜ.க. ஆட்சி. மாநிலங்களைச் செயல்பட விடாமல் தடுப்பதன் மூலமாக பல்வேறு இன,மொழி,பண்பாட்டு பாரம்பரியம் கொண்ட மக்களது உணர்வுகளோடு வேட்டையாடிக் கொண்டிருக்கிறது பா.ஜ.க. அரசு.

**2014 நாடாளுமன்றத் தேர்தலில் வளர்ச்சி என்பதைச் சொல்லி ஆட்சிக்கு வந்த பா.ஜ.க., 2019 வரை வளர்ச்சியைக் காட்ட முடியாததால் நரேந்திரமோடி என்ற பிம்பத்தைக் காட்டியது. 2019க்குப் பிந்தைய பா.ஜ.க. ஆட்சியானது ரபேல் ஊழல், அதானி முறைகேடுகள், 7 லட்சம் கோடி மதிப்பிலான சி.ஏ.ஜி.அறிக்கை போன்ற பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளான நிலையில் மோடியின் பிம்பமும் இன்று கிழித்தெறியப்பட்டு விட்டது. எனவே மோடியின் முகம் இன்று செல்லுபடியாகாது. இந்த நிலையில் மக்களின் மத உணர்வுகளைத் தூண்டி, அதனை அரசியல் முதலீடு ஆக்க நினைத்து கோவில் கட்டி இருக்கிறோம், கோவிலுக்கு இலவச ரயில் விடுகிறோம் என்று சொல்லி மக்களை திசை திருப்பப் பார்க்கிறது.**

மூன்றாவது முறையும் பா.ஜ.க. ஆட்சி அமைவது என்பது இந்திய நாட்டின் அனைத்து மாண்புக்கும் முற்றுப்புள்ளி வைத்து, நூறு ஆண்டுகளுக்குப் பின்னால் கொண்டு போய் நிறுத்தி விடுவார்கள். இதனைத் தடுக்க வேண்டிய மாபெரும் அரசியல் கடமை அனைவர்க்கும் இருக்கிறது.

இதனை மக்கள் மன்றத்தில் விதைத்து விட்டது 'உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்' என்ற பரப்புரை பயணம்.

2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக தமிழ்நாட்டில் அ.தி.மு.க. அரசின் பத்தாண்டு கால முறையற்ற நிர்வாகம், மக்களின் குறைகள், துன்பங்களை நேரடியாகக் கேட்டறிந்திட 15 கழக முன்னணியினர் 'விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல்' என்ற பரப்புரையில் பங்கேற்று அ.தி.மு.க.வை மக்கள் நிராகரிப்பதற்கான அடித்தளமிட்டனர். அதேபோல் வர இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலும் பா.ஜ.க. வீழ்த்தப்பட வேண்டும். பா.ஜ.க.வுடன் 'மறைமுக கூட்டணி' வைத்துள்ள பழனிசாமியின் அ.தி.மு.க.வும் வீழ்த்தப்பட வேண்டும்.

இந்த நோக்கத்தை மக்களிடம் சொல்வதற்காக 19 கழக முன்னணியினரை களத்தில் இறக்கி, நாடாளுமன்றத் தொகுதிவாரியாக 'பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்' என்ற முழக்கத்தை முழங்க வைத்துள்ளார் தலைவர் அவர்கள்.

இரண்டு கருத்துகள் அழுத்தமாக விதைக்கப்பட வேண்டும்.

**★ பா.ஜ.க. வீழ்த்த முடியாத சக்தி அல்ல. அது பல்வேறு மாநிலங்களில் நடந்த சட்டமன்றத் தேர்தல்களில் வீழ்த்தப்பட்ட கட்சி தான். அந்தக் கட்சி நேரடியாக - உண்மையான செல்வாக்குடன் ஆள்வது ஐந்தாறு மாநிலங்களில் மட்டும் தான். மற்றபடி கட்சிகளை உடைத்து - ஆட்களை இழுத்து - மாநிலங்களைக் கையில் வைத்துள்ளது. மிகப்பெரிய மாநிலங்கள், பா.ஜ.க.வின் எதிர்க்கட்சிகள் வசம் உள்ளன. எனவே, பா.ஜ.க.வை வீழ்த்துவது சாத்தியமானது தான் என்பதை மக்கள் மனதில் விதைக்க வேண்டும்.**

**★ தங்களை ஏதோ பரிசுத்தமானவர்கள் என்பதைப் போல பா.ஜ.க. தலைமை காட்டிக் கொள்கிறது. 'மலைமுழுங்கி ஊழல் கட்சி' தான் பா.ஜ.க. என்பதை மக்கள் மன்றத்தில் திரும்பத் திரும்பச் சொல்லி ஆக வேண்டும். ஊழலை சட்டபூர்வமாக ஆக்கிய கட்சி தான் பா.ஜ.க. தேர்தல் நன்கொடைப் பத்திரமாக 'பத்திரப்படுத்தியது' பா.ஜ.க. 2017 ஆம் ஆண்டு இந்த முறையைக் கொண்டு வந்தது பா.ஜ.க.**

2016 முதல் 2022 வரை 28 ஆயிரத்து 30 தேர்தல் பத்திரங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன் மொத்த மதிப்பு 16 ஆயிரத்து 438 கோடி ரூபாய். இதில் 10 ஆயிரத்து 122 கோடியை ஈட்டி உள்ள கட்சி பா.ஜ.க. அதாவது, **தேர்தல் பத்திரம் மூலமாக பெற்ற மொத்த தொகையில் 60 விழுக்காடு பா.ஜ.க. பெற்றுள்ளது. தேர்தல் பத்திரங்கள் சட்டவிரோதமானது என்று சொல்லி உச்சநீதிமன்றம் அதனையே ரத்து செய்து தீர்ப்பு அளித்துள்ளது. பா.ஜ.க.வின் ஊழல் முகத்திரை இதன் மூலமாக கிழிந்துள்ளது.**

இவற்றையெல்லாம் மக்கள் மன்றத்தில் திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலமாகத் தான் பாசிசத்தை வீழ்த்த முடியும். இந்தியாவை வெல்ல முடியும்!

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி – ஊராட்சிகள்தோறும்

# "டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும்" திட்டம்!

## மதுரையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!




மதுரையில், நேற்று (18.02.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் – ரூ .86 கோடி மதிப்பில் "டாக்டர். கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும்" திட்டத்தை துவங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பி.மூர்த்தி, அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன், சு.வெங்கடேசன் எம்.பி., கோ.தளபதி எம்.எல்.ஏ. மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




மதுரையில், நேற்று (18.02.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை மாவட்ட விளையாட்டரங்கில் ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையம் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில், உபகரணங்களுடன் கட்டப்பட்ட கட்டடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பி.மூர்த்தி, அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, மதுரை மாநகராட்சி மேயர் திருமதி. இந்திராணி பொன்வசந்த், மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மா.சௌ. சங்கீதா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மதுரை மாநகராட்சி ஆணையர் தினேஷ் குமார், மதுரை பாராளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, மு. பூமிநாதன், ஆ. வெங்கடேசன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**மதுரை, பிப்.19-**

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2023-2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பொன் விழாவை சிறப்பித்திடும் வகையில் அனைத்து ஊராட்சிகளுக்கும் "டாக்டர். கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்" கீழ் 86கோடி ரூபாய் செலவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும்" என அறிவித்தார்.**

அதன்படி, மதுரையில் முதற்கட்டமாக கிரிக்கெட், கையுந்துப் பந்து, எறிபந்து, கால்பந்து, டென்னிக்காய்ட், ஸ்கிப்பிங், கேரம், சிலம்பம், செஸ், கபாடி, இறகுப்பந்து போன்ற விளையாட்டுகளுக்கு தேவையான உபகரணங்கள், உடற்பயிற்சிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் டி ஷர்ட், விசில், கோன்ஸ், தொப்பி ஆகிய 33 உபகரணங்களின் தொகுப்பை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இதன் தொடர்ச்சியாக மதுரை மாவட்ட விளையாட்டரங்கில் ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையம் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் இதற்கான உபகரணங்களுடன் கட்டப்பட்ட கட்டடத்தை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இம்மையத்தில் விளையாட்டு வீரர்கள் விளையாட்டு தொடர்பான காயங்களிலிருந்து மீண்டு தொழில் முறையில் தங்களது உடற்தகுதியை மீட்டு எடுக்க இயலும். மேலும், இம்மையத்தின் மூலம் விளையாட்டு வீரர்களுக்கு தீவிரமான தொடர் அறிவியல் பூர்வ பயிற்சி அளிக்கப்படும்.

இந்த விளையாட்டு அறிவியல் மையம் கட்டமைப்பில் உள்ள வசதிகள்

தரைத்தளத்தில் பிசியோதெரபி கூடம், மருத்துவ அறை, பரிசோதனை கூடம், அறிவியல் அறிஞர் அறை, அலுவலக அறை.

முதல் தளத்தில் பயிற்சி முறைகள் அறை, கூட்ட அரங்கம், முக்கிய பிரமுகர்கள் அறை, உணவகம், உடலியல் அறை, உடலியல் & உயிரியல் இயக்கவியல் அறை நிறுவப்பட்டுள்ளன.

## தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில்

# 60,567 பேர்களுக்கு அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளது!

## ஆதாரங்களுடன் தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

**சென்னை, பிப்.19**

**தமிழ்நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் 60,567 நபர்களுக்கு அரசு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**

*இது தொடர்பாக, அரசின் செய்தி வெளியீடு வருமாறு:-*

*சென்னையில் 16.02.2024 அன்று நடைபெற்ற அரசு நிகழ்ச்சி ஒன்றில், தமிழ்நாட்டில் இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து கடந்த மாதம் வரை 60,567 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்ட விபரத்தை முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது குறித்து சில ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களுக்கு பின்வரும் விவரங்கள் தெரிவிக்கப்படுகின்றது.*

*தமிழ்நாட்டில், அரசுப் பணிக்கான பணியாளர்களை தேர்வு செய்வதற்காக உள்ள தேர்வு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஆகியவற்றின் மூலம், கடந்த இரண்டரை ஆண்டுகளில் வெவ்வேறு அரசுத் துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களுக்காக, ஜனவரி 2024 வரை, 27,858 அரசுப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இது தவிர, பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக, ஜனவரி 2024 வரை 32,709 நபர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.*

*துறைவாரியான நியமனங்களைப் பொறுத்தவரை நீதித்துறையில் 5,981 பணியிடங்களும், பள்ளிக்கல்வித்துறையில் 1,847 பணியிடங்களும், வருவாய்த் துறையில் 2,996 பணியிடங்களும், சுகாதாரம் மற்றும் மக்கள் நல வாழ்வுத் துறையில் 4,286 பணியிடங்களும், ஊரக வளர்ச்சித் துறையில் 857 பணியிடங்களும், உயர் கல்வித் துறையில் 1,300 பணியிடங்களும், காவல் துறை, நகராட்சி நிர்வாகம், வேளாண்மை, சமூக நலம் மற்றும் சத்துணவு போன்ற அரசின் பிற துறைகளின் வாயிலாக 15,442 பணியிடங்களும் அந்தந்தத் துறைகளின் வழக்கமான நடைமுறைகளைப் பின்பற்றி நேரடியாக நிரப்பப்பட்டன. இவ்வகையில் 32,709 இளைஞர்களுக்கு பணி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.*

*ஆக மொத்தம், இந்த அரசு பொறுப்பேற்ற இந்த மூன்று ஆண்டு காலத்திற்குள் (27,858 + 32,709) 60,567 நபர்களுக்கு அரசுப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.*

*இது மட்டுமன்றி, தமிழ்நாட்டில் படித்த இளைஞர்களுக்கு பல்லாயிரக்கணக்கில் வேலை வாய்ப்பினை உருவாக்கிட உலக முதலீட்டாளர்களும் நடத்தப்பட்டது.*

*இம்மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாக நம் மாநிலத்தின் இளைஞர்களுக்கு இந்திய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்கிட தமிழ்நாடு அரசு வழிவகை செய்துள்ளது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.*

*இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*



"திராவிட இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படும் டாக்டர் நடேசனார் அவர்களின் 150வது பிறந்த நாளினையொட்டி, நேற்று (18.2.2024), காலை, சென்னை, தியாகராயர் நகர் நடேசனார் பூங்காவில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதுபோது திராவிட இயக்க எழுத்தாளர் க.திருநாவுக்கரசு உள்ளிட்ட திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

## இந்திய நாட்டைக் காக்க – பாசிசத்தை வீழ்த்துவோம்!

# தமிழ்நாட்டில் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றி பெற உழைப்போம்!

### கிருஷ்ணகிரியில் 'உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்' பொதுக்கூட்டத்தில் - கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் பேச்சு!

**கிருஷ்ணகிரி, பிப். 19 -**

**கிருஷ்ணகிரியில் 'உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்' என்ற தலைப்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் பங்கேற்று சிறப்புரை யாற்றினார். அப்போது அவர், "பாசிசத்தை வீழ்த்தி தமிழகத்தில் அனைத்து தொகுதிகளிலும் வெற்றி பெற உழைப்போம்" என்று குறிப்பிட்டார்.**



கிருஷ்ணகிரி டோல்கேட் அருகில் உள்ள தேவராஜ் திடலில், கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு, மாவட்டப் பொறுப்பு அமைச்சரும், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சருமான அர.சக்கரபாணி தலைமை வகித்தார். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ., கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த கூட்டத்தில் கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் பங்கேற்று சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

கிருஷ்ணகிரி மாவட்டம் தி.மு.க. கோட்டை - தி.மு.க. தலைமைக்கு கட்டுப்பட்ட மாவட்டம். கிருஷ்ணகிரி மக்களவைத் தொகுதியில் கடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சியை 1.75 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்த நிலையில், ஒரு வேளை இந்த தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் நிறுத்தப்பட்டால் எவ்வளவு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறலாம். வருகிற நாடாளுமன்றத்தின் வெற்றிக்கு அறிகுறியாக இந்தக் கூட்டம் நடைபெறுகிறது.

இந்தியாவிலேயே இன்றைக்கு ஒரு ஆட்சி அமைதியாக, சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடக்கிற ஆட்சி என்றால் அது நமது கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஆட்சி தான். ஒரே நாடு, ஒரே தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தொகுதி சீரமைப்பு ஆகியவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம். நமது அரசு பல சாதனைகளை செய்து வருகிறது. பெண்களுக்கு இலவச பேருந்து பயண சலுகை, குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1000ம், கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டம் மூலம் ரூ.1000, காலை உணவுத் திட்டம் என பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது நமது அரசு.

ஆனால் பா.ஜ.க.வினரோ, நாடாளுமன்ற புதிய கட்டிடம், ராமர் கோயில், கத்தாரில் இந்து கோயில் கட்டியுள்ளோம் என்பது போன்றதை சொல்லி தான் ஓட்டு கேட்க முடியும். ஒன்றிய அரசு கோவில் கட்டியது மட்டும்தான் காட்டுகிறது. மக்கள் திட்டங்களை காட்ட முடியுமா? ஆங்கிலேயர் ஆட்சியில் கட்டிய நாடாளுமன்ற கட்டிடத்தை மாற்றி குடிசை வீடு மாதிரி புதிய நாடாளுமன்றம் கட்டியுள்ளனர் .

ஒன்றிய அரசு இந்தியாவில் எல்லா மாநிலத்திலும் இந்தியை திணிக்க வேண்டும் எல்லோரையும் ஹிந்தியை படிக்க வேண்டும் என நினைக்கிறது. ஒரே நாடு ஒரே தேர்தல் அடிப்படையில் மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகளை மறுசீரமைப்பு செய்தால் 39 தொகுதிகளில் 25 தொகுதிகளாக குறையும். அதனால் தான் சட்டப்பேரவையில் முதலமைச்சர் இது குறித்து தீர்மானம் கொண்டுவந்துள்ளார்.

இந்த தொகுதிகள் சீரமைப்பு தீர்மானம் கொண்டு வந்தது மூலம் முத்தமிழறிஞர் கலைஞரை நான் பார்த்து உள்ளேன். ஆனால் இன்றைய முதலமைச்சர் ஸ்டாலின் கலைஞரை மிஞ்சிவிட்டார் .

மேலும் காங்கிரஸ் ஆட்சி அமைந்த போது சோனியா காந்தியை பிரதமர் பதவி ஏற்க வேண்டும் என்று கேட்ட போது வேண்டாம் என்று சொன்னவர் தியாகி சோனியா காந்தி., அவரைப் பார்த்து வாரிசு அரசியல் செய்கின்றனர் என பேசுகின்றனர் .

ஒன்றிய அரசு மக்களை காக்கும் திட்டங்கள் ஏதாவது செய்துள்ளனரா?. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் ஒன்றிய அரசுடன் தகராறு கிடையாது. நம்மோடு தான் தகராறு. நம்மை முதலில் இருந்தே பணிய வைக்க பார்க்கிறார்கள்.

நாங்கள் பிரதமரை நேரில் சந்தித்தோம். நாட்டிற்காக உங்களுடன் நாங்கள் ஒத்துழைக்கிறோம் என்று சொன்னோம். ஆனால், எங்கள் நிலைமை என்ன. தமிழ்நாட்டில் எவ்வளவு பெரிய அழிவு, வெள்ளம். ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லையே. அப்படி நாங்கள் உங்களோடு எப்படி ஒத்துழைப்பது? எங்களிடம் வரி வாங்கலையா? பணம் வாங்கலையா?

ஆகையினால், நம்மை பொறுத்தவரை தெளிவான சிந்தனை, சரியான கொள்கை, அற்புதமான தலைவர், அதைவிட அற்புதமான தி.மு.க. தொண்டர்கள். யாரும் எதையும் செய்திட முடியாது. எனவே பாசிசத்தை வீழ்த்தி தமிழ்நாட்டில் அனைத்து தொகுதிகளிலும் தி.மு.க. வெற்றி பெற அனைவரும் உறுதி ஏற்க வேண்டும் . வெற்றி நமதே.

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் பேசினார்.

**பங்கேற்றோர் விவரம்!**

இந்த கூட்டத்தில், மாநில மகளிரணி ஆலோசனை குழு உறுப்பினர் டாக்டர். காஞ்சனா கமலநாதன், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் முருகன், நரசிம்மன், கோவிந்தசாமி, கிருஷ்ணமூர்த்தி, மாநில விவசாய அணி துணை செயலாளர்கள் டேம்.வெங்கடேசன் ,அரியப்பன், மாநில மகளிர் ஆணைய குழு உறுப்பினர்

டாக்டர்.மாலதி நாராயணசாமி, மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில சிறுபான்மை நலக்குழு உறுப்பினர் விஜயகுமார், மாவட்ட அவைத்தலைவர்கள் நாகராஜ், யுவராஜ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சந்திரன், சாவித்திரி கடரலசுமூர்த்தி, சின்னசாமி, புஷ்பா சர்வேஷ், மாவட்ட பொருளாளர்கள் கதிரவன், சுகுமாறன், தலைமை செயற்குழு

உறுப்பினர்கள் பரிதநவாப், செந்தில், கிருபாகரன், எல்லோராமணி, வீராரெட்டி, கிரிஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன், நாகராசன், அஸ்லாம், சித்ராசந்திர சேகர், கோதண்டன், ஜெயராமன், முனிராஜ், சீனிவாசன், அப்துல்கலாம், தனலட்சுமி, அருணா பூசன்குமார், ஒன்றிய, செயலாளர்கள் கோவிந்தன்,தனசேகரன், தேங்காய்.சுப்பிரமணி , மகேந்திரன், சாந்தமூர்த்தி, ராஜேந்திரன் , அறிஞர்,

குண.வசந்தரசு , எக்கூர் .செல்வம்,ரஜினிசெல்வம், குமரேசன் கருணாகரன், ரகுநாத், நாகேஷ், பாக்கியராஜ், சின்னராஜ், ஸ்ரீதர், தணிகாசலம், கஜேந்திரமூர்த்தி, சீனிவாசலுரெட்டி, பேரூர் கழக செயலாளர்கள் பாபு , தம்பிதுரை வெங்கடப்பன் , பாபு சிவகுமார், திவாகரன், சீனிவாசன், தஸ்தகீர் மற்றும் பி.டி. அன்பரசன் , மருத்துவர்.தென்னரசு ,

மாவட்ட , மாநகர,ஒன்றிய ,நகர அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள் , துணை தலைவர்கள் , துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் தொண்டர்கள் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

---

சொன்னதை மட்டுமின்றி சொல்லாததையும் செய்யும் முதல்வர் தலைமையிலான கழக அரசு

## ஒரு குவிண்டால் நெல்லுக்கு 2500 ரூபாய் கண்டிப்பாக வழங்குவோம்!

### சட்டப்பேரவையில் அமைச்சர் அர.சக்கரபாணி உறுதி!

**சென்னை, பிப்.19-**

**சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் தேர்தல் வாக்குறுதி குறித்து எதிர்க்கட்சி தலைவர் பேசும்போது, குறுக்கிட்டு பேசிய அமைச்சர் அர.சக்கரபாணி, "முதலமைச்சர் தலைமையிலான இந்த அரசு, ஒரு குவிண்டால் நெல்லுக்கு 2500 ரூபாயை கண்டிப்பாக வழங்கும்" என்று குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் அர.சக்கரபாணி குறுக்கிட்டு பேசியதாவது:-

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஒரு குவிண்டால் நெல்லுக்கு 2,500 ரூபாய் ஆதார விலையாக வழங்கப்படுவதாக தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள், ஏன் வழங்கவில்லையென்று கேட்டார்கள். இதற்கு நான் ஏற்கெனவே அவருக்கு பதில் சொல்லியிருக்கிறேன். இருந்தபோதிலும், அவர் கேட்டதால் மீண்டும் பதில் சொல்ல விரும்புகிறேன். உங்களுடைய ஆட்சிக் காலத்திலே சன்ன இரகத்திற்கு 1,960 ரூபாய்தான் (குறுக்கீடுகள்) ஒரு குவிண்டால் நெல்லிற்கு வழங்கப்பட்டது. இன்றைக்கு ஒரு குவிண்டால் நெல்லிற்கு 2,310 ரூபாய் வழங்குகிறோம். 190 ரூபாய் தான் 2,500 ரூபாய்க்கு பாக்கியுள்ளது. அதேபோன்று பொது இரக நெல்லிற்கு 1,945 ரூபாய் இருந்தது, இன்றைக்கு 2,265 ரூபாய் வழங்குகிறோம். எங்களுக்கு, 5 ஆண்டு காலத்திற்கு ஆட்சி இருக்கிறது.

அதேபோல, நீங்களும் 2011, 2016-ஆம் ஆண்டு தேர்தலின்போது எத்தனையோ தேர்தல் வாக்குறுதிகளைச் சொன்னீர்கள். அதையெல்லாம் முழுமையாக நிறைவேற்றிவிட்டீர்களா? இல்லை. இருந்தாலும், முதலமைச்சர் அவர்கள், தேர்தல் சமயத்தில் சொல்லிய வாக்குறுதிகள் மட்டுமல்லாமல், சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றியி ருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணத்திற்கு நான் இரண்டை மட்டும் சொல்கிறேன். 1 முதல் 5 வகுப்புகளில் படிக்கின்ற குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்படுமென்று தேர்தல் சமயத்தில் நாங்கள் சொல்லவில்லை. ஆனால், இன்றைக்கு 18 இலட்சம் குழந்தைகளுக்கு, 31 ஆயிரம் தொடக்கப் பள்ளிகளில் தொடங்கப்பட்டு காலை சிற்றுண்டி வழங்கப் பட்டுக் கொண்டிருக்கிறது.



அதேபோன்று, இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டத்தை தேர்தல் சமயத்தில் நாங்கள் சொல்லவில்லை. சொல்லாத வாக்குறுதிகளை நிறைவேற்றியு ள்ளோம். விபத்தில் சிக்குபவர்களுக்கு அவர்களை காப்பாற்றுவதற்கு 48 மணி நேரத்திற்கு ஆகின்ற செலவை, 1 இலட்சம் ரூபாய் செலவை முதலமைச்சர் அவர்கள் ஏற்று, இது வரையில் 2 இலட்சம் பேர்களின் உயிரைக் காப்பாற்றியிருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

எனவே, ஒரு குவிண்டால் நெல்லுக்கு 2,500 ரூபாயை முதலமைச்சர் அவர்களுடைய இந்த அரசு கண்டிப்பாக வழங்கும். இதில் உங்களுக்கு ஐயப்பாடு எழ வேண்டிய அவசியமில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

## சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் கூட்டம்!

### ஆளுங்கட்சி கொறடா எ.நாகராஜன் அறிவிப்பு

*சென்னை, பிப். 19-*

சென்னை மாநக ராட்சி கழக உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம் வரும் 21 ஆம் தேதி நடைபெறுகிறது என மாமன்ற ஆளுங்கட்சி கொறடா ஏ.நாகராசன் அறி வித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, தி.மு.க. மாமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம் வருகின்ற, 21.02.2024 புதன்கிழமை காலை 11.30, ரிப்பன் கட்டடம், 2வது மாடியில் உள்ள ஆலோசனைக் கூடத்தில், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில், மேயர் திருமதி. ஆர். பிரியா , துணை மேயர் மு. மகேஷ்குமார் ஆகி யோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற வுள்ளார்கள்.

எனவே, தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பொருள்: 2024 - 2025 நிதி நிலை அறிக்கை தாக்கல் மற்றும் விவாதம் (21.02.2024 மற்றும் 22.02.2024) தொடர்பாக.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## கோவையில் - கழக சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு நிர்வாகிகள் கூட்டம்!

### டாக்டர் அ.சுபேர்கான் தலைமை! பீட்டர் அல்போன்ஸ் சிறப்புரை!

*கோவை, பிப்.18-*

கோவையில் கழக சிறு பான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் "நம்மில் ஒருவர் நமக்கான தலைவர் மு.க. ஸ்டாலின் எனும் தலைப்பில் மாபெரும் கருத்தரங்கம் மற்றும் கலந்துரையாடல்; ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

கோவை மாவட்டம் போத்தனூர் சங்கமம் கல்யாண மண்டபத்தில், தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் "நம்மில் ஒருவர் நமக்கான தலைவர் மு.க.ஸ்டாலின் எனும் தலைப்பில் மாபெரும் கருத்தரங்கம் மற்றும் கலந்துரையாடல் கூட்டம் சிறுபான்மை யினர் நல உரிமைப்பிரிவின் செயலாளர் டாக்டர். அ. சுபேர்கான் தலைமையில் நடைபெற்றது.

சிறுபான்மையினர் நல ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ் சிறப்புரை யாற்றிய இந்நிகழ்வில், அணியின் துணைச் செயலாளர் இரா. அன்வர்கான் வரவேற்றார். இந்நிகழ்வுக்கு, கோவை, ஈரோடு, திருப்பூர், நீலகிரி மாவட்ட கழகங்களைச் சேர்ந்த மாவட்ட அமைப்பாளர்கள், இலா.தேவசீலன், முகமது அயூப் அலி, சந்தோஷ் டோமினிக், ஏ.நிசார் அகமது, எஸ்.ஏ.பி.ஏ. பாக்கியராஜ், ஒ.அன்வர் அப்துல்லா, சையத் அஸ்லம் பாஷா, ஷாஜஹான், மற்றும் அல்லாபிச்சை ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து, கோவை தெற்கு மாவட்ட அமைப்பாளர் அல்தாப் உசேன் வரவேற்புரை யாற்றினார்.

இந்நிகழ்வில் கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிகளிலிருந்து ஆயிரத்து இருநூறுக்கும் மேற்பட்ட சி.எஸ்.ஐ, ஆர்.சி, பெந்தேகோஸ்தே மற்றும் ஏனைய திருச்சபைகளின் பேராயர்களும், ஏராளமான அருட் தந்தைகளும், சுன்னத் ஜமாஅத், தவ்ஹீத் ஜமாஅத் உள்ளிட்ட அனைத்து ஜமாஅத் களிலிருந்தும் ஜமாஅத் தலைவர், துணைத் தலைவர், செயலாளர், உலமாக்கள் மற்றும் பல்வேறு நிர்வாகிகளும் பங்கேற்று சிறப்பித்தனர்.

இதில், சிறுபான்மையின மக்களின் பாதுகாப்பு அரணாக செயல்பட்டுவரும் ஒரே இயக்கம் தி.மு.கழகம் தான் என்றும், எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் எங்களுடன் துணை நின்று எங்கள் உரிமைக்காக குரல் கொடுக்கும் ஒரே தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தான் என்றும், சிறுபான்மையின மக்களாகிய நாங்கள் என்றென்றும் தி.மு.கழகத்திற்கே தங்களின் முழு ஆதரவையும் தெரிவிப்போம் என்றும் தங்களின் கருத்துகளைத் தெரிவித்தனர்.

தொடர்ந்து, அணியின் மாநிலச் செயலாளர் டாக்டர். அ. சுபேர்கான் பேசுகையில், கழகம் துவங்கப்பட்ட திலிருந்து இது நாள் வரையிலும் சிறுபான்மையின மக்களுக்காக நிறைவேற்றிய, இஸ்லாமியர்களுக்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெற்றுத்தந்த 3.5% உள் இடஒதுக்கீடு, சிறுபான்மையினர் நல ஆணையம் அமைத்தது, நபிகளாரின் பிறந்த நாளுக்கு அரசு விடுமுறை அளித்தது, ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியை உயர்த்தி வழங்கியது, வக்பு சொத்துகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தது, தேவாலயங்கள் புனரமைப்பதற்கு 6 கோடியில் இருந்து 10 கோடியாக நிதி உயர்தியது,

பள்ளிவாசல்கள், தர்காக்கள், வக்பு நிறுவனங்கள் பழுது பார்ப்பதற்காக ஆண்டு தோறும் வழங்கப்படும் மானியம் அதிகரித்து தந்தது, 38 மாவட்டங்களிலும் கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கங்கள் உருவாக்கப்பட்டது மற்றும் தலித் கிறிஸ்தவர்களுக்கான இட ஒதுக்கீடு பெற வேண்டி மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் உள்ளிட்ட ஏராளமான திட்டங்களையும் பட்டியலிட்டு பேசினார்.

மேலும், "அடிமை அ.தி.மு.க அடகு வைத்த மாநில உரிமைகளை மீட்க போராடும் முதலமைச்சர் அவர்களுக்கு சிறுபான்மையின மக்களாகிய நாம் அனைவரும் என்றென்றும் உறுதுணையாக இருப்போம்" என்றும் கூறினார்.

நிறைவாக, கோவை வடக்கு மாவட்ட அமைப்பாளர் உசேன் நன்றியுரை நிகழ்த்தினார்.



இராயபுரம் கிழக்கு பகுதி சார்பில் சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் பிறந்தநாளை முன்னிட்டு அவரது சிலைக்கு (18.2.2024 ஞாயிற்றுக்கிழமை) இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் தலைமையில் மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.






விருதுநகர் மாவட்டம் மல்லாங்கிணறு தனியார் பள்ளியில் காமராஜர் அவர்களின் வெண்கலச் சிலையை கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் திறந்து வைத்தார் அருகில் அமைச்சர் தங்கம் தென்னரசு, மேயர் சங்கீதா, இன்பம், ஜெயசந்திரன் என்ற போஸ் உள்ளனர்.



பெருங்களத்தூர் தெற்கு பகுதிப் பிரதிநிதி யோபு இல்லத் திருமண விழா தாம்பரம் டி.ஜி.பி. திருமண மண்டபத்தில் பகுதிச் செயலாளர் பெருங்களத்தூர் எஸ்.சேகர் தலைமையில் நடைபெற்றது. இதில் காஞ்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இதில் தாம்பரம் மாநகர மேயர் திருமதி வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், பொதுக்குழு உறுப்பினர் லயன் ஆர்.எஸ்.சங்கர், வட்டச் செயலாளர் வெங்கடேசன், ஜெ.குப்பன், மணிவண்ணன், எஸ்.ஐசக், பரஞ்சோதி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

## மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

# மா.சுப்பிரமணியன் - 150வது மாரத்தானை நிறைவு செய்தார்!

சென்னை, பிப்.19-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட நிலையிலும், 2004 அன்று சாலை விபத்தொன்றில் சிக்கி வலது கால் மூட்டு பல துண்டுகளாக உடைந்து அறுவை சிகிச்சை செய்து கொண்ட நிலையிலும், 2014-இல் பிப்.9 அன்று 21.1 கி.மீ தூரத்திற்கான மாரத்தான் போட்டியை ஓடத் தொடங்கி, ஆஸ்திரேலியா, கத்தார், இத்தாலி, ஆஸ்ட்ரியா, ஸ்ட்ராவாங்கர், லண்டன், கிரீஸ், சிங்கப்பூர், கம்போடியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து போன்ற 12 வெளிநாடுகள், 20 மெய்நிகர் மாரத்தான்கள் மற்றும் இந்தியாவின் புதுச்சேரி, ஆந்திரா, கருநாடகா, கேரளா, டெல்லி, பீகார், குஜராத், மகாராஷ்ட்ரா, உத்தரபிரதேசம், மேற்கு வங்காளம், தெலுங்கானா, அஸ்ஸாம், பஞ்சாப், அரியானா, மத்தியபிரதேசம், மணிப்பூர், கோவா, ராஜஸ்தான், ஜம்முகாஷ்மீர், ஹிமாச்சல பிரதேசம் 20 மாநிலங்களிலும் மாரத்தான் போட்டிகளில் பங்கேற்று ஓடி வருகிறார்.

நேற்று 18.2.2024 புதுவை மாநிலம் ஆரோவில்லில் 150வது மாரத்தானை (21.1 கி.மீ.) நிறைவு செய்தார்.

பல்வேறு சமூகப் பிரச்சினைகளின் விழிப்புணர்வுக்காக நடத்தப்பட்டுவரும் மாரத்தான் போட்டிகளில் பங்கேற்று, இளைஞர்களின் உடற்பயிற்சிக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தோடு மாரத்தான் போட்டிகளில் 25 முறை 21.1 கி.மீ தூரம் பங்கேற்று ஓடியதற்காக, India Book of Recordsஇல் இடம் பிடித்தார். தொடர்ந்து பல இடங்களில் நடைபெற்ற 21.1 கி.மீ தூரம் மாரத்தான் போட்டிகளில் கலந்து கொண்டு 29 மாரத்தான் போட்டியை ஜூன் 26, 2016 தேதி வரை முடித்து Asia Book of Records லும் இடம் பிடித்துள்ளார்.

50வது மாரத்தான் போட்டி நிறைவு செய்து, ஏப்.3, 2017-இல் புதுடெல்லியில் லண்டனை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் 'வேல்டு ரெக்கார்ட்ஸ் யுனிவர்சிட்டியால்' 'மதிப்புறு முனைவர் பட்டம்' (Honorary Doctorate) வழங்கப்பட்டது. 'வேல்டு ரெக்கார்டு யூனியன்' International Golden Disk Award என்ற விருதினை டெல்லியில் நவ.11,2017 அன்று வழங்கியது. 2018, World Kings Top Records எனும் உலக சாதனைப் புத்தகத்திலும் இடம் பிடித்துள்ளார்.

2017-ஆம் ஆண்டு ஜன.29 அன்று 49வது மாரத்தான் போட்டியை கிரிக்கெட் உலகின் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் கொல்கத்தாவில் தொடங்கி வைத்தார். அம்மாரத்தானில் பங்கேற்ற மா.சுப்பிரமணியன் அவர்களின் மாரத்தான் ஓட்டங்களை வெகுவாகப் பாராட்டினார். 100ஆவது மாரத்தானை2019-ஆம்ஆண்டு ஜனவரி 27 அன்று சென்னையில் நிறைவு செய்தார்.

இம்மாரத்தான் சாதனைகளைப் பாராட்டி திராவிடர் கழகம் சார்பில் 2018-ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆசிரியர் கி.வீரமணி அவர்களால் பெரியார் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டுள்ளது. 2021-ஆம் ஆண்டு கொரோனா காலங்களில் வீட்டின் மொட்டை மாடியில் எட்டு வடிவ ஓடுதளத்தை உருவாக்கி அதில் ஓடி ஆசிய சாதனை படைத்துள்ளார். முத்தமிழறிஞர் கலைஞர் நினைவுநாளில் கலைஞர் நினைவுப் பன்னாட்டு மாரத்தான் போட்டிகளை முன்னெடுத்து, அதில் கடந்தாண்டு 2023 ஆக.18 அன்று கலைஞர் மாரத்தான் போட்டியை சற்றொப்ப 73 ஆயிரம் பேர் பங்கேற்க கின்னஸ் உலக சாதனைப் படைக்க முன்னின்று நடத்தி வெற்றி கண்டார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்! மார்ச் 1 இல் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்கமோதிரம்!

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் நலஉதவிகள் வழங்கல்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம், பிப்.19-

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் மார்ச் 1 அன்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி மற்றும் அறுசுவை உணவு, நலத்திட்ட உதவிகள் வழங்குதல், காஞ்சிபுரம், மதுராந்தகம் அரசு பொது மருத்துவமனையில் மார்ச் 1 அன்று பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிப்பது என்று மாவட்ட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்று மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் வாலாஜாபாத்தில் அறம் வளர்த்த நாயகி திருமண மண்டபத்தில் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் க. செல்வம் எம்.பி. தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., அனைவரையும் வரவேற்று பேசினார்.

சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் டாக்டர்.சுபேர்கான் (காஞ்சிபுரம்), கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் ஆகியோர் ஆலோசனை வழங்கினர்.

மாவட்ட கழக நிர்வாகிகள் டி.வி.கோகுலகண்ணன், சன்பிராண்ட் ஆறுமுகம், கழக மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., மாநில இளைஞரணி துணை செயலாளர் ப.அப்துல் மாலிக், மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்செல்வன், மாநில தொண்டர் அணி ஜி.சுகுமாரன், மாநில வர்தக அணி துணை செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன், காஞ்சிபுரம் மேயர் திருமதி. மகாலட்சுமி யுவராஜ்,



பொதுக்குழு உறுப்பினர்கள் வெளிக்காடு ஏழுமலை, எஸ்.கே.பி.சீனிவாசன், பொன்.சசிக்குமார், எஸ்.உசேன், எஸ்.சிகாமணி, எஸ்.எழிலரசி, மதுராந்தகம் நகர செயலாளர் கே.குமார், வாலாஜாபாத் ஒன்றியக் குழு பெருந்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் பி.சேகர், கெ.ஞானசேகரன், பி.எம்.குமார், கே.எஸ்.ராமசந்திரன், க.குமணன், டி.குமார், பொன்.சிவகுமார், சத்திய சாய், கே.கண்ணன், ஜி.தம்பு, எஸ்.ஏழுமலை, இ.சரவணன், சிற்றரசு, எம்.எஸ்.பாபு, ஏ.சிற்றரசு. காஞ்சிபுரம் மாநகர பகுதி செயலாளர்கள் எஸ்.சந்துரு, கே.திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன், காஞ்சிபுரம் நகர நிர்வாகிகள் எ.எஸ்.முத்துசெல்வம், வ.ஜெகநாதன், நிர்மலா,

பேரூர் செயலாளர்கள் என்.பாண்டியன், என்.எஸ்.பாரிவள்ளல், சுந்தரமூர்த்தி, மோகன்தாஸ், பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி. டபள்யூ.இ.எஸ்.இல்லா மல்லி ஶ்ரீதர், கருங்குழி தசரதன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அ.யுவராஜ், நாத்திகம் நாராஜன், எஸ்.மாலதி, ஏ.நூருல் அமீன், நாகராஜன், வ.மலர் மண்ணன், வ.வெங்கட்ராமன், டி.ஜெய்கணேஷ், திருமதி. கலைச்செல்வி ஜெகநாதன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பெ.மணி, டி.சஞ்சய் காந்தி, ஆண்டோ சிரில் ராஜ், யுவராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தீர்மானங்களை விளக்கி பேசினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளான மார்ச் ஒன்றாம் தேதி அன்று அனைத்து கிளைக் கழகங்களிலும் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி கோலாகலமாக கொண்டாடியும் நலத்திட்ட உதவிகள், அறுசுவை விருந்து அன்னதானம் வழங்கியும், மார்ச் 1 அன்று அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தும், சிறப்பாக கொண்டாடுவது எனவும் தலைவர் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு பிப்ரவரி 17 முதல் 20 பொது கூட்டங்களை சிறப்பாக நடத்தி நலத்திட்ட உதவி வழங்கியும், பொதுமக்கள் மத்தியில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எடுத்துக் கூறியும், பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்திடவும் காஞ்சி தெற்கு மாவட்டக் கழகம் தீர்மானிக்கிறது.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தியும் வெளி நாட்டு சுற்றுப்பயணம் மேற்கொண்டு அந்நிய முதலீடுகளை ஈர்த்தும் தமிழ் நாட்டில் தொழில் வளம் பெருகுவதற்கும் லட்சக்கணக்கில் வேலை வாய்ப்பை உருவாக்கிடும் வகையிலும் அரும்பாடுபடும் நமது முதலமைச்சர் அவர்களுக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் பாராட்டி நன்றி கூறுகிறது.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு பாராட்டு!**

சேலத்தில் கடந்த ஜனவரி 21ல் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டை 6 வட்சத்திற்கும் மேல் இளைஞர்கள் பங்கேற்கும் வகையில் பிரம்மாண்டமாக நடத்தி காட்டிய இணைஞரணி செயலாளர், மற்றும் ஆறாவது கேலோ இந்திய விளையாட்டில் தமிழ்நாட்டில் நடத்தி அகில இந்திய அளவில் 98 பதக்கங்களை வென்று இரண்டாவது இடம் பிடிக்க செய்த நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மண்டலம் 1ல் பல்லாவரம் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.12.50 லட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக்கடை, ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் காரிய மண்டபம், ரூ.3.80 லட்சம் மதிப்பீட்டில் போலீஸ் பூத் ஆகிய பணிகளுக்கு இ.கருணாநிதி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார். உடன் மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி, உதவி செயற்பொறியாளர்,உதவி பொறியாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள்,பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், பொது மக்கள் உடன் இருந்தனர்.

## சென்னை - கிண்டி - முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அலுவலகத்தில்

# வனத்துறையில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களின் கூட்டம்!

## வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, பிப். 19-

வனத்துறை அமைச்சர் மருத்துவர். மா. மதிவேந்தன், தலைமையில் வனத்துறையில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களின் கூட்டம் கிண்டி முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது.

அதன் விபரம் வருமாறு:-

வனத்துறையில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களின் கூட்டம் சென்னை வேளச்சேரி(கிண்டி) வனத்துறை தலைமை அலுவலகத்தில் 14.02.2024 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் கலந்து கொண்டு, வனத்துறையில் நடைபெற்றுவரும் பணிகளை தொய்வின்றி விரைவாகவும், குறித்த நேரத்திலும் முடித்திட ஒப்பந்ததாரர்களைக் கேட்டுக்கொண்டார்.

மேலும், ஒப்பந்ததாரர்கள் தெரிவித்த கோரிக்கைகளின் மீது வனத்துறையின் உயர் அலுவலர்களுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் வனத்துறைத் தலைவர் சுப்ரத் மஹபத்ர முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் சீனிவாச ஆர். ரெட்டி, கூடுதல் தலைமை வனப்பாதுகாவலர் (வன உயிரினம்) நாகநாதன் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## தரமணி வி.சண்முகநாதன் தலைமை! ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா - வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் - சு.சேகர் முன்னிலை!

# வேளச்சேரி மேற்குப் பகுதி தரமணியில் - இளைஞர் அணி மாநாட்டுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - சைதை சாதிக் - தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி. சிறப்புரை!

சென்னை, பிப்.19

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் 2 வது தி.மு.க. மாநில இளைஞர் அணி மாநாடு தீர்மான விளக்க பொதுக்கூட்டம் இன்று (19.2.2024 திங்கட்கிழமை) மாலை 6 மணி அளவில், தரமணி 100 அடி சாலை பகுதியில் வேளச்சேரி மேற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் தரமணி வி.சண்முகநாதன் தலைமையில் நடைபெறுகிறது.

வட்டக் கழகச் செயலாளர்கள் த.பார்த்திபன், தே.கோபி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர், வேளச்சேரி பி.மணிமாறன், வே.ஆனந்தம், மகேஸ்வரி முருகவேல், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.விநாயகமூர்த்தி, ஜெ.இ.பாண்டியன், சங்கர் கணேஷ், ஆர்.கிருஷ்ண குமார், கா.வீ.தியாகராஜன், இராமாபுரம் செ.ரவி, கோட்டூர் பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன், தலைமை கழக பேச்சாளர் சைதை சாதிக், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் சிறப்புரையாற்றி சிறப்பிக்கின்றனர்.

மேலும் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ் காரம்பாக்கம் க.கணபதி, ஜெ.எம்.எச்.அசன் மௌனாலானா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பகுதி கழகச் செயலாளர் துரைகபிலன், பி.பாலசுந்தரம், பி.ஜெ.பாஸ்கர், எஸ்.குணசேகரன், த.விஸ்வநாதன், மு.மனோகரன், வாசுகி பாண்டியன், வட்ட கழகச் செயலாளர்கள் பொ.த.மதிவாணன், க.பாரதிதாசன், ஜி.பி.எஸ்.பாலா சதீஷ், கே.என்.தாமோதரன், எஸ்.முருகவேல், வி.சக்திவேல், வழக்கறிஞர் த.ஜெகதீசன், கழக ரமேஷ், எச்.வெங்கடேசன், அடையார் சி.சுரேஷ், சி.பரிமேலழகன், நா.மணிகண்டன், ஆ.மகாதேவன், ஆர்.பழனிவேல், போட்டோ பாஸ்கர், டி.எசேக்கியல், பகுதி கழக நிர்வாகிகள் சி.பழனி, எம்.ஏ.சங்கர், சே.மைதிலி, ந.டில்லிகுமார், பொ.த.எழில்வாணன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஆர்.கே.சந்திரேஷ், பெருங்குடி மா.ஶ்ரீகாந்த், அயப்பாக்கம் வினோத், எம்.பி.நவராஜ் மற்றும் எஸ்.விஷ்வா, புருஷோத்தமன், வெங்கடேசன், கோபாலகிருஷ்ணன், ராகுல்குமார், நாகராஜன், தனசேகரன் வினோத் மற்றும் இளைஞர் அணியினர், கழகத்தினர் பலர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

## பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில்

# நியாய விலைக் கடை - காரிய மண்டபம் - போலீஸ் பூத் பணிகளுக்கு அடிக்கல்!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. பணிகளை துவக்கி வைத்தார்! மண்டலத் தலைவர் வே.கருணாநிதி பங்கேற்பு!

பல்லாவரம், பிப்.19-

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 உட்பட்ட பகுதிகளில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 12.50 லட்சம் மதிப்பீட்டில் நியாய விலை கடை ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் காரிய மண்டபம் ரூபாய் 3.80 லட்சம் மதிப்பீட்டில் போலீஸ் பூத் ஆகிய பணிகளுக்கு மண்டல தலைவர் வே. கருணாநிதி தலைமையில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்.

அப்போது அவர் கூறியதாவது :-

தொகுதி மேம்பாட்டு மீதி 3 கோடி ரூபாயில் மாண்புமிகு நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தொகுதி முழுவதும் பல்வேறு மக்கள் நல பணிகளை மேற்கொண்டு வருகிறேன் இந்தாண்டும் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பள்ளிகளுக்கு ஸ்மார்ட் வகுப்புகள் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள் வாடகை கட்டடங்களில் இயங்கும் நியாய விலை கடைகள் (ரேஷன் கடை) சொந்தமாக கட்டிடம் கட்டிடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்துள்ளேன். பல இடங்களில் பொதுமக்கள் இறந்தவர்களுக்கு ஈமச்சடங்கு செய்ய போதிய இட வசதி இல்லை என்று கூறியதால் அதற்காக காரியமண்டபம் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்துள்ளேன்.

பொதுமக்கள் மாமன்ற உறுப்பினர்கள் இருந்து வரும் கோரிக்கைகளை ஏற்று தொகுதி மேம்பாட்டு நிதிந்த பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறேன் மேலும் தமிழக அரசின் பல்வேறு நல திட்டங்களை மண்டலம் ஒன்னு பகுதிக்கு நிறைவேற்றுவேன் என்று உங்கள் முன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்.

அப்பொழுது மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் உதவி பொறியாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் ஒப்பந்ததாரர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் தொகுதி வட்டம் 38 பட்டேல் நகர் 1வது தெரு முதல் 4 தெருக்கள் சஞ்சீவ் காந்தி நகர் 1வது தெரு முதல் 6வது தெரு வரை அன்னை சந்தியா நகர் பிரதான சாலை 38வது வட்ட மாமன்ற உறுப்பினர் 4வது மண்டலக் குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் ஆய்வு செய்து மாநகராட்சி 38வது வட்ட பொறியாளர் அகமது அஸ்தக்,குடிநீர் வாரிய பொறியாளர் பிரசன்னா வெங்கடேஷ்,மின்சார வாரிய பொறியாளர் ஜெயராமன், துப்புரவு ஆய்வாளர் திருமுருகன், எல்.ஐ.சுகாதாரத்துறை ஆய்வாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் அலுவலர்களுடன் வீடு வீடாகச் சென்று பொது மக்களின் குறையை கேட்டு உடனடியாக சரி செய்து தருமாறு அதிகாரியிடம் கேட்டுக்கொண்டார். உடன் வட்ட செயலாளர் எஸ். எல்.சுந்தர், இளைஞர் அணி எஸ். கிருஷ்ணன், ஆர்.சுந்தர்ராஜ், எஸ்.ராஜா, ப.தாமோதரன்,ஏ.வீரா, அணில்,எஸ்.கமருதீன, பாக முகவர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பெரும் பணக்காரர்களுக்கு பல லட்சம் கோடி ரூபாய் கடனை தள்ளுபடி செய்யும் ஒன்றிய அரசு மெட்ரோ ரயில் திட்டத்திற்கு நிதி ஒதுக்க மறுப்பது ஏன்?

# தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பா.ஜ.க. அரசுக்கு வரும் தேர்தலில் தக்க பாடம் புகட்டுவீர்!

## திருச்சியில் “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்” பொதுக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. வேண்டுகோள்!

திருச்சி, பிப்.19 -

**“பெரும் பணக்காரர்களுக்கு பல லட்சம் கோடி ரூபாய் கடனை தள்ளுபடி செய்யும் ஒன்றிய அரசு சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு நிதி ஒதுக்க மறுப்பது ஏன்? இப்படி தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தக்க பாடம் புகட்டுவீர்” என்று கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு அவர்கள் திருச்சியில் நடைபெற்ற “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்” பொதுக்கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்தார்.**

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-




திருச்சி பாராளுமன்றத் தொகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உரிமைமீட்பு ஸ்டாலினின் குரல் எனும் இந்த கொள்கை முழக்கக் கூட்டம் தமிழகத்தில் உள்ள 39 நாடாளுமன்ற தொகுதிகளிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படிபட்ட நிகழ்ச்சிகளில் ஒன்றாக நம்முடைய திருச்சியில் இந்த நிகழ்ச்சி பிரமாண்ட அளவில் நடைபெற்று கொண்டிருக்கிறது.

இந்த காட்சியைக் காணுகின்ற நேரத்தில் 1967 ம் 1971 ம் என் கண் முன்னால் வந்து கொண்டிருக்கிறது. திருச்சி மாநகரில் உள்ள எல்லா சாலைகளிலும் இன்றைக்கு கழகத் தோழர்களும் இளைஞர் அணி தம்பிமார்களும் கழக முன்னோடிகளும், மகளிர் அணி சகோதரிகளும் வந்து கொண்டிருப்பதை நான் பார்த்து கொண்டு வந்தேன்.

1967 லிலும் 1971 லும் நான் கண்ட காட்சியைப் போல் இப்போது திருச்சியில் கண்கொள்ளா காட்சிகளை கண்டேன் மகிழ்ந்தேன்.

### மாநாடு போல் திரண்ட மக்கள்!

இந்தத் தொகுதியை ஏறக்குறைய எல்லா கட்சிகளும் கேட்கின்றன. எல்லா கட்சிகளும் வருகின்ற தேர்தலை முன்னிட்டு பேச்சுவார்த்தைக்கு வரும் போது அவர்கள் கட்சிக்கு திருச்சியைக் கேட்கிறார்கள். அதற்கு காரணம் இங்குள்ள கழக நிர்வாகிகளின் ஒன்றுமையான உழைப்புதான். இங்கு யாரை பார்த்தாலும் ஆயிரம் வாட்ஸ் பல்பு எரிவது போல் முகம் பிரகாசமாக உள்ளது. அந்த அளவுக்கு மிகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற கழக நிர்வாகிகள் இளைஞர் அணி சகோதரர்கள் மகளிரணி சகோதரிகள் இப்படி அனைவரும் ஒருசேர ஒற்றுமையுடன் பணியாற்றும் பெருமைக்கு சொந்தக்காரான என் அன்பிற்குரிய நண்பர் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்களால் ஒரு பெரிய மாநாடு போல இந்த கூட்டம் நடத்தப்படுவது பெருமையானதாகும்.

என்னுடைய அன்பு மாப்பிள்ளை அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் இந்த இருவரும் தலைவரின் படைத் தளபதிகளாக இருந்து மாவட்டக் கழகத்தையும் இந்த மாநாட்டையும் மிகச் சிறப்பாக நடந்துகிறார்கள் என்றால் அதற்கு முக்கிய காரணம் தலைவர் தளபதி அவர்கள்தான். இரண்டு மாவட்டக் கழகங்களையும் வளர்ச்சியை நோக்கி வழிநடத்தும் நேரத்தில் அவர்கள் எடுக்கும் முயற்சியால் கழகம் முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லப்படும் என்பதை இந்தக் கூட்டத்தைப் பார்க்கும் போது நான் தெரிந்து கொண்டேன்.

### அன்பில், மன்னை ஆற்றிய பணிகள்!

சோழ மண்டலத்திற்கு பல்வேறு சிறப்புகள் உண்டு

தண்ணீரும் காவேரியே !
தார்வேந்தன் சோழனே !
மண்ணாவதும் சோழமண்டலமே !

என்று பாடப்பட்டது சோழமண்டலம்; மாமன்னர்கள் ராஜராஜன், ராஜேந்திரன், கரிகாலன் ஆகியோரின் வழித்தோன்றல்களாக இந்த சோழ மண்டல கழகத்தை கட்டி ஆண்ட சின்ன மருது பெரிய மருதுகளான தலைவர் கலைஞர் அவர்களின் போர்ப்படைத் தளபதிகளான அன்பில், மன்னை வாழ்ந்த பூமி.

இப்பகுதிக்கு வருகின்ற நேரத்தில் யெல்லாம் ஒருபக்கம் அன்பிலும், மன்னையும் ஆற்றிய பணிகள், அவர்கள் கண்ட களங்கள் என் கண்முன்னே வந்து போகும். அப்பேர்ப்பட்ட இந்த மாவட்டத்தில் மிகச் சிறந்த மாமன்னர்கள் ஆண்ட சோழ மண்டலமான திருச்சியில் நான் பேசுவது பெருமையாகும்.

### சோழ மண்டலத்திற்கு மேலும் பல பெருமைகள் உண்டு.

இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு நிதி திரட்டுவதற்காக காந்தியடியகள் லால்குடியில் தங்கினார். தகவல் அறிந்த ஏராளமான பொதுமக்கள் தாங்களாக முன்வந்து காந்தியடியகளிடம் விடுதலை போராட்ட நிதி வழங்கினார்கள்.

அப்போது இடுப்பில் கைக்குழந்தையை தூக்கிக்கொண்டு ஒரு பெண் வந்து காந்தியடிகளைப் பார்த்து தன் கைக்குழந்தைக்கு பால் வாங்க வைத்திருந்த அரையணாவை காந்தியடிகளிடம் கொடுத்தார். அதைப் பார்த்து காந்தியடிகள் குழந்தைக்குப் பால் வாங்க வைத்திருந்த அரையணாவைக் கொடுக்கிறிர்களே நாளை குழந்தைக்கு எப்படி பால் வாங்குவீர்கள் என கேட்டார். அதற்கு அந்தத் தாய் எங்காவது கடன் வாங்கி சமாளித்து நான் நாளை பால் வாங்கிக் கொடுத்து விடுவேன். அனால் நாட்டிற்காக நான் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்ற வேண்டும் இப்போது விட்டால் நீங்கள் சென்று விடுவீர்கள் நான் கடமையை தவறியவளாகவிடுவேன் என்று கூறி காந்தியடிகளிடம் காலில் விழுந்து அந்த நிதியை சுகந்திரப் போராட்டத்திற்காக தருகிறேன் பெற்றுக்கொள்ளுங்கள் எனக் கூறி காந்தியடிகளிடம் தான் கொண்டு வந்திருந்த சிறு நிதியை கொடுத்தார்.

மறுநாள் திருச்சியில் நடந்த நிகழ்ச்சியில் உரை ஆற்றிய காந்தியடியகள் இந்தியா முழுவதும் நான் நிதி பெற்று வருகிறேன். ஆனால் லால்குடியைச் சேர்ந்த அந்த பெண் கொடுத்த அரையணா நிதி எனக்கு பெரிதாக தெரிகிறது. அந்த வரலாற்று சிறப்பு மிக்க அந்த அரையணா நானே வைத்துக் கொள்கிறேன் என பொதுமக்களிடம் அனுமதி கேட்டார். அத்தகு வரலாற்றுக்கு சொந்தமான ஊர் இந்த திருச்சி மாவட்டம் அவரைப்போல் ஏராளமான தேசப்பற்று மிக்க ஆண்களும், பெண்களும், வாழ்ந்த பகுதி நமது சோழமண்டலம்.

### வீர தியாகிகள் வாழ்ந்த பூமி!

இன்னொரு நிகழ்ச்சியும் என் நினைவிற்கு வருகின்றது

ஒரு நாள் முதலமைச்சர் பக்தவச்சலம் ரயிலில் வந்து இறங்கினர் அப்போது அங்கு நின்றிருந்த கீழப்பளூவூர் சின்னசாமி அய்யா முதல்வரே இந்தியை தமிழ்நாட்டில் நுழையவிடாதிர்கள். அந்த ஆபத்திலிருந்து தமிழ் நாட்டை காப்பாற்றுங்கள், தமிழ் வாழ்க இந்தி ஒழிக என்று ஓங்கி குரல் எழுப்பி முழங்கினார். காவல் துறையினர் சின்ன சாமியை கைது செய்து சிறையில் வைத்தனர். 15 நாள் சிறையில் இருந்தார். ரயில் ஏறி திருச்சி வந்தார். மனம் நொந்து போன சின்னச்சாமி ரயிலடியில் பக்கத்தில் இருந்த பெட்ரோல் பங்கில் 5 லிட்டர் பெட்ரோல் வாங்கினான். தான் போட்டுருந்த சட்டைக்குமேல் இரண்டு சட்டைகளை போட்டுக் கொண்டான். கட்டியிருந்த வேஷ்டிக்கு மேல் இரண்டு வேஷ்டிகளை கட்டிக் கொண்டு பெட்ரோல் முழுவதையும் உடல் மீதும் ஆடைகள் மீதும் ஊற்றி நனைந்துக் கொண்டு தீ வைத்து எரித்துக் கொண்ட பொது தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! என உயிர் போகும் வரை முழக்கமிட்டு உயிர்த் தியாகம் செய்தான். நாட்டுக்காக வாழ்ந்தவர்களைப் போல் மொழிக்காக உயிர் தியாகம் செய்த வீர தியாகிகள் வாழ்ந்த பூமி இந்த சோழ மண்டலம்.

### மோடியின் வாக்குறுதி என்ன ஆயிற்று!

2014 ஆம் ஆண்டு நடந்த தேர்தலை ஒட்டி ஆட்சியைத் தாருங்கள் நான் வெளிநாடுகளில் வைக்கப்பட்டுள்ள கருப்புப் பணத்தை கொண்டுவந்து ஒவ்வொரு குடும்பத்தற்கும் வங்கி கணக்கில் ரூ.15 லட்சம் செலுத்துகிறேன் என்று நமது பிரதமர் மோடி வாக்குறுதி கொடுத்தார். கொடுத்த வாக்குறுதி என்ன ஆச்சு?

ஆண்டுதோறும் 2 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தருவேன் என்று நமது பிரதமர் மோடி கூறினார். விலைவாசியைக் கட்டுப்படுத்துவேன் என்றும் உத்தரவாதம் கொடுத்தார். அந்த வாக்குறுதி என்னாச்சு.

குறிப்பாக 35 ரூபாய்க்கு ஒரு லிட்டர் பெட்ரோல் தருவேன் என்று நமது பிரதமர் மோடி வாக்குறுதி தந்தார். 10 ஆண்டுகளில் பெட்ரோல் மீதான வரி மட்டும் ரூ.35,83,561 கோடி ஆகும். தான் தந்த வாக்குறுதியை மோடி நிறைவேற்றவில்லை. பெட்ரோல் விலை ரூ.102 ஆனது டிசல் விலை ரூ.95 ஆனது.

ஆனால் நமது தலைவர் தளபதி அவர்கள் தேர்தலில் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்று வருகிறார். மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணம், நகைக்கடன் ரத்து போன்ற 90% வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டார்.

விவசாய விஞ்ஞானி MS சுவாமிநாதன் 2006 ஆம் ஆண்டு சமர்ப்பித்த அறிக்கையில் விவசாயிகளின் விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதர விலையை விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. இந்த அறிக்கை பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் 2007 ஆம் ஆண்டு தேசிய வளர்ச்சி குழுவில் (National Development Council) வைத்து அனைத்து மாநில முதலமைச்சர்கள் கொண்டு குழுவை குஜராத் முதலமைச்சர் மோடி தலைமையில் அமைத்து பொறுப்பை ஒப்படைத்து அறிக்கையை ஆய்வு செய்ய வைத்தார்.

விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதார விலை தருவதற்கு சட்டத்தை இயற்றும் நேரம் வந்துவிட்டது சட்டமியற்றுங்கள் என்று கூறிக்கொண்டே பிரதமர் மன்மோகன் சிங்கிடம் மோடி தனது அறிக்கையை சமர்ப்பித்தார்.

2013 குறைந்தபட்ச ஆதார விலை சட்டத்தை இயற்றுவதற்கு முன்பு உணவுப் பாதுகாப்புச் சட்டம், நிலம் கையகப்படுத்தும் சட்டம், ஆகிய இரண்டு சட்டங்களை நிறைவேற்றியாக வேண்டும். இந்த இரண்டு சட்டங்களையும் மன்மோகன் சிங் அரசு நிறைவேற்றியது.

அடுத்த MSP சட்டத்தை இயற்றுவதற்கு முன் தேர்தல் வந்துவிட்டது 2014 ல் மோடி ஆட்சியில் வந்து விட்டார் அவர் தலைமையிலான கமிட்டி கொடுத்த பரிந்துரையை மோடி அரசு கடந்த பத்தாண்டுகளில் நிறைவேற்ற வில்லை.

### விவசாயிகளுக்கு விரோதமான மோடி ஆட்சி!

விவசாய விளை பொருட்களுக்கான ஆதார விலைச் சட்டத்தை இயற்றுவதற்கு பதிலாக விவசாயிகளை மிகவும் பாதிக்கும் 3 கறுப்பு வேளாண் சட்டங்களை மோடி அரசு இயற்றியதும் அச்சட்டங்களை திரும்ப பெற கோரி பஞ்சாப் மற்றும் பல மாநிலங்கலிருந்து ஆயிரக்கணக்கான விவசாயிகள் டெல்லியில் 300 நாட்கள் போராடினார் கடுமையான மழையிலும் குளிரிலும் போராடினார்கள். 700 பேர் மரணமுற்றனர். ஏராளமானோர் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகினர். மத்திய அமைச்சர் அஜய் மிஸ்ராவின் மகன் போராடும் விவசாயிகள் மீது தனது காரை ஏற்றி கொல்ல முயற்சி செய்தார். எதிர்ப்பும் போராட்டமும் வலுப்பெற்று மோடி அரசு 3 கறுப்பு விவசாய சட்டங்களை திரும்பப் பெற்றது.

விவசாய விளை பொருட்களுக்கான குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயம் சட்ட மசோதாவை (MSP) இன்று வரை மோடி அரசு தாக்கல் செய்யவே இல்லை.

இந்திய பிரதமர் மதுரையில் AIIMS மருத்துவமனை கட்டுவதற்காக ஜனவரி 2019 ல் தேர்தலுக்கு முன் அடிக்கல் நாட்டினார். இந்தியாவில் வடமாநிலங்களில் அதே நேரத்தில் திட்டமிடப்பட்ட எய்ம்ஸ் மருத்துவமனைகள் கட்டப்பட்டுவிட்டன. ஆனால் மதுரையில் மட்டும் ஒன்றிய அரசு எய்ம்ஸ் மருத்துவமனை பணிகளை ஆரம்பம் செய்திடவில்லை. எயம்ல் மருத்துவக்கல்லூரிகளில் 50 மாணவர்கள் ராமநாதபும் கல்லூரியில் தங்கிப் படிக்கின்றனர். அதனுடைய தலைமை அலுவலகம் புதுச்சேரியில் செயல்ப்பட்டுவருகிறது. ஆனால் BJP கட்சியின் தேசிய தலைவர் நட்டா அவர்கள் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை 90% முடிந்துவிட்டது என கூறினார். தவறான வாக்குறுதிகளை தந்தவர்களுக்கு தேர்தலில் சரியான பாடம் கற்பிக்கப்படவேண்டும். இந்தத் திட்டத்திற்கு தேவையான நிதியை 1800 கோடியை கடனாக Jaica நிறுவனத்திடம் கேட்டுள்ளோம். தந்தவுடன் பணிகள் தொடங்கப்படும் என்று 5 ஆண்டுகளாக கூறுகின்றனர். தனியார் கம்பெனிகளுக்கு பல லட்சம் கோடி கடன் தள்ளுபடி செய்யும் அரசிடம் 1800 கோடி இல்லையா?

சென்னையில் மூன்று வழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டங்களை செயல்படுத்த திட்டம் ஒன்றிய அரசிற்கு முறைப்படி சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான நிதி கோரப்பட்டது. பிரதமர் அவர்கள் சந்தித்து எடுத்துரைத்தும் பயனில்லை மெட்ரோ ரயில் திட்டங்களை மத்திய அரசு உதவிட முன்வரவில்லை. இது குறித்து நாடாளுமன்றத்திலும் குரல் எழுப்பினோம் எந்த பயனும் இல்லை.

தமிழக முதலைமைச்சர் அன்புத் தலைவர் தளபதி அவர்கள் டெல்லி வந்து பிரதமரை சந்தித்து மெட்ரோ ரயில் திட்டத்தை நிறைவேற்றி தர கோரினார். எனினும் திட்டம் நடைமுறைபடுத்தப்படவில்லை.

மற்ற மாநிலங்களுக்கெல்லாம் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு நிதி வழங்குகிறது. ஆனால் தமிழகத்தை மட்டும் வஞ்சிக்கிறது. தமிழகத்தை வஞ்சிக்கின்ற ஒன்றிய அரசுக்கு இத்தேர்தலில் சரியான பாடம் புகட்ட வேண்டும்.

பெரிய பெரிய பணக்காரர்களிடம் பல ஆயிரம் கோடி கடனை வசூலிக்காமல் தள்ளுபடி செய்யும் ஒன்றிய அரசு தமிழக மெட்ரோ திட்டத்திற்கு நிதியை விடுவிக்காமல் இருப்பது கண்டனத்துக்கு உரியதாகும்.

சென்னையைச் சுற்றி 40 சென்டி மீட்டர் அளவுக்கு கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத பெருமழை பெய்தது. அதை தொடர்ந்து தூத்துக்குடி பகுதியில் 150 சென்டிமீட்டர்க்கு கனமழை பெய்து வெள்ள பாதிப்புகள் மிக அதிகமானதால் படகுகளில் சென்று மக்களை மீட்டோம். 1 கோடி மக்கள் நிவராண முகாமில் தங்க வைக்கப்பட்டனர். அரசு உரிய உதவியை செய்தது. பாதிக்கபட்ட அனைவருக்கும் ரூ.6000 நிதி உதவி அளித்தது.

### வெள்ள நிவாரண நிதி தர மறுப்பதா?

தேசிய பேரிடர் நிதியிலிருந்து தமிழகத்திற்கு வெள்ள நிவாரணம் வழங்க கோரி தலைவர் தளபதி எழுதிய கடிதத்தை கொடுத்து 2023 டிசம்பர் 7ம் நாள் பிரதமர் அவர்களை நான் நேரில் சந்தித்து தமிழகத்திற்கு வெள்ள நிவராண வழங்குமாறு கோரினேன்.

தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதலைமைச்சர் அவர்கள் டெல்லியில் பிரதமர் அவர்களை 19.12.2023 அன்று நேரில் சந்தித்து வெள்ள நிவராண தொகையாக ரூ.37 ஆயிரம் கோடி நிதி வழங்க கோரினார்.

2024 ஜனவரி 13 அன்று அனைத்துக் கட்சிகளை சார்ந்த தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா அவர்களை சந்தித்து வெள்ள நிவராண ரூ37 ஆயிரம் கோடி கோரினோம். அதற்கு ஜனவரி 27ம் தேதிக்குள் தருவதாக வாக்குறுதி அளித்தார். ஆனால் இதுவரை எந்த தகவலும் இல்லை.

### சேது சமுத்திரத் திட்டத்தை முடக்கிய பா.ஜ.க. அரசு!

தமிழர்களின் 170 ஆண்டு காலமாக அண்ணாவும், காமராசரும், கலைஞரும் கோரிய கனவு திட்டமான சேது திட்டத்தை நிறைவேற்ற முயன்று பணிகள் நடந்து 23 கிலோமீட்டர் பணிகள் மட்டும் எஞ்சியிருந்த நிலையில் ஜெயலலிதாவும், பாஜகவும் வழக்கு தொடுத்து திட்டம் கிடப்பில் போடப்பட்டது. ஆனால் சமீபத்தில் உச்சநீதிமன்றம் சேதுபாலம் மனிதனால் உருவாக்கப்பட்ட பாலம் இல்லை என்று தீர்ப்பளித்துள்ளது. இப்போது அந்த திட்டம் நிறைவேற்ற பாஜக ஏன் முன்வரவில்லை. தமிழர்களை பாஜக அரசு வஞ்சிகிறது அல்லவா?

பிரதமர் வாஜ்பாய் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய பாஜக அமைச்சர்கள் கோயல், சத்ருகன் சின்ஹா ஆகியோரும் இத்திட்டத்திற்கு ஆதரவாக கையொப்பமிட்டுள்ளனர்.

பாராளுமன்றத்தில் நான் பேசும் போது தேவையில்லாமல் அமைச்சர் முருகன் அடிக்கடி குறுக்கிட்டார். நான் அவருக்கு பதில் அளிக்கும் போது தேவையில்லாமல் சம்பந்தப்படாத அமைச்சர் குறுக்கிடக்கூடாது என எச்சரித்தேன்.அதற்கு ஜாதி சாயம் பூசி பாஜகவினர் கூக்குரலிட்டனர். இந்த சமயத்தில் நான் ஒன்றை குறிப்பிட்டாக வேண்டும். எனது துறையில் பதவி உயர்வுக்கு பரிந்துரைக்கப்பட்ட 3 பேரில் ஒருவரை தேர்தெடுக்க வேண்டிய நிலையில் தலித் சமுகத்தைச் சேர்ந்த பசால் எனும் பெயர் கொண்ட மத்திய அரசு அதிகாரிக்கு எனது பரிந்துரையால் Joint Secretary பதவி உயர்வு வழகப்பட்டது. இதனை பிரதமரும் வரவேற்றார் பாராட்டினார். சமூகநீதியை கடைபிடிக்கும் இயக்கம் திமுக பெட்ரோலியத் துறையின் அமைச்சராக இருந்த போது பெண்களுக்கு 30 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. தலித்துகளுக்கு தனியாக இடஒதுக்கீடு வழங்கப்பாடுபட்ட இயக்கம் திமுக. அதற்கு அனைத்து மதத்தினரும் அனைத்து சாதியினரும் சமம். என்னையோ எனது இயக்கத்தையோ ஜாதி சாயம் பூசி கொச்சைபடுத்த முடியாது.

தமிழ்நாடு, தெலுங்கான, ஆந்திரா, கேரளா, கர்நாடக GST மற்றும் நேரடி வரிகள் மூலம் ஒன்றிய அரசுக்கு தந்தது ரூ 22,26,983 கோடி. 5 மாநிலங்களுக்கும் ஒன்றிய அரசு விடுவித்தது ரூ .6,42,295 கோடி. அனால் உத்திரபிரதேசம் என்ற ஒரு மாநிலத்துக்கு கொடுத்தது மட்டும் ரூ. 6,91,375 கோடி.

### 5 ஆண்டுகளில் தமிழ்நாடுக்கு தந்தது

| | |
|---|---|
| GST வருவாய் | 4,03,983 கோடி |
| நேரடி வருவாய் | 4,00,672 கோடி |
| மொத்தம் | 8,04,655 |

### 5 ஆண்டுகளில் மத்திய வரிகள் பங்கீடு

| | |
|---|---|
| தமிழ்நாடு | 26 பைசா |
| கர்நாடக | 16 பைசா |
| தெலுங்கான | 40 பைசா |
| கேரளா | 62 பைசா |
| மத்திய பிரதேஷ் | 1 ரூபாய் 70 பைசா |
| உத்திரபிரதேசம் | 2 ரூபாய் 2 பைசா |
| ராஜஸ்தான் | 1 ரூபாய் 14 பைசா |

### ஒட்டு மொத்த பயனாளிகள்

| | |
|---|---|
| உரிமைத் தொகை | - 1,15,00,000 |
| பஸ் பயணம் (தினமும்) | 40,00,000 |
| காலை சிற்றுண்டி | 17,00,000 |
| புதுமைப் பெண் திட்டம் | 4,81,075 |
| இலவச மின் இணைப்பு | 1,65,000 |
| நான் முதல்வன் திட்டம் | 28,00,000 |
| மக்களை தேடி மருத்துவம் | 1,70,00,000 |
| மாற்று திரனாளிகள் | 10,00,000 |
| நகைக் கடன் தள்ளுபடி | 13,12,000 |
| கூட்டுறவு கடன் தள்ளுபடி | 1,00,000 |
| சுயநிதி உதவிக்குழு | 1,03,376 |
| மக்களுடன் முதல்வர் | 3,40,000 |
| வேளாண் வளர்ச்சி திட்டம் | 42,33,000 |
| இல்லம் தேடி கல்வி | 34,00,000 |
| மொத்தம் | 4,81,34,451 பயனாளிகள் |

### பொலிட் பீரோவில் குருசேவ் உரை!

தமிழகத்தில் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 6 கோடி 20 லட்சம் பேர். கிட்டத்தட்ட 77 சதவீதம் பேர் தமிழ்நாட்டு அரசின் திட்டங்களின் பயனாளிகளாக தமிழ்நாட்டு அரசின் திட்டங்களால் பயன்பெற்றோர் தளபதிக்கு வக்களிக்கமாட்டர்களா?

ரஷ்யாவின் அதிபராக இருந்த ஜோசப் ஸ்டாலின் அதிபராக பொறுப்பேற்ற பொது ரஷ்யாவின் பொலிட் பீரோவில் குருசேவ் (துணை அதிபர்) உரை:

ஜோசப் ஸ்டாலின் நமது நம்பிக்கை
ஜோசப் ஸ்டாலின் நமது விருப்பம்
ஜோசப் ஸ்டாலின் நமது உறுதி
ஜோசப் ஸ்டாலின் நமது வெற்றி
ஜோசப் ஸ்டாலின் நமது எதிர்காலம்

என்று கூறினார்

இப்போது நாம் எல்லாம் சேர்ந்து சொல்ல வேண்டிய முழக்கம்,

**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் நமது நம்பிக்கை**
**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் நமது விருப்பம்**
**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் நமது உறுதி**
**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் நமது எதிர்காலம்**
**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் நமது வெற்றி - என்போம்.**

இவ்வாறு கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. உரையாற்றினார்.




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 2014ஆம் ஆண்டு பிப்.9 அன்று புதுச்சேரி ஆரோவில்லில் இளைஞர்களின் உடற்பயிற்சி விழிப்புணர்வுக்காக மாரத்தான் போட்டிகளில் ஓடத் தொடங்கி நேற்று (18–02– 2024) அதே புதுச்சேரி ஆரோவில்லில் தமது 150வது மாரத்தானை நிறைவு செய்தார். இம்மாரத்தானில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.



செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் உயர்கல்வி நிறுவனத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைத்து, வேலைநாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், மண்டல குழுத் தலைவர் ஜோசப் அண்ணாதுரை, பகுதிச் செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட், அரசு அலுவலர்கள், மற்றும் இளைஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### பெரும்பான்மை, சிறுபான்மை அனைவருக்கும் எதிரான

# பா.ஜ.க. ஆட்சியை ‘இந்தியா’ கூட்டணி தூக்கி எறியும்!

## நெல்லையில் “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்” பொதுக்கூட்டத்தில் - கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**நெல்லை, பிப்.19-**

**“பெரும்பான்மை, சிறுபான்மை அனைவருக்கும் எதிரான பா.ஜ.க. ஆட்சியை ‘இந்தியா’ கூட்டணி தூக்கி எறியும்” என்று கனிமொழி கருணாநிதி எம்.பி. நெல்லையில் நடைபெற்ற “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்” என்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போது கூறினார்.**

2024 மக்களவைத் தேர்தலையொட்டி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் “உரிமைகளை மீட்க ஸ்டாலின் குரல் பாசிசம் வீழட்டும், இந்தியா வெல்லட்டும்” என்ற தலைப்பில் 39 மக்களவைத் தொகுதிகளிலும் பிரசார பொதுக்கூட்டங்கள் நடத்த வேண்டும் என்ற கழகத் தலைவரும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, திருநெல்வேலி மக்களவைத் தொகுதிக்கான பிரச்சாரக் கூட்டம், பிப்ரவரி 16 ஆம் தேதி வெள்ளிக்கிழமை , திருநெல்வேலி பாளையங்கோட்டையில் உள்ள பெல் மைதானத்தில் நடைபெற்றது.

இதில், கலந்துகொண்டு தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

“ஒன்றிய பா.ஜ.க. அரசின் கொடுமைகளுக்கு எதிராக எழுகிற முதல் குரல் நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களின் குரலாகத்தான் இருக்கிறது. மத்திய அரசைச் சேர்ந்தவர்கள் எந்த சந்தர்ப்பத்தையும் விட்டுவிடாமல், அது ஒரு மசோதாவை கொண்டு வருவதாக இருக்கட்டும், ஒரு திட்டத்தைக் கொண்டு வருவதாக இருக்கட்டும், அதில் மாநில உரிமைகளை மாநில அடையாளங்களை அழிக்கக் கூடிய செயலை பின்னணியில் வைத்துதான் செய்கிறார்கள்.

**மாநில உரிமைப் பறிப்பே!**

ஒரு மசோதாவை நாடாளுமன்றத்தில் கொண்டு வருகிறார்கள் என்றால் அதை முழுமையாக படித்துப் பார்த்தீர்கள் என்றால், அதில் மாநில உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கும். இத்தனை நாள் மாநிலங்களிடம் இருந்த உரிமைகளை அந்த புது மசோதாவில் அவர்கள் தட்டிப் பறித்திருப்பார்கள்.

ஒரு திட்டத்தைக் கொண்டுவருகிறார்கள் என்றால் அதற்கு நமக்கு விளங்காத வகையில் ஒரு பெயர் வைப்பார்கள். அந்த பெயர் என்ன வென்றே நமக்கு புரியாது. பெயர் தெரியாத ஒரு திட்டத்தை எப்படி பயன்படுத்த முடியும்? எவ்வளவோ முறை சொல்லியாகிவிட்டது. ஆனால் அதுபற்றி அவர்களுக்கு அக்கறை இல்லை. தமிழ்நாட்டில் தங்களுக்கு ஓட்டு போட மாட்டார்கள், அதனால் எங்களுக்கு கவலை இல்லை என்பதுதான் அவர்களின் நிலையாக இருக்கிறது.

கடந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் மூன்று குற்றவியல் தொடர்பான சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இங்கே இருக்கிற நமது மூத்த வழக்கறிஞர் ஆவுடையப்பன் அவர்களுக்கு அந்த சட்டங்களின் பெயர்கள் தெரியுமா? தமிழ்நாட்டில் தென்னாட்டில் இருக்கும் பெரும்பாலான வழக்கறிஞர்களுக்கு அந்த பெயரெல்லாம் வாயிலேயே நுழையாது. ஏனென்றால் இந்தியிலும் சமஸ்கிருதத்திலும் பெயர் வைக்கிறார்கள்.

இப்படி மாநில உரிமைகள், மாநில அடையாளங்கள், மாநில சுயமரியாதை இவற்றை கேள்வி கேட்கும் வகையில் ஒவ்வொரு நாளும் செயல்பட்டுக் கொண்டிருக்க கூடிய ஆட்சிதான் ஒன்றிய பாஜக ஆட்சி.

**பிரதமர் நாவில் மட்டும் தமிழ் நிதியெல்லாம் வடமொழிக்கு!**

ஆனால் பிரதமர் திருக்குறள் சொல்லுவார். வெளிநாடுகளுக்கு செல்லும்போது கூட சொல்லுவார். தமிழ் மிகப் பழமையான மொழி என்று பிரதமர் சொல்லுவார். தமிழ் மிகப் பழமையான மொழி என்று எங்களுக்கே தெரியும். அதை சொல்வதற்கு நீங்கள் வேண்டாம்.

நாம் கேட்க வேண்டிய ஒரே கேள்வி... சமஸ்கிருதத்துக்கு, இந்திக்கு எவ்வளவு காசு கொடுக்குறீங்க? எவ்வளவு நிதி ஒதுக்குறீங்க? தமிழுக்கு எவ்வளவு நிதி தருகிறீர்கள்? சமஸ்கிருதத்துக்கும் இந்திக்கும் அள்ளி அள்ளி கொடுக்கிறார்கள். தமிழுக்கு கிள்ளிக் கூட கொடுப்பதில்லை. மிகப் பழமையான மொழி என்று கொண்டாடுகிறாரே பிரதமர். அந்த தமிழ் மொழியை வளர்ப்பதற்கு மக்களிடம் கொண்டு செல்வதற்கு என்ன செய்கிறார்? ஒன்றும் கிடையாது.

இப்படித்தான் ஒவ்வொரு விஷயத்திலும் தமிழ்நாட்டு மக்களுக்கு தென்னாட்டு மக்களுக்கு தொடர்ந்து எதிராக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தெற்கை கட்டுக்குள் கொண்டு வந்துவிட வேண்டும், அவர்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டும் பொம்மைகளாக தென் மாநிலங்களை மாற்றிவிட வேண்டும் என்ற திட்டத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**உத்திரப்பிரதேசத்துக்கு மட்டும் இரண்டு மடங்கு நிதி!**

நமது நிதியமைச்சர் சொன்னார். ஜிஎஸ்டியில் ஒரே நாடு ஒரே வரி என்று சொல்லி வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். வாங்கிய வரியை திருப்பிக் கொடுக்க வேண்டுமா இல்லையா?




கொடுப்பதே கிடையாது.

நாம் ஒரு ரூபாய் வரியாக கொடுத்தால் தமிழ்நாட்டுக்கு 26 பைசா, கேரளாவுக்கு 62 பைசா, கர்நாடகத்துக்கு 40 பைசா என்ற அளவில்தான் திரும்பி வருகிறது. ஆனால் உத்திரப்பிரதேசம் ஒரு ரூபாய் கொடுத்தால் இரண்டு ரூபாய் இரண்டு காசுகள் அவர்களுக்கு கிடைக்கிறது. அதாவது உத்திரப்பிரதேசத்துக்கு டபுள் மடங்காகக் கிடைக்கிறது.

100 ரூபாய் கொடுத்தால் டபுள் பண்ணி கொடுப்பதாக மல்டி லெவல் மார்க்கெட்டிங்கில் சொல்லுவார்கள் இல்லையா அதுபோல உத்திரப்பிரதேசத்துக்கு நிஜமாகவே ஒன்றிய அரசு செய்துகொடுக்கிறது.

கேட்டால், அது முன்னேற வேண்டிய மாநிலம் என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன். பத்து வருடமாக உங்கள் ஆட்சிதானே நடக்கிறது? ஏன் இன்னும் அது முன்னேற வேண்டிய மாநிலமாகவே இருக்கிறது? தமிழ்நாட்டை நம்முடைய முதலமைச்சர் பல்வகைகளில் முன்னேறிய மாநிலமாக முதல் மாநிலமாக உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள். அதுவும் எப்படிப்பட்ட நிலையிலே..? ஒன்றிய அரசாங்கம் எந்த விதத்திலும் தமிழ்நாட்டுக்கு நிதி உதவிகள் செய்வதில்லை. தொடர்ந்து தடைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் தாண்டி, மீறி முதன்மையான மாநிலமாக தமிழ்நாட்டை நாம் உருவாக்கிக் காட்டியிருக்கிறோம்.

ஆனால் உத்திரபிரதேசத்தில் நிதியைக் கொண்டு கொட்டுகிறார்கள். ஆனால் அது ஏன் இன்னும் வளர்ச்சி பெறாத மாநிலமாக இருக்கிறது என்பதற்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

மக்களவையில் இப்போது 543 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்கள். அதை மக்கள் தொகைக்கு ஏற்ப 800 ஆக மாற்ற வேண்டும். வட மாநிலங்களில் மக்கள் தொகையை கட்டுப் படுத்தவில்லை. ஆனால் தென் மாநிலங்களில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியிருக்கிறது. அதனால் இன்று நாம் பழிவாங்கப்படுகிறோம்.

சரியாக நிர்வாகம் செய்து கல்வியை கொண்டு சேர்த்து குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மக்களிடம் கொண்டு சென்று, அவர்களை பகுத்தறிவு உள்ளவர்களாக ஆக்கி மக்கள் தொகையை கட்டுப்படுத்தியிருக்கின்றன தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்கள். ஆனால் வட மாநிலங்கள் இவை எதையுமே செய்யாமல் மக்கள் தொகையை பெருக்கி வைத்திருக்கின்றன.

**உழைக்கும் எறும்பிடம் இருந்து பிடுங்கி, ஊதாரி சில்வண்டுக்கு கொடுப்பதா?**

உங்களுக்கு ஒரு கதை தெரியுமா? குளிர் காலத்தில் எந்த உணவும் கிடைக்காது என்பதற்காக எறும்பு கோடைக் காலத்திலேயே அலைந்து திரிந்து உணவுகளை சேகரித்துக் கொண்டு வைக்கும். ஆனால் சில் வண்டு எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஆடித் திரிந்து மகிழ்ச்சியாக பொழுதைப் போக்கி எதிர் காலத்தைப் பற்றி கவலைப்படாமல் ஊர் சுற்றிக் கொண்டிருக்கும். குளிர்காலம் வந்தபோது எறும்புக்கு உணவு இருந்தது. ஆனால் அந்த சில் வண்டுக்கு உணவு இல்லை., தவித்துக் கொண்டிருந்தது. இது இயற்கை நீதி.

அந்த சில்வண்டுகளை தவிக்கவிடவேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் உழைத்துச் சேர்த்து வைத்திருந்த எறும்பிடம் இருக்கும் உணவுப் பொருட்களை எல்லாம் பிடுங்கி, அந்த சில்வண்டுகளிடம் கொடுத்தால் அது எப்படி நியாயம் இல்லையோ அப்படித்தான்... இன்று நமக்கு நடந்துகொண்டிருக்கிறது.

கஷ்டப்படுகிறோம் உதவி செய் என்று சொன்னால் தமிழர்கள் என்றைக்கும் தரமாட்டேன் என்று சொல்ல மாட்டார்கள். ஆனால் நம்மிடம் இருக்கும் அத்தனையையும் ஜிஎஸ்டி என்ற பெயரில் பிடுங்கிக் கொண்டு போய் உத்திரப்பிரதேசத்துக்கு கொடுப்பேன் உனக்கு திருப்பிக் கொடுக்க மாட்டேன் என்று சொன்னால் அதை நாம் எதிர்த்துக் கேட்க வேண்டும்.

**நிர்மலா சீதாராமன் அக்கறை யார் மீது?**

சென்னையிலும் திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் வரலாறு காணாத வெள்ளம் வந்தது. தூத்துக்குடியில் இதுவரை இல்லாத அளவுக்கு கன மழை பெய்து கிராமங்களில் இருப்பவர்கள் இருக்கிறார்களா இல்லையா என்று தெரியாத ஒரு சூழ் நிலை. அப்படி ஒரு மோசமான நிலை. சாலைகள் அடித்துக் கொண்டு போய் விவசாய நிலங்களில் மண்ணையும் கல்லையும் வாரி இறைத்திருக்கிறது. இப்படிப்பட்ட வரலாறு காணாத நினைத்துப் பார்க்க முடியாத ஓர் அழிவு.

சென்னை வெள்ளத்தைப் பார்க்க பாதுகாப்பு அமைச்சர் ராஜ் நாத் சிங் வந்தார். ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தூத்துக்குடிக்கு வந்தார். அவருடன் நமது நிதியமைச்சரும் வந்தார். வெள்ளம் பாதித்த பகுதிகளை சுற்றிப் பார்த்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர் ரொம்ப அக்கறையா விசாரிச்சது.., அங்கே கோயிலை சுற்றி இருக்கக் கூடிய தெருக்களில் சேறாக உள்ளது. குருக்களுக்கு சம்பளம் போதவில்லை. உண்டியலில் காசு போடாதீர்கள் என்று சொல்லுகிறார். கோயில் உண்டியலில் காசு போட்டால் அது அரசாங்கத்துக்கு போகாது அம்மையாரே.. அது கோயிலுக்குதான் போகும். இதுதான் ஒன்றிய நிதியமைச்சருக்கு கவலை.

அடுத்த வேளை உணவுக்காக தவிக்கிறார்கள், வியாபாரம் நசிந்துகொண்டிருக்கிறது. எத்தனை சகோதரிகள் வீட்டில் மாவரைத்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் கிரைண்டர் பழுதாகிவிட்டது. மாற்றுத் திறனாளிகளின் வண்டிகள் பறிபோய்விட்டன. சிறு வணிகர்களின் கடைகளுக்குள் தண்ணீர் புகுந்துவிட்டது. அவர்கள் ஏற்கனவே ஜிஎஸ்டியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பழைய கணக்குகளை எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டு ஃபைன் போடுகிறார்கள் என்று வியாபாரிகள் ஜிஎஸ்டியால் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிற நிலையை பார்க்கிறோம். ஆனால் ஒன்றிய நிதியமைச்சருக்கு குருக்களுக்கு என்ன சம்பளம் என்பதில் மட்டும் தான் அக்கறை இருந்தது.

இதுவரை வெள்ள நிவாரணமாக ஒன்றிய அரசு ஒற்றை ரூபாய் கூட தரவில்லை. இதுவரை மக்களுக்கு தரப்பட்ட பணம் எல்லாம் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு முதலமைச்சர், திராவிடமுன்னேற்றக் கழக ஆட்சி தந்தது. நாங்க கொடுத்த பணத்தைதான் நீங்க எடுத்துக் கொடுக்குறீங்க என்று அவர்கள் சொல்கிறார்கள். நாங்கள் கொடுத்த பணத்தை எடுத்து வைத்துக் கொண்டு நீ எங்களுக்கு திருப்பிக் கொடுக்க மாட்டேன் என்கிறாயே.... இதற்கு பெயர் என்ன?

என் பணத்தை திருப்பிக் கொடுக்கிறேன் என்று சொல்லி வாங்குகிறீர்கள். ஆனால் திருப்பித் தர மாட்டேன்கிறீர்கள். எத்தனையோ தடவை கேட்டும் வரவில்லை. அப்படியென்றால் அந்த பணத்தை வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு என்ன பெயர்? அவர்களுக்கு தெரிந்த நேர்மை நியாயம் இதுதான்.’

**பாஜகவின் நேர்மை எல்லாம் தேர்தல் பத்திரத்தில் தெரிந்துவிட்டது!**

அவர்களின் நேர்மை நியாயத்தை எல்லாம் உச்ச நீதிமன்றம் போட்டு உடைத்துவிட்டது. தேர்தல் பத்திரங்கள் என்கிற எலக்ஷன் பாண்டு மூலம் எவ்வளவு வேண்டுமானாலும் நிதி வாங்கிக் கொள்ளலாம். அதை யார் கொடுத்தார்கள் என்று சொல்ல வேண்டிய தேவை இல்லை என்று ஒரு திட்டம் கொண்டுவந்தது பிஜேபி. எதிர்கட்சிகளுக்கு யார் யார் காசு கொடுத்தார்கள் என்று அரசாங்கத்தால் கண்டுபிடிக்க முடியும். காங்கிரசுக்கு ஏன் கொடுத்தாய், திமுகவுக்கு ஏன் கொடுத்தாய், திருணமூல் காங்கிரசுக்கு ஏன் கொடுத்தாய் என்றெல்லாம் விசாரிக்க முடியும்.

ஆனால் ஒரு கட்சிக்கு யார் எவ்வளவு காசு கொடுத்தார்கள் என்று பொதுமக்களுக்கு தெரியாது. இது நவீனமான லஞ்சம் வாங்குகிற மாதிரிதான். 2018 இல் எலக்ட்ரல் பாண்டுகளை கொண்டுவருகிறார்கள். 2023 வரைக்கும் 6564 கோடி ரூபாய் பா.ஜ.க.வுக்கு மட்டுமே வந்திருக்கிறது. இந்தியாவில் இருக்கிற அத்தனை கட்சிகளுக்கும் கிடைத்த வருமானத்தை சேர்த்து போட்டு பார்த்தால் கூட இந்த அளவுக்கு வராது.

பா.ஜ.க. தேர்தல் பத்திரங்கள் மூலம் செய்த இந்த நீதி, நேர்மை, நியாயம் எல்லாம் செல்லாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. இப்படி தொடர்ந்து மக்களுக்கு எதிராக, பெண்களுக்கு எதிராக, ஜனநாயகத்துக்கு எதிராக செயல்பட்டு வருகிறது பா.ஜ.க. அரசு.

**விவசாயிகள் என்ன தீவிரவாதிகளா?**

விவசாயிகள் சட்டங்களுக்கு எதிராக டெல்லி குளிரில் வருடக் கணக்காக விவசாயிகள் நடத்திய போராட்டம் உங்களுக்குத் தெரியும். டெல்லி குளிர் எல்லாம் சாதாரணமானதல்ல. வெளியே உட்கார முடியாது. அந்த அளவுக்கு கடுமையான குளிரில் விவசாயிகள் தொடர்ந்து போராடினார்கள். அவர்கள் போராடிய பிறகு வேறு வழியில்லாமல் ஒன்றிய அரசாங்கம் அந்த சட்டங்களைத் திரும்பப் பெற்றது.

அந்தப் போராட்டத்தில் பங்கேற்ற எத்தனையோ விவசாயிகள் உயிரிழந்தனர். பிஜேபி அமைச்சர் ஒருவரின் உறவினர் விவசாயிகள் மீது வண்டியை ஏற்றி விவசாயியை கொலை செய்தார். இதையெல்லாம் தாண்டித்தான் அந்த விவசாயிகள் தொடர்ந்து போராடி வெற்றி பெற்றனர்.

அதேபோல இஸ்லாமிய சகோதரர்களுக்கு எதிரான சி.ஏ.ஏ. சட்டம். தொழிலாளர்களுக்கு எதிரான லேபர் கோடு சட்டங்கள். அந்த லேபர் கோடு சட்ட மசோதாவை எப்படி கொண்டுவந்தது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

விவசாய சட்டங்கள் கொண்டுவந்தபோது அதை எதிர்த்து மாநிலங்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போராடியபோது அவர்கள் அனைவரும் அவையில் இருந்து நீக்கப்பட்டார்கள். அதை எதிர்த்து மக்களவையில் நாங்கள் கேள்வி கேட்கிறோம். கண்டித்து வெளிநடப்பு செய்கிறோம். நாங்கள் வெளிநடப்பு செய்த அந்த நேரத்தில் தொழிலாளர்களுக்கு எதிரான சட்டங்களைக் கொண்டுவந்து ஐந்தே நிமிடத்தில் அதை நிறைவேற்றுகிறார்கள். இப்படி விவசாயிகள், தொழிலாளர்கள், தலித்துகள் என அத்தனை மக்களுக்கும் எதிராக செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஆட்சிதான் பி.ஜே.பி. ஆட்சி.

அதுமட்டுமல்ல விவசாய சட்டங்களைத் திரும்பப் பெற்றபோது விவசாய விளை பொருட்களுக்கு அடிப்படை ஆதார விலை வழங்குகிறோம், விவசாயிகளுக்கு ஒய்வூதியம் வழங்குகிறோம் என்று ஒன்றிய அரசு கொடுத்த வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

மறுபடியும் இப்போது விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் டெல்லிக்கு வந்துவிடக் கூடாது என்று விவசாயிகள் மீது டிரோன்கள் மூலம் கண்ணீர் புகை குண்டுகளை வீசுகிறார்கள். வேலிகளைத் தூக்கிப் போடுகிறார்கள், மிரட்டுகிறார்கள். எத்தனையோ விவசாயிகள் நாடு முழுதும் கைது செய்யப்படுகிறார்கள். அவர்கள் என்ன தீவிரவாதிகளா? நியாயத்துக்காக போராடும் விவசாயிகள் மீது கண்ணீர் புகை குண்டுகளை வீசக் கூடிய ஆட்சிதான் இந்த பிஜேபி ஆட்சி.

**பெண்களை மதிப்பவர்களா.. பில்கிஸ் பானுவே உதாரணம்!**

தொடர்ந்து நாங்கள் பெண்களை மதிக்கிறோம் என்று சொல்கிறார்கள் பி.ஜே.பி.யினர். பில்கிஸ் பானு தெரியுமா உங்களுக்கு? குஜராத்திலே நடந்த கலவரத்திலே அவரது குடும்பத்தைச் சேர்ந்த அத்தனை பேரும் கொல்லப்படுகிறார்கள். அந்த பெண், 11 பேரால் பாலியல் சித்திரவதைக்கு ஆளாக்கப்படுகிறார். நீதிமன்றம் அந்த 11 பேருக்கு தண்டனை அளித்து சிறையில் அடைக்கிறது. குஜராத்தில் நடக்கும் பா.ஜ.க. ஆட்சி, அந்த 11 பேரை விடுதலை செய்கிறது. பில்கிஸ் பானு உச்ச நீதிமன்றத்தை நாடுகிறார். உயிருக்கு அச்சுறுத்தலைத் தாண்டி அவருக்கு நீதி கிடைக்கிறது. பில்கிஸ் பானு சொல்கிறார், ‘இரு ஆண்டுக்கு பிறகு இன்றுதான் நான் தூங்கப் போகிறேன்’ என்று சொல்கிறார். இதுதான் அவர்கள் பெண்களுக்கு தரும் பாதுகாப்பா?

மணிப்பூரில் பெண்களுக்கு என்ன நடந்தது? இன்று வரை எரிந்துகொண்டிருக்கிறது மணிப்பூர். பிரதமர் அவர்களே. நீங்கள் கோயில் திறப்பது பற்றி பிரச்சினை அல்ல. கோயிலுக்கு செல்வது பிரச்சினை இல்லை. கோயிலுக்கு செல்வதற்கு முன்னால் ஒவ்வொரு பகுதியாக சென்று ஷேத்திராடணம் செய்தீர்கள். விரதம் இருந்தீர்கள். அது உங்கள் நம்பிக்கை. அதை மதிக்கிறோம். ஆனால் இவ்வளவு இடங்களுக்கு சென்று வந்த நீங்கள் மணிப்பூருக்கு சென்றிருக்கலாமே... மணிப்பூர் சென்று மக்களை சந்தித்தீர்களா? அந்த கண்ணீரைத் துடைப்பதறாக ஒரு விரல் நீண்டிருக்கிறதா?

ஜெயலலிதா பற்றி கவலைப்படும் நிர்மலா!

இதை நாடாளுமன்றத்திலே நான் எழுப்புகிறேன். மணிப்பூரிலே நாங்கள் பார்த்த அவலங்களை உடைகள் எல்லாம் அகற்றப்பட்டு வீதிகளிலே இழுத்துவரப்பட்ட அந்த இரு பெண்களின் கண்ணீர் கதையை, கோரத்தை பேசுகிறோம். அம்மையார் நிர்மலா சீதாராமன் அதற்கு பதிலளிக்கிறார். ’35 ஆண்டுகளுக்கு முன்னால் எனது சகோதரி ஜெயலலிதாவுக்கு நேர்ந்த அநீதிக்கு பதில் என்ன?’ என்று கேட்கிறார்.

நான் கேட்கிறேன். மணிப்பூரில் மலை வாழ் சகோதரிகள் அசிங்கப்படுத்தப்படுகிறார்கள். வன்முறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அந்த இரண்டு பேர் மட்டுமில்லை. எத்தனையோ பெண்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சில தாய்மார்கள் எங்களிடம் பேசும்போது, ‘எங்கள் மகனைக் காணவில்லை. இருக்கிறானா இல்லையா என்று கூட தெரியவில்லை, ஒவ்வொரு நாளும் தவித்துக் கொண்டிருக்கிறோம்’ என்கிறார்கள். முகாம்களில் இருக்கும் பெண்களுக்கு போதிய உணவு இல்லை. இப்படிப்பட்ட மலை வாழ் சகோதரிகளைப் பற்றி பேசினால் அரசியல் பேசி பதில் சொல்கிறார் நிர்மலா சீதாராமன். புனைக் கதைகளை பேசி கோயிலில் குருக்களுக்கு சம்பளம் பற்றவில்லை என்று சொன்னாரே அதே போன்ற ஒரு அம்மையாரை பற்றித்தான் நிதியமைச்சருக்கு கவலை.

**இந்துக்கள் பயன்பெறும் தி.மு.க.வின் திட்டங்களைப் பாரீர்!**

சாதாரண மக்களைப் பற்றி, ஒடுக்கப்பட்ட மக்களைப் பற்றி, பிள்ளைகளுடைய எதிர்காலத்தைப் பற்றி என எதைப் பற்றியுமே அக்கறை இல்லாமல் மத அரசியலை கொண்டு வந்து திணித்து ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்திருக்க வேண்டும் என்பதுதான் பா.ஜ.க.வின் திட்டம்.

பெரும்பான்மை இந்துக்களுக்கு நாங்கள் தான் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன். நமது முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு மகளிர் உரிமைத் தொகை ஒரு கோடியே 15 லட்சம் பெண்களுக்கு வழங்கப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் 2 லட்சத்து 60 ஆயிரம் மகளிர் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை பெறுகிறார்கள். இவர்களில் பெரும்பான்மை இந்துக்களா இல்லையா? அவர்களை விட்டுவிட்டா நாங்கள் திட்டம் கொண்டு வருகிறோம்... இல்லையே?

அதேநேரம் நீங்கள் பாஜகவினர் பெரும்பான்மை இந்துக்களுக்கு என்ன செய்திருக்கிறீர்கள்? 100 நாள் வேலை... எந்த ஊருக்கு போனாலும் சகோதரிகள் சொல்லக் கூடியது சம்பளம் ஏறவில்லை, 100 நாள் வேலை கொடுக்கவில்லை என்பதுதான். இது தமிழ்நாட்டில் மட்டுமில்லை... இந்தியா முழுதும் இதுதான் நிலைமை. காரணம் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கவில்லை. போன பட்ஜெட்டில் 100 நாள் வேலைத் திட்டத்துக்கு 60 ஆயிரம் கோடி தான் ஒதுக்குகிறார்கள். இது எப்படி போதும்? இதைக் கேட்டால், ‘உங்களுக்கெல்லாம் புரியவில்லை. வேலை வர வர வேலை நாட்களையும் சம்பளத்தையும் ஏற்றிக் கொடுப்போம்’ என்றார்கள். ஆனால் இன்றைக்கும் மாதக் கணக்கில் சம்பளம் வராமல் 100 நாள் வேலை செய்யும் தொழிலாளர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சாமானிய மக்கள் பயன்பெற வேண்டும் என்று நாம் பங்கு வகித்த காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் கொண்டுவரப்பட்டதுதான் 100 நாள் வேலை திட்டம். விவசாயம் இல்லாத நாட்களில் மக்களுக்கு வேலை கிடைக்க வேண்டும் என்பதற்காக கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டத்தை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக் கொண்டே வருகிறார்கள். கார்ப்பரேட்டுகளுக்கு என்றால் கேட்டதை எல்லாம் செய்து தருகிறார்கள்.

இப்படி பெரும்பான்மை மக்கள் படிக்க கூடிய வாய்ப்பை பறிக்க கூடிய ஆட்சி. பெரும்பான்மை தலித்துகள், ஒடுக்கப்பட்டோர், சிறுபான்மையினர் என அனைவருக்கும் எதிரான ஆட்சி இந்த பா.ஜ.க. ஆட்சி.

நாட்டின் இறையாண்மையை, அரசியல் சாசன சட்டத்தை, ஊடகங்களை கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக் கொண்டிருக்கும் ஆட்சி, பேச்சுரிமையை சிதைத்துக் கொண்டிருக்கும் ஆட்சி, பெண்கள் உரிமைகள், இளைஞர்களின் எதிர்காலம் பற்றி கவலைப்படாமல் அதை அழித்துக் கொண்டிருக்கும் ஆட்சி ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி.

**மாநிலங்கள் தூக்கி எறிந்ததுபோல், நாடும் பா.ஜ..கவை தூக்கி எறியும்!**

நாம் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்தியா கூட்டணி ஒன்றியத்திலே ஆட்சிப் பொறுப்புக்கு வரவேண்டும். எப்படி வர வேண்டும் என்று கேள்வி கேட்காதீர்கள். தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலங்கானா, மேற்கு வங்காளம் என எத்தனையோ மாநிலங்கள் இந்த பாஜகவை தூக்கி எறிந்துவிட்டது. இந்த நாடும் விரைவில் அவர்களை தூக்கி எறியும்.

இந்தியா கூட்டணி வெற்றி பெறக் கூடிய நாள் தான் இந்திய நாடு வெற்றி பெறக் கூடிய நாள். பாஜகவின் வெற்றி என்பது இந்தியாவின் தோல்வி ஆகிவிடும் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்த குரலை நமது முதலமைச்சரின் குரலை தொடர்ந்து எடுத்துச் செல்வோம். பாசிசம் வீழட்டும்... இந்தியா வெல்லட்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.

உடன், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், பாராளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வஹாப், முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன், மாநகராட்சி மேயர் சரவணன், தி.மு.க. மகளிரணி செயலாளர் ஹெலன் டேவிட்சன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



திருநெல்வேலி சந்திப்பு பெரியார் பேருந்து நிலையத்தில் (18.02.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், சிறுதானிய மதி உணவகம் தொடங்குவதற்கான சாவியை மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு வழங்கினார். உடன் சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர்கள் கே.என்.நேரு , அனிதா ராதாகிருஷ்ணன் , த.மனோ தங்கராஜ் , நகராட்சி நிருவாக இயக்குநர் .சு.சிவராசு, மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.கா.ப.கார்த்திகேயன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய இணை மேலாண்மை இயக்குநர் ஆனந்த் மோகன், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம் , பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் .மு.அப்துல் வகாப் , மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன் , மாநகராட்சி ஆணையாளர் .தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், , துணை மேயர் .கே.ஆர்.ராஜீ , மாவட்ட ஊராட்சித் தலைவர் .வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ் உட்பட பலர் உள்னர்.



திருநெல்வேலி சந்திப்பு பெரியார் பேருந்து நிலையத்தில் நேற்று (18.02.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்அ வர்கள், சீர்மிகு திட்டத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள கட்டத்தை தொழில் முனைவோர்க்கு பயிற்சி வழங்குவதற்கு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் மண்டல அலுவலகமாக செயல்படுவதற்கான ஆணையினை வழங்கினார்கள். உடன் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் முஅப்பாவு, அமைச்சர்கள் கே.என்.நேரு, அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்,த.மனோதங்கராஜ் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உடன் உள்ளனர்.

### ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்பது போல

# ‘எல்லா ஊர்களுக்கும் எல்லாம்’ என்பதே திராவிட மாடல்!

## நெல்லையில் அரசு நலத்திட்ட விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

நெல்லை, பிப்.19-

**“எல்லோருக்கும் எல்லாம் போல எல்லா ஊர்களுக்கும் எல்லாம் என்பதே திராவிட மாடல்” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நெல்லையில் அரசு விழாவில் பங்கேற்று உரையாற்றும்போது கூறினார்.**

திருநெல்வேலியில் புதுப்பிக்கப்பட்ட பெரியார் பேருந்து நிலையம் உள்பட முடிவுற்ற திட்டப்பணிகளை, நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில், இளைஞர் நலன், விளையாட்டு மற்றும் சிறப்புச் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கிவைத்து பொது மக்களுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கி, விழா பேருரை ஆற்றினார்.

அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரூபாய் 136 கோடி மதிப்பீட்டில் நிறைவுபெற்ற பல்வேறு பணிகளைத் திறந்து வைப்பது, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாக அம்பாசமுத்திரம் ஒன்றியம் களக்காடு நகராட்சி மற்றும் ஏழு பேரூராட்சிகளுக்கு தாமிரபரணியில் இருந்து கூட்டுக் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்த ரூபாய் 436 கோடி ரூபாய் மதிப்பில் அடிக்கல் நாட்டுவது என்று இன்று மட்டும் மொத்தம் 572 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை இந்த மேடையில் தொடங்கி வைப்பதில் மிகுந்த பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும், நம் முதலமைச்சர் அவர்களுக்கும் பிடித்த ஊர்களில் இந்தத் திருநெல்வேலியும் ஒன்று. திருநெல்வேலியில் நீர்ப்பாசனத்திற்கு அணைகளைக் கட்டி விவசாயத்தை ஊக்குவித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அத்தகைய திருநெல்வேலியை இன்றைக்கு நவீனமயமாக்கி, தமிழ்நாட்டின் முக்கியமான மாநகரமாக நம் முதலமைச்சர் அவர்கள் வளர்த்தெடுத்து வருகின்றார்.

**பெரியார் பேருந்து நிலையம் சீரமைப்பு!**

இதன் வெளிப்பாடாகத்தான் இன்று சுமார் 572 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களைத் தொடங்கி வைக்கின்றோம். அதிலும் குறிப்பாக, திரு நெல்வேலியில் முக்கிய இடமாக இருக்கும் பெரியார் பேருந்து நிலையத்தைச் சீரமைத்து, மேம்படுத்தும் பணிகள் 85 கோடியே 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்றன. அந்தப் பேருந்து நிலையத்தை மக்கள் பயன்பாட்டிற்காக இன்று திறந்து வைத்துள்ளோம்.

**நெல்லை, விளையாட்டின் புதிய நம்பிக்கை!**

கழக ஆட்சி அமைந்தது முதல், விளையாட்டு மேம்பாட்டுத் துறை நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது. இந்தத் திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் கிராமப் பகுதிகளில் உள்ள வீரர்களை ஊக்குவிக்கும் விதமாக டார்லிங் நகரில் ஆறு கோடியே ஐம்பது லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய உள் விளையாட்டுக் கட்டடத்தை திறந்து வைத்துள்ளேன். இந்த விளையாட்டு அரங்கம், நெல்லை விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் பயிற்சி செய்வதற்கு நிச்சயம் உதவியாக இருக்கும். இதன்மூலம் நெல்லையிலிருந்து இன்னும் நிறைய விளையாட்டு வீரர்கள் உருவாகி வருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கின்றது.



திருநெல்வேலி சந்திப்பு பெரியார் பேருந்து நிலையத்தில் நேற்று (18.02.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் .உதயநிதி ஸ்டாலின், வருவாய்த்துறை சார்பில் கருணை அடிப்படையில் 6 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, ரூபாய் 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாளையங்கோட்டை பேருந்து நிலையம் அருகே வணிக வளாகம் கட்டப்பட்டு இன்று மக்கள் பயன்பாட்டிற்காகக் கொண்டு வரப்பட்டுள்ளது. பல்லடுக்கு வாகன காப்பகக் கட்டடத்தையும் (மல்டி லெவல் பார்க்கிங் ஸ்பெஷலிட்டி) 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டிமுடித்துத் திறந்து வைத்துள்ளோம்.

**புதிய தொழில் முனைவோர் கூட்ட அரங்கம்!**

பாளையங்கோட்டை பேருந்து நிலையம் அருகே நகரின் மையப் பகுதியில் மக்களுடைய வசதிக்காக இந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. திருநெல்வேலியில் உள்ள வர்த்தகர்கள் தொழில் முனைவோர்கள் தங்களின் கூட்டங்களை நடத்துவதற்குப் போதுமான இடமில்லாத காரணத்தால், மாநகராட்சி வர்த்தக மையம் அருகிலேயே புதிய தொழில் முனைவோர் கூட்ட அரங்கத்தை 3 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி இன்று திறந்துள்ளோம்.

இன்றைக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பாக, அம்பாசமுத்திரம் ஒன்றியத்தில், தாமிரபரணி ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேலும் மிக மிக முக்கியமான திட்டமாக, களக்காடு நகராட்சி மற்றும் மாவட்டத்திற்கு உட்பட்ட ஏழு பேரூராட்சிகளின் குடிநீர் சேவையைத் தீர்க்க 436 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டம் அமைய அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இவைத் தவிர, ஊரக வளர்ச்சித் துறை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பாகவும், புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இங்கே திருநெல்வேலி மாநகரத்திற்கான திட்டங்கள் மட்டுமின்றி கிராம ஊராட்சிகளுக்கான திட்டங்களையும் செயல்படுத்தி இருக்கின்றோம். இதன் மூலம் ஒரு விஷயத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் கிராமம் முதல் நகரம் வரை நம் 'திராவிட மாடல்' அரசு ஒரே சீராகச் செய்து வருகின்றது!

கடந்த பத்து ஆண்டுகளை விட, திருநெல்வேலியின் வளர்ச்சி இந்த இரண்டரை ஆண்டுகளில் பல மடங்காக உயர்ந்திருப்பதை நீங்கள் உங்கள் கண் முன்னே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். எதிர்க்கட்சியாக இருந்தாலும் ஆளும்கட்சியாக இருந்தாலும் மக்கள் நலனே குறிக்கோள் எதிர்க்கட்சியாக இருக்கும்பொழுதும் ஆளும்கட்சியாக இருக்கும்போதும் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என்ன தேவை என்பதை உணர்ந்து செயல்படும் இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம். அதன்படிதான் பல்வேறு திட்டங்களை இன்றைக்கு ஆட்சிக்கு வந்தும், நம் கழக அரசு செயல்படுத்தி வருகிறது. இது திருநெல்வேலிக்கு 100% பொருந்தும். அந்த வகையில் மக்களுடன் மக்களாக கழகமும் சரி, கழக அரசும் சரி என்றைக்கும் இணைந்திருக்கும்.

இங்கு குறிப்பிட்டு ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகின்றேன். கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பெய்த வரலாறு காணாத மழை வெள்ளம் திரு நெல்வேலியையே புரட்டிப் போட்டது. மூன்று நாள்கள் உங்களுடனே தங்கியிருந்து நிவாரணப் பணிகளில் ஈடுபட்டேன். மிக்ஜாம் புயலால் சென்னையில் ஏற்பட்ட பாதிப்புகளைச் சரிசெய்த ஓரிரு நாட்களுக்குள்ளாகவே, தென் மாவட்டத்தில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டு, மீட்புப் பணியில் களமிறங்கினோம்.

அரசுக்கு தோளோடு தோள் கொடுக்கும் விதமாகத் திருநெல்வேலி மக்கள் அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கினார்கள். சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இன்று திறக்கப்பட்டுள்ள பெரியார் பேருந்து நிலையம் அன்றைக்கு மழை வெள்ளத்தால் சூழ்ந்ததை அனைவரும் பார்த்திருப்பார்கள். அந்த மழைநேரத்திலும் இரவோடு இரவாக மழைநீரை வெளியேற்றும் பணிகள் நடைபெற்றன. ஒரேநாளில் மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டு வந்த அந்தப் புகைப்படத்தையும் தமிழ்நாடு அரசின் செய்தித்துறை சார்பாக வெளியிட்டோம்.

**நெல்லையை 3 நாட்களில் மீட்டெடுத்தோம்!**

மழைவெள்ள பாதிப்புகளை அறிந்தவுடன், அனைத்து அரசு இயந்திரங்களையும் முடுக்கிவிட்டு, நம் முதலமைச்சர் அவர்கள் நேரடியாக திருநெல்வேலிக்கு வந்து, பார்வையிட்டு மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்கள். சேலத்தில் எங்களின் மாநாட்டை ரத்து செய்துவிட்டு, அரசு நிகழ்ச்சிகளை ரத்து செய்துவிட்டு, நெல்லையில் நானும், அனைத்து அமைச்சர்களும் முகாமிட்டிருந்தோம். மீட்புப் பணிகள் முழுவதுமாக நிறைவுறும் வரையில் நானும், மற்ற அமைச்சர்களும், மாநகராட்சி அதிகாரிகளும், தூய்மைப் பணியாளர்களும் கடைசிவரை களத்தில் நின்று பணியாற்றியதை இந்த மாவட்ட மக்களான நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அந்த மழை வெள்ள சமயத்தில் இப்படி ஒவ்வொருவரும் முழுமையாக ஈடுபட்டதால்தான் திருநெல்வேலியை மூன்றே நாட்களில் மீட்டெடுக்க முடிந்தது.

**சொல் விளையும் பூமி!**

திருநெல்வேலி நெல் விளையும் பூமியாக மட்டும் இருக்கக்கூடாது; சொல் விளையும் பூமியாகவும் இருக்க வேண்டும் என்று இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தை முதலமைச்சர் சமீபத்தில் திறந்து வைத்தார். எப்படிப்பட்ட சூழ்நிலைகள் வந்தாலும், அதையெல்லாம் தாண்டி நம் கழகமும் திராவிட மாடல் அரசும் திருநெல்வேலி மக்களுடன் இன்றுபோல் என்றும் உடனிருக்கும் என்பதை நான் இங்கே உறுதியோடு கூறிக்கொள்கின்றேன்.

திருநெல்வேலி மாநகராட்சியின் 4 மண்டலங்களில் உள்ள 55 வார்டுகளிலும் அரசுத் திட்டங்கள் சென்றடைந்து கொண்டிருக்கின்றன. இதற்கு மாநகராட்சிப் பணியாளர்கள், அலுவலர்கள் என அனைத்து பணியாளர்களுமே முக்கியக் காரணம். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பயன்படாத குடும்பங்களே தமிழ்நாட்டில் இல்லை!**

வேகமாக வளரும் நகரங்களின் பட்டியலில் திருநெல்வேலியையும் கொண்டு வர, நம் கழக அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகின்றது. பல்வேறு நிதி நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்தியாவிற்கே முன்மாதிரி மாநிலமாக தமிழ்நாடு முன்னேறிக் கொண்டிருக்கிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆறு லட்சம் கோடி ரூபாயை ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு வரியாகச் செலுத்தி இருக்கிறது. ஆனால் ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்குத் திருப்பித் தந்தது வெறும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய்தான். நாம் கொடுக்கக்கூடிய ஒரு ரூபாய் வரிக்கு ஒன்றிய அரசு வெறும் 28 காசு மட்டுமே திருப்பிக் கொடுக்கிறது. இத்தகைய சூழலிலும் அரசு மக்களுக்குத் தேவையான ஏராளமான திட்டங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

வெள்ள நிவாரணமாக ஒன்றிய அரசு இதுவரை ஒரு ரூபாய் கூடத் தராத சூழலிலும், நம் முதலமைச்சர் அவர்கள் வெள்ளத்தால் மழையால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் 6,000 கொடுத்திருக்கிறார்கள். கழக அரசின் திட்டங்களால் பயன்படாத குடும்பங்களே தமிழ்நாட்டில் இல்லை என்ற அளவிற்குத் திட்டங்களைத் தீட்டி சிறப்போடு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

அதில் முக்கியமாக ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். உயர் கல்விக்குச் செல்லும் இரண்டு லட்சத்து 72 ஆயிரம் அரசுப் பள்ளி மாணவிகளுக்கு மாதாமாதம் ஆயிரம் ரூபாய் புதுமைப்பெண் திட்டத்தில் வழங்குகிறோம். நம் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று, முதல் கையெழுத்தாக மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து வசதித் திட்டத்தை அமல்படுத்தினோம்.

இரண்டரை ஆண்டுகளில் 450 கோடி முறை பெண்கள் கட்டணமில்லாமல் பயணித்துள்ளனர். இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மகளிரும் மாதாமாதம் 900 ரூபாய் சேமிக்கிறார்கள், வருடத்திற்குக் கிட்டத்தட்ட 12,000 ரூபாய் சேமிக்கிறார்கள்.

அதேபோல ஒன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக் கூடிய அரசுப் பள்ளி மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 17 லட்சம் மாணவர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள். இவையெல்லாம் கழக அரசின் சாதனைகளில் ஒரு சில துளிகள் மட்டுமே.

எல்லோருக்கும் எல்லாம் என்பதைப் போல,

**எல்லா ஊருக்கும் எல்லாம்!**

நிகழ்காலத்திற்கு மட்டுமல்ல, எதிர்காலத்திற்கும் தேவையான ஒவ்வொன்றையும் முதலமைச்சர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் செய்து வருகிறார். எல்லோருக்கும் எல்லாம் என்பதைப் போல, எல்லா ஊருக்கும் எல்லாம் என்று முதலமைச்சர் அவர்கள் திட்டங்களைத் தருகிறார்கள். சென்னையில் இருப்பது நெல்லையிலும் இருக்க வேண்டும், நெல்லையில் கிடைப்பவை தென்காசியிலும் கிடைக்க வேண்டும். இதுதான் திராவிட மாடல் அரசு.

இந்த நேரத்தில் அமைச்சர் கே.என். நேரு அவர்களை நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். அவர் கழகத்திற்கு மட்டும் முதன்மைச் செயலாளர் கிடையாது, களத்திலும் முதன்மையான களவீரர். திராவிட மாடல் அரசும், திராவிட முன்னேற்றக் கழகமும் நெல்லையின் வளர்ச்சிக்கு என்றும் துணை நிற்கும்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

**விழாவில் பங்கேற்றவர்கள்**

விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு, அமைச்சர்கள் கே.என். நேரு, ராஜ கண்ணப்பன், அனிதா ராதாகிருஷ்ணன், மனோ தங்கராஜ், முன்னாள் சபாநாயகர் ஆவுடையப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் ஞான திரவியம் சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் வகாப், காதர் பாட்சா என்கிற முத்துராமலிங்கம், சண்முகையா, முருகேசன், நெல்லை மேயர் சரவணன், நாகர்கோவில் மேயர் மகேஷ், நகராட்சி நிர்வாக இயக்குநர் சிவராசு, நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கார்த்திகேயன், துணை மேயர் ராஜு, மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர் ஜெகதீஷ், நெல்லை மாநகராட்சி ஆணையர் தாக்கரே சுபம் ஞானதேவராயன், மண்டலத் தலைவர் ரேவதி பிரபு, கழக நிர்வாகிகள், கழக தொண்டர்கள் உள்பட பலரும் பங்கேற்றனர்.




சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு தீர்மானங்கள் விளக்க தெருமுனை பொதுக்கூட்டம் 92 வது வட்டத்தில் உள்ள 20/ஏ பஸ் நிலையம் அருகே உள்ள அறிஞர் அண்ணா சிலை அருகே நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மதுரவாயல் வடக்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் எம்.பி.நவராஜ் தலைமை வகித்தார். மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11 வது மண்டலகுழு தலைவருமான நொளம்பூர் வே ராஜன் முன்னிலை வகித்தார். வட்ட கழக செயலாளர் எம். எம். ஜெயரத்தினம் வரவேற்றார். தலைமை கழக பேச்சாளர் அ.ச.பெருநற்கிள்ளி, மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., கே.நீலகன்டன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

### தமிழ்த் தாத்தா உ.வே.சா. 170வது பிறந்தநாள் இன்று!

# உ.வே.சா. திருவுருவச்சிலைக்கு அரசின் சார்பில் மரியாதை!

## அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்துச் சிறப்பிக்கின்றனர்!

சென்னை, பிப்.19

தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களின் திருவுருவச் சிலைக்கு இன்று மலர் வணக்க நிகழ்ச்சி நடைபெறுகிறது.

தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர் அவர்களின் தமிழ்த் தொண்டினைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் பிப்பிரவரித் திங்கள் 19ஆம் நாளன்று தமிழ்த் தாத்தாவின் திருவுருவச் சிலைக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சித் துறையால் மாலை அணிவித்து மலர்வணக்கம் செய்யப்பட்டு வருகிறது.

வான்புகழ் தமிழையும் வங்கக் கடற்காற்றையும் தமிழ் மூச்சுடன் உலகுக்கு உவந்தளித்த மகாமகோபாத்தியாய, மகாவித்துவான் உத்தமதானபுரம் வே. சாமிநாதையர் டி.லிட் அவர்களின் 170ஆம் பிறந்தநாளான 2024 பிப்ரவரித் திங்கள் 19ஆம் நாளன்று (திங்கள்கிழமை) சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் (07.03.1948 அன்று) நிறுவப்பட்ட திருவுருவச் சிலைக்கு காலை 9.30 மணிக்கு மலர்வணக்க நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

திராவிட வித்யாபூஷணம் உ.வே. சாமிநாதையர் (1855 - 1942) தமது இளம் பருவம் முதல் இறுதி நாள் வரையில் தமிழ் ஓலைச்சுவடிகளைத் தேடுவதையும், ஆராய்வதையும், அச்சிட்டு வெளியிடுவதையும் வாழ்நாட்குறிக்கோளாகக் கொண்டார். சங்க நூல் முதல் பிரபந்த நூல் வகை வரை எழுத்தெண்ணி ஆய்ந்து அச்சிட்டு வெளியிட்டார். நூலிலுள்ள பாடல்களின் முதற்குறிப்பு, நூற்கருத்து எனப் பல திறம் வாய்ந்த நுண்ணாய்ந்த குறிப்புகளை வெளியிட்ட திறத்தினை அவருடைய ஒவ்வொரு படைப்பிலும் காணலாம். அத்தகைய குறிப்புகள் தமிழ் மாணவர்கட்கு உற்றுழி உதவும் அருநிதிச் செல்வமாய்த் திகழ்கின்றன. அதனாலன்றோ அவரைத் தமிழ்த் தாத்தா என்று வணங்கி மகிழ்கின்றோம். அவர் அளித்த தமிழ்ச் செல்வங்களாகிய நூல்கள் இப்பொழுதும் அறிஞர்களுக்குக் கருத்துக் கருவூலமாக விளங்கி வருகின்றன.

87 ஆண்டுகள் வாழ்ந்த தமிழ்த்தாத்தா 87 நூல்களைப் படைத்தளித்து தமிழைப் போற்றினார். அவரைத் தமிழ்த் தொண்டர்களான செந்நெறிப் புலவர்கள் இன்றும் என்றும் கொண்டாடி மகிழ்வர் என்பது உறுதி.

தமிழ்ச் சுவடிகளைத் தேடித் திரட்டிப் பிழைகளைத் திருத்தி, உரை மாலையாக அளித்து, அச்சிட்டு, நூல்களாக வெளியிட்டுச் செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்த்த முதுபெரும் தமிழறிஞரின் பணி தமிழ் உலகில் காலமெலாம் புலவோர் வாயில், என்றென்றும் நிலைத்துப் போற்றுதற்குரிய தாகும்.

உ.வே.சாமிநாதையரின் நினைவினைப் போற்றும் வகையில் அமைச்சர் பெருமக்களும், அரசு உயர் அலுவலர்களும், தமிழறிஞர்களும், பொதுமக்களும் மலர் வணக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சிக்கான முன்னெடுப்புகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது.

# சிவகங்கையில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் - 1500-க்கும் மேற்பட்ட கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கினார்!





சிவகங்கை மாவட்டக் கழகம் சார்பில், கூட்டுறவுத் துறை அமைச்சர் – மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் ஏற்பாட்டில் வைரவன்பட்டியில் நடைபெற்ற மாபெரும் விழாவில், சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த கழக மூத்த முன்னோடிகள் 1500–க்கும் மேற்பட்டோருக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பொற்கிழியும், நல உதவிகளும் வழங்கிப் பெருமைச் சேர்த்தார்கள்.



சிவகங்கை மாவட்ட தி.மு.க. சார்பில் வைரவன்பட்டியில் நடைபெற்ற மாபெரும் விழாவில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாவட்ட மகளிர் அணித் தலைவர் திருமதி எஸ். மணிமேகலைக்கு பொற்கிழியும், நலஉதவியும் வழங்கிய போது எடுத்த படம். அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் உடன் உள்ளனர்.




சிவகங்கை மாவட்டம் – வைரவன் பட்டியில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி பேருரையாற்றுகிறார்!





கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேவகோட்டையில், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் (நினைவில் வாழும்) வே.ரூசோவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், திருமதி ஜோன்ஸ் ரூசோ, நிஷாந்த் ரூசோ உள்ளிட்டோர் அப்போது உடனிருந்தனர்.





வைரவன்பட்டியில், பிரம்மாண்டப் பந்தல் கொள்ளாது திரண்டிருந்த கழகத்தினருடன் கரங்குலுக்கி தமது மகிழ்ச்சியைப் பகிர்ந்து வாழ்த்துப் பெறுகிறார், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்!

# ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’- பாசிசம் வீழட்டும் - இந்தியா வெல்லட்டும்!
# நாடாளுமன்றத் தொகுதி வாரியாக எழுச்சி பொங்க நடைபெற்ற பரப்புரைக் கூட்டங்கள்!






கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உரையாற்றினார்.




கழகப் பொருளாளர் – டி.ஆர். பாலு எம்.பி. அவர்கள் உரையாற்றும் காட்சி.




கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என். நேரு அவர்கள் மற்றும்
கழக துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி ஆகியோர் உரையாற்றினர்.




கழக துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்கள் உரையாற்றும் காட்சி.




கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் உரையாற்றுகிறார்.




கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. அவர்கள் மற்றும்
மாவட்ட பொறுப்பு அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் ஆகியோர் உரையாற்றினர்




கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் – அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் உரையாற்றுகிறார்.




கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் – டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. அவர்கள் உரையாற்றுகிறார்.



திருநெல்வேலி சந்திப்பு பெரியார் பேருந்து நிலையத்தில் நேற்று (18.02.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ரூ.149.40 கோடி மதிப்பிலான நிறைவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூ. 423.13 கோடி மதிப்பிலான புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள். உடன், தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு , நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் , நகராட்சி நிருவாக இயக்குநர் சு.சிவராசு, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.கா.ப.கார்த்திகேயன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய இணை மேலாண்மை இயக்குநர் ஆனந்த் மோகன், , திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம் , பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் , மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், மாநகராட்சி ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், துணை மேயர் கே.ஆர்.ராஜு, மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ் உட்பட பலர் உள்ளனர்.





திருநெல்வேலி சந்திப்பு பெரியார் பேருந்து நிலையத்தில் நேற்று (18.02.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து நெல்லையப்பர் கோவில், சமதானபுரம், வீரபாண்டியன் மற்றும் பெருஞ்செல்வி ஆகிய பகுதிகளுக்கு பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். உடன் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு , நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதாரா. ராதாகிருஷ்ணன், பால்வளத்துறை அமைச்சர் த.மனோதங்கராஜ் , நகராட்சி நிவாக இயக்குநர் சு.சிவராசு, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர். கா.ப.கார்த்திகேயன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய இணை மேலாண்மை இயக்குநர் ஆனந்த் மோகன், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், மாநகராட்சி ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், துணை மேயர் கே.ஆர்.ராஜு, மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ் உட்பட பலர் உள்ளனர்.

### இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில்

# ரூ.29.93 கோடியில் காசநோய், நெஞ்சக மருத்துவம், தொற்றுநோய் பிரிவுக் கட்டடங்கள்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, பிப்.19-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் (17.2.2024) அன்று தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் சென்னை, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் 29.93 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காசநோய் மற்றும் நெஞ்சக மருத்துவம் மற்றும் தொற்றுநோய் பிரிவுக் கட்டடத்தை திறந்து வைத்தார். மேலும், இன்போசிஸ் நிறுவன அறக்கட்டளையின் சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனை ஆகியவற்றில் நிறுவப்பட்டுள்ள மருத்துவ உபகரணங்களை பயன்பாட்டிற்காக வழங்கினார்.

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவக் கருவிகளை நிறுவுதல், அனைவருக்கும் நல்வாழ்வு என்கிற உயரிய நோக்கினை செயல்படுத்தும் வகையில் “மக்களைத் தேடி மருத்துவம்” சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் “இன்னுயிர் காப்போம்நம்மைக் காக்கும்48”, சுகாதார நடைபாதை திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை வாயிலாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் காசநோய் மற்றும் நெஞ்சக மருத்துவம் மற்றும் தொற்றுநோய் பிரிவுக் கட்டடம் சென்னை, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில்

205 படுக்கை வசதிகளுடன், மொத்தம் 77,554 சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் ஐந்து தளங்களுடன் 29.93 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காசநோய் மற்றும் நெஞ்சக மருத்துவம் மற்றும் தொற்றுநோய் பிரிவுக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இக்கட்டடத்தின் தரை தளத்தில், வரவேற்பு மற்றும் தகவல் அறை.

நோயாளிகள் காத்திருப்புப் பகுதி, புறநோயாளிகள் பிரிவு, கதிரியக்க நோய் கண்டறிதல் பிரிவு, ஆய்வகம், காய்ச்சல் புற நோயாளிகள் பிரிவு (ஆண்கள் மற்றும் பெண்கள்), தொற்று அறுவை அரங்கம் போன்ற வசதிகளும்;

முதல் தளத்தில், முதலமைச்சர் மருத்துவ காப்பீட்டு திட்ட அறை, உடன்இருப்போர் காத்திருப்பு அறை, ஆலோசனை அறை, மருத்துவ செய்முறை விளக்க அறை, நுரையீரல் செயல்திறன் முன்னேற்றும் சிகிச்சை மையம், தீவிர சிகிச்சைப் பிரிவு, இடைநிலை தீவிர சிகிச்சைப் பிரிவு, சிகிச்சை அறை போன்ற வசதிகளும்;

இரண்டாம் தளத்தில், உணவு வழங்கும் பகுதி, உடன் இருப்போர் காத்திருக்கும் அறை, நுரையீரல் செயல்திறன் ஆய்வகம், தொற்றுப் பிரிவு – ஆண்கள் மற்றும் பெண்கள், மூச்சுக் குழாய் உள்நோக்கி பரிசோதனை அறை, மருந்துக்கட்டு அறை, சலவை நிலையம், நுரையீரல் நோய்கள் பிரிவு – ஆண்கள் மற்றும் பெண்கள் போன்ற வசதிகளும்;

மூன்றாம் தளத்தில், நூலகம், நித்திரை மதிப்பீட்டு ஆய்வகம், நுரையீரல் இடையீட்டு அரங்கம், அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய கவனிப்பு அறை, நோய் - நுண்கிருமி நீக்கும் அறை, ஆண்கள் மற்றும் பெண்கள் சிகிச்சைப் பிரிவுகள், நுரையீரல் நோய்கள் பிரிவு போன்ற வசதிகளும்;

நான்காம் தளத்தில், பொது ஆய்வகம், NIRT அறை, NTEP அறை, செய்முறை விளக்க அறை, சளி பரிசோதனை வார்டு போன்ற வசதிகளும்;

ஐந்தாம் தளத்தில், துணிகள் சேமிப்பு அறை, வயிற்றுபோக்கு சிகிச்சைப் பிரிவு, FLU வார்டு, டெங்கு காய்ச்சல் சிகிச்சை பிரிவு – ஆண்கள் மற்றும் பெண்கள், நாய்க்கடி சிகிச்சை பிரிவு போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இக்கட்டடத்தின் அனைத்து தளங்களிலும் மாற்றுத் திறனாளிகளுக்கான கழிப்பிடம், பொது கழிப்பிடம், 3 மின்தூக்கிகள், சாய்வுதளம் போன்ற பிற வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இன்போசிஸ் நிறுவன அறக்கட்டளையின் சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து 30 கோடி ரூபாய் மதிப்பிலான மருத்துவ உபகரணங்களை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனைகளின் பயன்பாட்டிற்காக வழங்குதல். இன்போசிஸ் நிறுவன அறக்கட்டளையின் சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து சென்னை, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் இருதய மகப்பேறியல் துறையில் நிறுவப்பட்டுள்ள 10 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய கேத்லேப் (Cath Lab) கருவி மற்றும் சென்னை, அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனையின் நான்காவது தளத்தில் நிறுவப்பட்டுள்ள 20 கோடி ரூபாய் மதிப்பிலான அனைத்து அதிநவீன, உயர் சிகிச்சை மற்றும் உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் அம்மருத்துவமனைகளின் பயன்பாட்டிற்காக வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. சங்குமணி, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை முதல்வர் மரு. தேரணிராஜன், அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனை இயக்குநர் மரு.டி.எஸ்.மீனா, இன்போசிஸ் நிறுவனத்தின் துணை தலைவர் பி.என். அனில்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சர்வதேச தகவல் தொழில்நுட்ப மாநாடு!

### பேரவையில் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் தகவல்!

சென்னை, பிப்.19-

சென்னையில் வரும் 23 ஆம் தேதி சர்வதேச அளவிலான தகவல் தொழில்நுட்ப மாநாடு தொடங்கவுள்ளதாக தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அறிவித்தார்.



சட்டப் பேரவையில் வியாழக்கிழமை கேள்வி நேரத்தின் போது, இதுகுறித்த வினாவை, அதிமுக உறுப்பினர் ஏ.கே.செல்வராஜ் எழுப்பினார். அதற்கு, அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அளித்த பதில்:

கோவை, மதுரை போன்ற இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை அதிகளவு உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். முக்கியத்துவம் வாய்ந்த துறைக்கு எந்தளவுக்கு ஊக்கம் அளிக்க முடியுமோ அந்த அளவில் ஊக்கம் அளிக்கப் படுகிறது. சாதனை அளவு: சென்னை மாநகரப் பகுதியில், ஓராண்டுக்கு சராசரியாக தகவல் தொழில்நுட்பப் பணிகளுக்காக 4 மில்லியன் முதல் 5 மில்லியன் சதுர அடியில் கட்டடம் கட்டப்படுவதோ அல்லது குத்தகைக்கு எடுப்பதோ வழக்கம். ஆனால், கடந்த ஆண்டு சாதனை அளவாக 11 மில்லியன் சதுர அடியில் தகவல் தொழில்நுட்ப அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. கடந்த அதிமுக ஆட்சியில், எல்காட் நிறுவனம் திருச்சி, சென்னை, கோவையில் கட்டடங்களை கட்டின. அதில், சென்னை, கோவையில் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறப்படவில்லை. இந்த விவகாரம் தொடர்பாக, நீதிமன்றத்திலும் வழக்கு உள்ளது. இதனால் கோவையில் 2.5 லட்சம் சதுர அடியில் கட்டப்பட்ட அலுவலகத்தை திறக்க முடியவில்லை. அதேசமயம், கோவைக்கு அலுவலக பயன்பாட்டுக்கான கட்டடங்களின் தேவை அதிகமாக உள்ளது. அந்தக் கட்டடம் திறக்கப்பட்டால் கோவையில் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். வெள்ள பாதிப்பு உள்ள பகுதிகளில் வேலைவாய்ப்புகளை குவிக்கக் கூடாது என்ற கருத்து உள்ளது. அதே போன்று, ஒரே ஊரில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் இருப்பதற்குப் பதிலாக வெவ்வேறு நகரங்களுக்கு பிரித்து அளிக்கும் நிலை உலகம் முழுவதும் உள்ளது. பிப்.23, 24இல் மாநாடு: பெங்களூர், ஹைதராபாத் போன்ற நகரங்களில் குவியும் வேலைவாய்ப்புகளை பிரித்து, சென்னை, கோவை, மதுரை போன்ற நகரங்களுக்கு அளிக்கப்படுகின்றன. நம்முடைய நகரங்களைத் தேர்வு செய்வதற்கு காரணம், சர்வதேச அளவில் 17 சதவீத பொறியாளர்களை உருவாக்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இத்தகைய மனித வளம் கொண்ட மாநிலத்துக்கு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை ஈர்ப்பதுதான் எங்களது இலக்கு. அதன் ஒருபகுதியாக, வரும் 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் மிகப்பெரிய சர்வதேச அளவிலான தகவல் தொழில்நுட்ப மாநாட்டை நடத்தவுள்ளோம். உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு இணையான இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர் என்றார் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன்.



வேளச்சேரி இராஜலஷ்மி நகர்,சென்னை தொடக்க பள்ளி ( மாநகராட்சி) ஆண்டு விழாவில் கழக தேர்தல் பணிச் செயலாளர் – சென்னை பெருநகர மாநகராட்சி ஆளுங்கட்சி பொருளாளர்,177 வது வார்டு மாமன்ற உறுப்பினர்,வேளச்சேரி,பெ.மணிமாறன் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் தலைமையாசிரியை திருமதி.லோகவாணி, ரோட்டரி சங்க பிரசிடென்ட் ஸ்ரீதர்,பொதுநல சங்க நிர்வாகி முத்துமாலை, மாவட்ட துணை அமைப்பாளர்.க.பத்மராஜன்,மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர்,ந.நீலகண்டன்,பகுதி பிரதிநிதி அ.வேல்முருகன், த.மேகநாதன், ஆர். ராஜேஷ்,ஆசிரியர்கள்,பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### கிள்ளியூர் தொகுதியில் – பழுதடைந்த சிமெண்ட் குழாய்களை அகற்றிவிட்டு

# புதிய குழாய்கள் அமைக்கும் பணி முன்னுரிமை தந்து எடுத்துக் கொள்ளப்படும்!

### சட்டப் பேரவையில் அமைச்சர் கே.என்.நேரு பதில்!

**சென்னை, பிப். 19-**

**சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அமைச்சர் கே.என். நேரு, கிள்ளியூர் தொகுதியில் பழுதடைந்த சிமெண்ட் குழாய்களை அகற்றி விட்டு, புதிய குழாய் அமைக்கும் பணி முன்னுரிமை தந்து எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.**



இதுகுறித்து சட்டப் பேரவையில் கிள்ளியூர் தொகுதி உறுப்பினர் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதிலும் வருமாறு:-

செ. ராஜேஷ் குமார்: 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின்போது அந்த மக்களுக்கு பாதுகாப்பாக குடிநீர் வழங்க வேண்டுமென்று 2006 ஆம் ஆண்டு சுனாமி கூட்டுக் குடிநீர் திட்டம் கிள்ளியூர் தொகுதி வழியாக 4 தொகுதிகளைக் கடந்து கன்னியாகுமரிக்குச் சென்றடைகிறது. அந்தக் காலத்தில் போட்ட சிமெண்ட் pipe அதாவது 3 3/4 மீட்டர் road வீதி இருக்கிறது என்றால் அந்த road நடுவிலே சிமெண்ட் pipe பதித்ததால் இன்றைக்கு நிறைய இடங்களில் அது உடைந்து தொடர்ந்து விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. Roadம் இன்றைக்கு முக்கியமாக பழுதடைந்து போய்விட்டது. நம்முடைய நெடுஞ்சாலைத் துறைமூலம் பணம் ஒதுக்கப்பட்டும் வேலைகளைச் செய்ய முடியாமல் இருக்கிறது. எனவே, அங்குள்ள பழைய சிமெண்ட் குழாய்களை அகற்றிவிட்டு, தற்போதுள்ள நவீன technology குழாய்களை அமைத்தால்தான் மீண்டும் விபத்துகள் ஏற்படாமல் இருக்கும். எனவே, போர்க்கால அடிப்படையில் குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் அதைச் செய்து தர வேண்டும்.

அமைச்சர் கே.என். நேரு: குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ஒவ்வோராண்டும் ஒவ்வொரு மாதிரியாக குழாய்கள் அமைக்கப்படுகின்றன. முன்பு சிமெண்ட் குழாய் அமைக்கப்பட்டது. பின்னர், வேறு வகையாக குழாய்கள் அமைக்கப்பட்டன. அவையெல்லாம் அந்தளவிற்கு சரியானதாக இல்லை. புதிய தொழில்நுட்பத்தினாலான குழாய்கள் அமைக்கும் முறை தற்போது வந்திருக்கிறது. அவை நடைமுறைக்கு வரும்போது தற்போது நிறைவேற்றப்படும் திட்டங்களிலெல்லாம் இரும்புக் குழாய்களில் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் சிமெண்ட் பூசப்பட்டு நீண்ட காலம் பயன்படுத்தும் வகையில் குழாய்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே அமைக்கப்பட்ட வழித்தடங்களில் பல குழாய்கள் பழுதடைந்து, தண்ணீர் சரியாக போகவில்லை என்று 60 இடங்களுக்கும் மேலாக ஆய்வு செய்து, மறுசீரமைப்பின்மூலம் இந்த ஆண்டில் புதிய குழாய்கள் பதிக்கப்பட்டு வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து நாளை அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கப்படும். நிதி ஒதுக்கீடு என்பது சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு, உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைக் கருத்தில்கொண்டு, மிகவும் அவசரம் எனில், முதலிலே முன்னுரிமை தந்து அப்பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்தார்.

### மனித – விலங்கு மோதல்களைத் தடுக்க

# 3 சிறப்பு இரவு ரோந்துக் குழுக்கள் - யானைபுகா அகழிகள் அமைத்து நடவடிக்கை!

### சட்டப் பேரவையில் அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் தகவல்!

**சென்னை, பிப். 16-**

**சட்டப்பேரவையில் கேள்வி - நேரம் பகுதியில் பதிலளித்த அமைச்சர் டாக்டர் பா.மதிவேந்தன், மனித விலங்கு மோதல்களைத் தடுக்க 3 சிறப்பு இரவு ரோந்து குழுக்கள் அமைத்தும், யானைபுகா அகழிகள் அமைத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.**

**சட்டப் பேரவையில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் டாக்டர் பா.மதிவேந்தன் அளித்த பதிலும் வருமாறு:-**



**P.R.G.அருண்குமார்:** (அ) கவுண்டம்பாளையம் தொகுதி, ஆனைகட்டி மற்றும் பெரியநாயக்கன் பாளையம் ஆகிய பகுதிகளில் வனவிலங்குகள் வருவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன்:** ஆனைகட்டி, பெரியநாயக்கன்பாளையம் பகுதிகளில் வனவிலங்குகள் வருகையைத் தடுக்க, அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மனிதவிலங்கு மோதல்களைத் தடுக்க 3 சிறப்பு இரவு ரோந்து குழுக்கள் அமைத்தும், யானைபுகா அகழிகள் அமைத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**P.R.G.அருண்குமார்:** காட்டுப் பன்றிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த, பஞ்சாயத்து நிர்வாகமே சுட்டுக் கொல்லலாம் என கேரள அரசு அனுமதி வழங்கியுள்ளது. எனவே, கேரள அரசைப் போன்றே, தமிழ்நாடு அரசும் காட்டுப் பன்றிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன்:** கோவை வனக் கோட்டத்தின் முக்கியப் பிரச்சினையாகவும், தினசரி நிகழ்வாகவும் மனிதவிலங்கு மோதல்கள் அதிகளவில் ஏற்படுகின்றன. இந்நிகழ்வுகள் ஏற்படாமல் தவிர்க்கும் வகையில், வேட்டைத் தடுப்புக் காவலர் மற்றும் யானை விரட்டும் காவலர் அடங்கிய 3 சிறப்பு இரவு ரோந்துக் குழுக்கள், Alpha, Beta, Gamma என்ற பெயரில் அமைக்கப்பட்டு, தீவிர கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி குழுக்களில் உள்ள 16 பணியாளர்கள் தினசரி மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 8 மணி வரை தொடர் வனவிலங்குகள் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

மேலும், தற்போது கூடுதலாக பெரியநாயக்கன்பாளையம் வனச் சரகத்திற்கு 6 பணியாளர்கள் மற்றும் காரமடை வனச் சரகத்திற்கு 6 பணியாளர்கள் வீதம் வனவிலங்குகள் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதைத் தவிர, காவல் துறை, மின்வாரியப் பணியாளர்களுடன் வனத் துறைப் பணியாளர்கள் இணைந்து antidepredation committee ஒன்று அமைக்கப்பட்டு, மனிதவிலங்கு மோதல்களைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், பெரியநாயக்கன் பாளையம் வனச் சரகத்தில், வன விலங்குகளின் நடமாட்டம், வன விலங்குகளின் குணாதி சயம், பயிரிடும் முறையில் செய்ய வேண்டிய மாற்றம் மற்றும் தோட்டங்களின் மாற்றம் குறித்து தொடர்ச்சியாக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் ஒரு புதிய முயற்சியாக ‘Thadam’ என்னும் WhatsApp குழு ஒன்று அமைக்கப்பட்டு, அதில் யானைகள் நடமாட்டம் குறித்து தகவல் பகிரவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதைத் தவிர, கூடுதலாக இந்த நிதியாண்டில் 3 கி.மீ. தூரத்திற்கு யானைபுகா அகழிகள் பராமரிக்கப்பட்டு, சூரிய மின்சக்தியில் இயங்கும் குடிநீர்த் தொட்டியும் அமைக்கப்பட்டுள்ளது.

யானைகளின் உணவுத் தேவையை வனத்திலேயே பூர்த்தி செய்யும் பொருட்டு NABARD திட்டத்தின்கீழ் சுமார் 25 இலட்சம் செலவில் 20,000 நாற்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. இதைத்தவிர, 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் ஆண்டுகளில் மனித விலங்கு மோதலைத் தடுக்க 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.41 இலட்சம் மதிப்பீட்டில் யானைபுகா அகழிகள் மற்றும் 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சூரிய மின்சக்தி வன உயிரின குடிநீர்த் தொட்டிகள் இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர் யானைகளைப்பற்றி கேட்டார். இத்தனை நடவடிக்கைகள் இந்த அரசால் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதை விரிவாகச் சொன்னால்தான் புரியும். இதைத்தவிர, சில உயிரிழப்பு ஏற்பட்டால் நிவாரணமாக கடந்த ஆட்சியில் 4 இலட்சம் ரூபாய் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அதை அதிகப்படுத்தி 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தினார்கள். கடந்த இரு மாதங்களுக்கு முன்பு போன மாதம் ரூ.5 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி கூடிய விரைவில் அரசாணை வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்டுப்பன்றிகளைப் பொறுத்தவரையில், கேரள மாநிலத்தில் order வாங்கியது போன்று, தமிழகத்தில் order வாங்க வேண்டுமென்றுதான் நிறைய பேர் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். Wildlife Protection Act, 1972 வன விலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972ன்படி, வன விலங்குககளை 6 விதமாக ஒரு அட்டவணை செய்து Schedule I to Schedule VI வரைக்கும் வைத்திருக்கிறார்கள். ஆனால், இப்போது அந்த Scheduleல் கடந்த ஏப்ரல் மாதம் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் பதிலளித்தார்.



தி.மு.கழக குமரி மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் குமரி மேற்கு மாவட்ட செயலாளரும் தமிழ்நாடு பால்வளத்துறை அமைச்சருமான த.மனோ தங்கராஜ், திமுக மாநில சட்டத்துறை செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ கலந்துகொண்டு War room அலுவலகத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட வழக்கறிஞர் அணியின் அமைப்பாளர் எம். ஜோசப் ராஜ் தலைமையும், மாவட்ட தலைவர் பி.ஜெ.ஸ்டீபன் ராஜ் மற்றும் துணை அமைப்பாளர்கள் சௌந்தர்ராஜ், ஹென்சிலின் ஜோசப், பினு பாரத் வின்செண்ட், ஜெங்கின்ஸ் செல்வராஜன் ஆகியோர் முன்னிலையும் வகித்தார்கள். இந்நிகழ்ச்சியில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன், துணைச் செயலாளர் ஜெ. பச்சையப்பன், தினேஷ், தலைமைக் கழக வழக்கறிஞர் கே.ஜே. சரவணன், தலைமை செயற்குழு உறுப்பினர் ரிமோன் மனோ தங்கராஜ், வழக்கறிஞர்கள் மற்றும் கழக வழக்கறிஞர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மதத்தை வைத்து இங்கு அரசியல் செய்ய முடியாது!

# தமிழ்நாட்டு மக்கள், ஒருபோதும் ஏமாற மாட்டார்கள்!

## இராமநாதபுரத்தில் ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

**இராமநாதபுரம், பிப்.19-**

**இராமநாதபுரத்தில் ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ பரப்புரை பொதுக்கூட்டம் நடைபெற்றது.**

**லட்சக்கணக்கான மக்கள் திரண்டிருந்த இந்த பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் தி.மு.க இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன், விளையாட்டு மற்றும் சிறப்பு செயலாக்கத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் எழுச்சி உரையாற்றினார்.**

**அப்போது அவர், “தமிழ்நாடு மத நல்லிணக்க பூமி. மதத்தை வைத்து இங்கு அரசியல் செய்ய முடியாது. தமிழ்நாட்டு மக்கள், அதற்கு ஒருபோதும் ஏமாற மாட்டார்கள்” என்று சூளுரைத்தார்.**

**இக்கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**




நேற்று மாலையில் தொடங்கிய நிகழ்ச்சிகள், சிவகங்கை சென்று கழகக் கொடியை இரண்டு இடங்களில் ஏற்றிவிட்டு, இன்று காலை சிவகங்கையில் கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு, பொற்கிழியை வழங்கிவிட்டு, அதன் பிறகு, இங்கு வந்து ராமநாதபுரத்தில் இளைஞர் அணியின் சார்பாக, கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைத்துவிட்டு, பிறகு ராமநாதபுரத்தில் கழகத்தின் மூத்த முன்னோடிகள் 1,550 பேருக்கு பொற்கிழிகளை வழங்கிவிட்டு இன்று இந்தப் பிரச்சாரக் கூட்டத்திற்கு உங்களையெல்லாம் சந்திக்க வந்திருக்கின்றேன். இது மறக்க முடியாத நாள்.

**மூன்று நாட்கள் 40 தொகுதிகளிலும் பிரச்சாரக் கூட்டங்கள்!**

நேற்று, இன்று, நாளை மூன்று நாட்களும் நம் தலைவரின் குரலாக ‘உரிமை மீட்கின்ற பிரச்சாரக் கூட்டத்தை’ நடத்த மூன்று நாள்கள் தலைவர் உத்தரவிட்டிருக்கிறார்கள் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 39 தொகுதிகளிலும் பாண்டிச்சேரியுடன் 40 தொகுதிகளிலும் இந்தப் பிரச்சாரக் கூட்டங்கள் மூன்று நாட்கள் நடக்க இருக்கின்றன.

நேற்று சில நாடாளுமன்றத் தொகுதிகளில் பிரச்சாரக் கூட்டத்தை ஆரம்பித்து விட்டோம். ஆனால், இன்றைக்கு ராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் என்னுடைய பிரச்சாரக் கூட்டத்தை ஆரம்பிக்கின்றேன்.

இன்று காலை சிவகங்கையில் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறேன். பல சட்டமன்ற தொகுதிகளுக்கும் சென்று வந்து விட்டேன். செல்கின்ற வழியெங்கும் மக்கள் மிகுந்த எழுச்சியுடனும் அன்புடனும் வரவேற்கிறார்கள். அந்த எழுச்சியைப் பார்க்கும் பொழுது நிச்சயம் ஒன்று தெரிகின்றது.

கண்டிப்பாக இந்த முறை ராமநாதபுரம் மாவட்டம் நாடாளுமன்றத் தேர்தலில் உதயசூரியனின் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது. நம் பிரச்சாரக் கூட்டத்திற்குப் பெயர், “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்”.

சேலத்தில் இளைஞர் அணி மாநாட்டை நாம் நடத்தினோம். சென்ற மாதம் 21ஆம் தேதி இன்றைக்கு உங்களின் மாவட்டக் கழகச் செயலாளர் ராமநாதபுரத்தில் ஒரு மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறார். அந்த அளவிற்கு சிறப்பாக இன்னும் சொல்ல போனால், ராமநாதபுரத்தில் நான் பேசப்போகிறேன் என்று மூன்று நாட்களுக்கு முன்புதான் முடிவானது. மூன்றே நாட்களில் எவ்வளவு பெரிய எழுச்சியான கூட்டத்தைக் கூட்டி இருக்கிறார். இவ்வளவு ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறார் என்றால், உங்கள் அனைவரின் சார்பாக நம் மாவட்டக் கழகச் செயலாளர் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாவட்ட மாநாடு போல கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது!**

இங்கு மட்டுமல்ல, நேற்று ஒரு பத்துத் தொகுதிகளில் நம் கழகத்தின் மூத்த தலைவர்கள் எல்லாம் பங்கேற்றார்கள். ஒவ்வொரு கூட்டமும் ஒரு மாவட்ட மாநாடு போல நடந்து கொண்டிருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது, சென்ற முறை நாம் பெற்ற வெற்றியை விட 39 தொகுதியில் வெற்றி பெற்றோம். ஒன்றே ஒன்றில் மட்டும் வெற்றி வாய்ப்பை இழந்தோம். இந்த முறை 40 க்கு 40 திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி வெல்லப் போவது உறுதி.

இளைஞர் அணி மாநாட்டிற்கு உங்களின் மாவட்டத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வந்திருந்தார்கள். மாநாட்டில் கிட்டத்தட்ட 7 லட்சம் இளைஞர்கள் கலந்து கொண்டார்கள் என்று புள்ளிவிவரக் கணக்குச் சொல்கிறது இரண்டு லட்சம் பேர் மாநாட்டின் திடலுக்குள்ளேயே வர முடியவில்லை. அந்த அளவிற்குப் போக்குவரத்து நெரிசல். இந்த நேரத்தில் இளைஞர் அணிச் செயலாளராக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் எல்லாம் வந்துதான் அந்த மாநாட்டை ஒரு வெற்றி மாநாடாக மாற்றிக் காட்டி இருக்கிறீர்கள். இளைஞர் அணி மாநாடு 100 சதவிகித வெற்றி என்று நாம் சொல்கிறோம். அது 100 சதவிகித வெற்றியா? கிடையாது. ஒப்புக்கொள்ள மாட்டேன். 50 சதவிகித வெற்றிதான் நாம் பெற்றிருக்கிறோம். பாதிக் கிணற்றைத்தான் நாம் தாண்டி இருக்கிறோம்.

**அனைத்து தொகுதிகளிலும் வெற்றி பெற்றால்தான், 100 சதவிகித வெற்றி.**

எப்போது 100% வெற்றியாகும்? நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்து தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற்றால்தான் அது 100 சதவிகித வெற்றி. நம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு வெற்றி.

இந்த மாநாடு நாடாளுமன்றத் தேர்தல் நடக்கின்ற இந்தச் சூழ்நிலையில் நடந்தேறியிருக்கிறது. நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். சென்ற முறை 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடந்த பொழுது, நாம் எதிர் கட்சி. ஆட்சியில் இல்லை. ஆனால், தமிழ்நாட்டு மக்கள் ஒட்டுமொத்தமாக நம்மை வெற்றிபெற வைத்து டெல்லிக்கு அனுப்பினார்கள். மிகப்பெரிய வெற்றியைக் கொடுத்தார்கள். இன்னும் சொல்லப்போனால் இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெருமையைத் தேடித் தந்தனர் தமிழக மக்கள்.

**நாம் அத்தனை பேரும் ஒரு சபதம் எடுத்துக்கொள்ள வேண்டும்!**

இந்த முறை நாம் அத்தனை பேரும் ஒரு சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும். தொகுதிப் பங்கீடு, வேட்பாளர் பட்டியல் பற்றி எல்லாம் நீங்கள் கவலைப்படாதீர்கள். தலைவர் அதையெல்லாம் முடிவு எடுப்பார். ஒரு நல்ல வேட்பாளரை வெற்றிபெறக் கூடிய வேட்பாளரை அது கூட்டணியாக இருந்தாலும் இருக்கலாம், அதில் நம் உதயசூரியன் நின்றாலும் நிற்கலாம். அதை நான் சொல்ல முடியாது. தலைவர்தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால், யாரை தலைவர் வெற்றி வேட்பாளராக அறிவிக்கிறாரோ அவரது வெற்றிக்காகப் பாடுபட வேண்டும்.

மாநாட்டில் பேசும் பொழுது தலைவர் சொன்னார், “வேட்பாளரைப் பற்றி எல்லாம் நீங்கள் கவலைப்படாதீர்கள் நான் பார்த்துக் கொள்கிறேன். யார் வெற்றி பெற போகிறார்களோ அவர்கள் தான் வேட்பாளர்கள்” என்று தலைவர் அவர்கள் சொன்னார் .

நான் உங்களிடத்தில் கேட்டுக்கொள்வதெல்லாம், யாரை தலைவர் வேட்பாளராக அறிவித்தாலும், நீங்கள் மனதில் ஒன்றே ஒன்றுதான் வைத்துக்கொள்ள வேண்டும். நாம் ராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் உங்களின் வேட்பாளர் முத்தமிழறிஞர் கலைஞர் தான் உங்களின் வேட்பாளர். நீங்கள், அவரைத்தான் வெற்றிபெற வைத்து, டெல்லிக்கு அனுப்ப போகிறீர்கள். நாடாளுமன்றத்திற்கு அனுப்பப் போகிறீர்கள். அந்த உணர்வுடன் நீங்கள் அத்தனை பேரும் தேர்தல் பணியில் ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

ராமநாதபுரம் மாவட்ட சட்டமன்றத் தொகுதிகள், திருவாடனை, பரமக்குடி, முதுகுளத்தூர், ராமநாதபுரம் என நான்கு தொகுதிகளை வெற்றி பெற வைத்துள்ளோம். பல வருடங்களுக்குப் பிறகு பரமக்குடி தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தை வெற்றி பெற வைத்திருக்கிகிறோம். எனவே, இந்த வெற்றி தொடர வேண்டும் என்று உங்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

மத நல்லிணக்கத்திற்கு பெயர் பெற்ற ஊர், இந்த ராமநாதபுரம். அதற்குச் சிறந்த உதாரணமே மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்சா என்கிற முத்துராமலிங்கம்தான். இந்துவாக இருக்கட்டும், முஸ்லிமாக இருக்கட்டும், கிறிஸ்துவராக இருக்கட்டும் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை பேரும் சகோதர சகோதரிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

**தமிழ்நாட்டு மக்கள் என்றைக்கும் துணை போக மாட்டார்கள்!**

முத்துராமலிங்கம் அவர்கள் பேசும்போது “மதத்தை வைத்து அரசியல் செய்ய முயற்சிக்கிறார்கள், அதற்கு தமிழ்நாட்டு மக்கள் என்றைக்கும் துணை போக மாட்டார்கள். இங்கு அண்ணன் நவாஸ் கனி இருக்கிறார். பொங்கலுக்கு அவரை என் வீட்டிற்கு அழைப்பேன், நன்றாகக் கொண்டாடுவோம். ரம்ஜானுக்கு அவர் எனக்கு பிரியாணி அனுப்பி வைப்பார். இதுதான் தமிழ்நாட்டு மக்கள். மதத்தை வைத்து அரசியல் செய்கிற ஒன்றிய பா.ஜ.க. அரசின் நினைப்பு என்றென்றும் பலிக்காது”என்று சொன்னார். இதுதான் தமிழ்நாடு.

இந்தக் கூட்டத்திற்குப் பெயர் ``உரிமைகள் மீட்புக் கூட்டம்”. கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க ஆட்சியில் மாநில உரிமைகள் அத்தனையையும் ஒன்றிய பா.ஜ.க அரசிடம் விட்டுக் கொடுத்திருக்கிறார்கள். புதிய கல்விக் கொள்கை என்று கொண்டு வருகிறார்கள். இதுவரைக்கும் பத்தாம் வகுப்புக்கு, 12ஆம் வகுப்புக்கு பொதுத்தேர்வு இருந்தது, இப்போது இந்த புதிய கல்விக் கொள்கையில் எட்டாம் வகுப்பிற்கு பொதுத் தேர்வு என்று சொல்கிறார்கள், ஐந்தாம் வகுப்பிற்கு பொதுத் தேர்வு என்று சொல்கிறார்கள். நம் வீட்டுப் பிள்ளைகள் படிக்கக் கூடாது என்று இப்படி புதிய புதிய திட்டங்களைக் கொண்டு வந்து திணிக்கிறார்கள்.

கிராமங்களில் இருந்து ஏழை எளிய மாணவர்கள் எல்லாம் படித்து மருத்துவராக வேண்டும் என்று கலைஞர் நுழைவுத் தேர்வையே ரத்து செய்தார். மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் இருந்த வரை, தமிழ்நாட்டுக்குள் நீட் தேர்வை நுழைய விடவில்லை. அதற்காக அவரைப் பாராட்டியே ஆக வேண்டும். அவர் மறைந்த பிறகு திருட்டுத்தனமாக ஒன்றிய பா.ஜ.க.வின் மிரட்டலுக்குப் பயந்து அ.தி.மு.க ஆட்சிதான் தமிழ்நாட்டிற்குள் நீட் தேர்வைக் கொண்டு வந்தது. ஆனால், காங்கிரஸ்தான் இந்த நீட் தேர்வைக் கொண்டுவந்தது என்று, அவர்கள் சொல்லி மழுப்புவார்கள்.

**நீட் தேர்வால் மருத்துவக் கனவு சிதைந்துவிட்டது!**

அரியலூர் மாவட்டம் அனிதாவில் தொடங்கி, சென்னை ஜெகதீசன் வரை கடந்த ஆண்டு 21 குழந்தைகள் தற்கொலை செய்திருக்கிறார்கள். நீட் தேர்வால் அவர்களின் மருத்துவக் கனவு சிதைந்துவிட்டது என்று தற்கொலை செய்துகொண்டார்கள். ஜெகதீசனும் இதைத்தான் எழுதிவைத்து தற்கொலை செய்துகொண்டார். அந்தத் துயரம் தாளாமல் மறுநாளே அவரது தந்தையும் தற்கொலை செய்துகொண்டார். இந்த நீட்டால் ஒரு குடும்பத்தையே இழந்திருக்கிறோம்.

நீட் தேர்வை ரத்து செய்ய முயற்சி எடுப்போம் என்று தேர்தல் பிரச்சாரத்தில் சொன்னோம். சொன்னதுபோலவே, நீட் தேர்வை ரத்து செய்வதற்கான அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். இங்கிருந்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, ஒன்றிய அரசுக்கு அனுப்புகிறோம். இதுவரைக்கும் குடியரசுத் தலைவர் கையெழுத்து போடாமல் இருக்கிறார்கள். இளைஞர் அணியின் சார்பாக கையெழுத்துகள் வாங்கி, சேலம் மாநாட்டில் தலைவரிடம் கொடுத்திருக்கிறோம். `50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து’, எங்களுக்கு நீட் தேர்வு வேண்டாம், ரத்து செய்யுங்கள் என்று பொதுமக்கள், மாணவர்களை சந்தித்து கையெழுத்து பெற்று இருக்கிறோம்.

விரைவில் தலைவரின் ஒப்புதலைப் பெற்று டெல்லிக்குச் சென்று அங்கேயும் போராட்டத்தை நடத்தத் தயாராக இருக்கின்றோம். என்றைக்கு தமிழ்நாட்டில் இருந்து நீட் தேர்வு முழுமையாக ரத்து செய்யப்படுகிறதோ, அதுதான் நமக்கு கிடைக்கக்கூடிய முதல் வெற்றி.

**இந்தியைத் திணிக்க முயற்சி!**

தமிழ்நாட்டுக்குள் எந்த விதத்திலாவது இந்தியைத் திணிக்க வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள். எப்போதுமே நாம் இந்தித் திணிப்பை ஏற்றுக்கொள்ள மாட்டோம். டிசம்பர் மாதம் சென்னையில் மிக்ஜாம் புயல், தென்மாவட்டங்களில் வரலாறு காணாத பெருமழை என எவ்வளவு பாதிப்புகள் ஏற்பட்டன என்பது உங்களுக்குத் தெரியும். நானும், பல்வேறு அமைச்சர்களும் கிட்டத்தட்ட 10 நாட்கள் அங்கு தங்கி, மக்கள் பணியில் ஈடுபட்டோம். பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 6000 ரூபாய் கொடுப்போம் என்று தலைவர் அறிவித்தார். ஆனால், அந்தப் பேரிடருக்கான நிதியாக ஒன்றிய அரசு ஒரு பைசா கூட நமக்கு கொடுக்கவில்லை.

இப்படி அனைத்து உரிமைகளையும் ஒன்றிய பா.ஜ.க அரசு நம்மிடமிருந்து பிடுங்கிக் கொண்டிருக்கிறது இதையெல்லாம் நாம் தட்டிக் கேட்க வேண்டும். அதற்கு இந்த நாடாளுமன்றத் தேர்தல் ஒரு மிகச் சிறந்த நல்ல வாய்ப்பு. நம் தலைவர் யாரை முடிவு செய்கிறார்களோ அவர்கள்தான் அடுத்த பிரதமராக அங்கே அமர வேண்டும். அதற்கு வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 நாம் வெற்றி பெற்றாக வேண்டும்.

நம்மை என்னென்ன முறையில் எல்லாம் மிரட்டி பார்க்கிறார்கள்? இ.டி., சி.பி.ஐ., ஐ.டி. சோதனையெல்லாம் செய்கிறார்கள். இதற்கெல்லாம் தி.மு.க.காரன் பயப்படுவானா! அ.தி.மு.க. என்று நினைத்துக் கொண்டு நம்மிடம் அவர்களின் வாலை ஆட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் வாலை நாம் ஒட்ட நறுக்குவோம். இரண்டே இரண்டு சம்பவத்தை மட்டும் சொல்கிறேன்.

**குடியரத் தலைவரை ஏன் அழைக்கவில்லை?**

சமீபத்தில் கிட்டத்தட்ட 1000 கோடி ரூபாய் செலவு செய்து புதிய நாடாளுமன்ற கட்டடத்தைத் திறந்தார்கள். அதற்கு யாரை அழைக்க வேண்டும்? இந்தியாவின் முதல் குடிமகன் யார்? எங்கோ இருக்கக்கூடிய சாமியார்களை எல்லாம் அழைத்துக் கொண்டு சென்று நாடாளுமன்ற கட்டடத்தை திறந்தார்கள். குடியரசு தலைவரை திறப்பு விழாவுக்கு ஏன் அழைக்கவில்லை? ஏனென்றால், அவர் கணவனை இழந்தவர், மலைவாழ் மக்கள் வகுப்பைச் சார்ந்தவர். அதையும் திறந்த ஒரே வாரத்தில் இழுத்து மூடிவிட்டார்கள், கேட்டால், வாஸ்து சரியில்லை என்று சொல்லி விட்டார்கள்.

அதேபோல இன்னொரு சம்பவம், சமீபத்தில், அயோத்தியில் ராமர் கோயிலைத் திறந்தார்கள். அதற்கு யாரை அழைத்து இருக்க வேண்டும்? சாமியார்களை அழைத்திருக்க வேண்டும். ஆனால், அழைத்தார்களா அழைக்கவில்லை! மோடி வந்தால் நாங்கள் வரமாட்டோம் என்று சாமியார்கள் சொல்லி விட்டார்கள். நம்மை வர வேண்டுமென்றார்கள். நம் மக்கள் கோயிலுக்கு வர மாட்டோம் என்று சொல்லவில்லை. அங்கிருந்த மசூதியை இடித்து விட்டு கோவில் கட்டி இருக்கிறீர்கள், அதனால் வரமாட்டோம் என்று சொல்கிறோம்.

நீங்கள் கோவில்களைக் கட்டினால், தமிழ்நாட்டு மக்கள் நன்றாக வந்து வழிபடுவார்கள். ஆனால், தேர்தல் என்று வந்துவிட்டால் வாக்குச் சீட்டில் உதயசூரியன் சின்னத்திற்குத்தான் வாக்களிப்பார்கள். அப்படிப்பட்ட தெளிவான மக்கள்தான் நம் தமிழ்நாட்டு மக்கள்.

**“ஆட்டுக்கு தாடியும் நாட்டுக்கு ஆளுநரும் தேவையே இல்லை”**

இங்கு ஆளுநர் ஒருவர் இருக்கிறார். பேரறிஞர் அண்ணா அப்பொழுதே சொன்னார், “ஆட்டுக்கு தாடியும் நாட்டுக்கு ஆளுநரும் தேவையே இல்லை” என்று. அரசு நிகழ்ச்சிகள் அனைத்திலும் தமிழ்த் தாய் வாழ்த்துதான் முதல்முறையாக பாடப்படும். நிகழ்ச்சி முடியும்போது தேசிய கீதம் பாடுவோம். எங்களுக்கு தேசிய கீதமும் முக்கியம், அதைவிட எங்கள் தமிழ்த் தாயும் முக்கியம்.

இந்த நிகழ்ச்சியில்கூட தமிழ்த்தாய் வாழ்த்தை பாடி ஆரம்பித்து இருக்கிறோம். இனிமே அரசு நிகழ்ச்சிகள் இல்லை, அனைத்து கழக நிகழ்ச்சிகளிலும் தமிழ்த் தாய் வாழ்த்தோடுதான் ஆரம்பிக்கப் போகிறோம். அமைச்சரவை கொடுத்த உரையை சட்டமன்றத்தில் படிக்க வேண்டியதுதான் ஆளுநரின் வேலை. அவர் ஒன்றும் மக்கள் பிரதிநிதி கிடையாது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் கிடையாது.

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

இன்று முதல் விண்ணப்பப் படிவங்கள் !

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# கழக வேட்பாளராக போட்டியிட விரும்புவோர் விண்ணப்பம் தருவதற்கான தேதி விவரம்!

## பொதுச்செயலாளர் **துரைமுருகன்** அறிவிப்பு!

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளராக போட்டியிட விரும்புவோருக்கான விண்ணப்பப் படிவங்கள் இன்று (19-2-2024) முதல் அண்ணா அறிவாலயத்திலுள்ள தலைமைக் கழகத்தில் கிடைக்கும்.

**போட்டியிட விரும்புகின்ற கழகத் தோழர்கள் விண்ணப்பத்தை முறையாக பூர்த்தி செய்து, 1-3-2024 முதல் 7-3-2024 மாலை 6 மணிக்குள் தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**வேட்பாளர் விண்ணப்பக் கட்டணம் - ரூ.50,000/-**

(விண்ணப்பப் படிவத்தை தலைமைக் கழகத்தில் ரூ.2,000/-வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.)

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர் தி.மு.க.

சுயமரியாதையும் சமதர்மமும்

# தழைத்தோங்கும் சமூகம் வளர பாடுபடுவோம்!

## சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, பிப். 19-

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களின் 165ஆவது பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத் தளப்பதிவு வருமாறு:-



தமிழ்ப்பற்றும் பொதுவுடைமைக் கொள்கையும் கொண்டு உழைக்கும் மக்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களின் 165ஆவது பிறந்தநாள் இன்று!

ஏகாதிபத்தியம், மதவாதம் இரண்டுமே முடக்குவாதநோய் தான் சமுதாயத்துக்கு என்று தமிழ் மண்ணில் விளைந்த புரட்சியாளரான அவரது நினைவுகளைப் போற்றி, அவர் விரும்பிய சுய மரியாதையும் சமதர்மமும் தழைத்தோங்கும் சமூகம் வளர பாடுபடுவோம்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

திராவிட இயக்கத்தின் தந்தை டாக்டர் நடேசனார் 150வது பிறந்தநாள்!

# தியாகராயர் நகர் நடேசனார் பூங்காவில் அவரது திருவுருவச் சிலைக்கு மரியாதை!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மாலை அணிவித்தார்! திராவிட இயக்க எழுத்தாளர் க.திருநாவுக்கரசு பங்கேற்பு!

*சென்னை, பிப். 19-*

*ஏழை எளிய ஒடுக்கப்பட்ட சமுதாயத்தை உயர்த்த வேண்டுமென உறுதிகொண்டு விளங்கிய டாக்டர் நடேசனார் அவர்கள் விருப்பப்படி தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர் ஒத்துழைப்போடு 1916, நவம்பர் 20 அன்று, தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்” என்னும் அரசியல் கட்சி தோற்றுவிக்கப்பட்டு பின்னர் அதுவே, நீதிக் கட்சி” எனப் பெயர் பெற்று வரலாற்றில் நிலைத்துவிட்டது.*

*தொடர்ந்து அமைந்த நீதிக் கட்சி அரசுகளில் வகுப்புவாரிப் பிரதி நிதித்துவச் சட்டம், இந்து சமய அறநிலையப் பாதுகாப்புச் சட்டம், தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் போன்ற முக்கியமான பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு தமிழக மக்கள் பெரும் பயன் எய்திட வழிவகுத்த திருமகனார் டாக்டர் நடேசனார்.*

*அன்பும் அறமும் பூத்த நெஞ்சினர்; கருத்துக் குருடர்களின் கண்ணைத் திறந்த பகுத்தறிவுச் சுடர்; இருட்டில் இருந்தவர்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த சிந்தனை யாளர்; நீதிக் கட்சியை வளர்க்க அயராது பாடுபட்ட உழைப்பின் சின்னம்; திராவிடர்களை எழுச்சி பெறச் செய்த இனக் காவலர்”; “திராவிட இயக்கத்தின் தந்தை” எனப் போற்றப்படும் டாக்டர் நடேசனார் அவர்களின் 150வது பிறந்த நாளினையொட்டி, நேற்று (18.2.2024), காலை, சென்னை, தியாகராயர் நகர் நடேசனார் பூங்காவில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதுபோது திராவிட இயக்க எழுத்தாளர் க.திருநாவுக்கரசு உள்ளிட்ட திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.*

# மழை வெள்ளச் சேதம் : ஒன்றிய அரசு இதுவரை ஒரு ரூபாய் கூட நிதியளிக்கவில்லை!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

11ஆம் பக்கத் தொடர்ச்சி

குடியரசுத் தலைவரை கூட சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்து தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால், ஆளுநர் என்பவர் நியமிக்கப்பட்டவர். அவர் ஒரு தபால்காரர் அவ்வளவுதான். ஆனால் சென்ற முறை ஆளுநர் உரையின் பெரும் பகுதிகளை அவரே திருத்தி விட்டு, நம் தலைவர்கள் பெயரை எல்லாம் விட்டு விட்டார். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, அம்பேத்கர் பெயர்களை தவிர்த்து விட்டார். ஆளுநர் அவர்கள் திருத்திப் பேசுவதெல்லாம் அவைக்குறிப்பில் ஏறாது, நாங்கள் எழுதிக் கொடுத்தது தான் ஏறும் என்று தைரியமாக சொன்னவர்தான் நம் தலைவர்.

அதற்குமுன்பு, தமிழ்நாட்டின் பெயரை மாற்ற வேண்டும் என்று சொன்னார் எனவே இனி தமிழ்நாடு என்று சொல்லக்கூடாது, தமிழகம் என்றுதான் சொல்ல வேண்டும் என்றார். ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் எதிர்ப்பு தெரிவித்ததால் இரண்டே நாட்களில் பல்டி அடித்து நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை என்னை மன்னித்து விடுங்கள் என்று சொன்னார்.

### நம் கையில் இன்னும் 50 நாள்கள்தான் இருக்கின்றன!

இப்போது சட்டசபையில் ஆளுநர் உரை படிக்காமல், தேசிய கீதம்தான் பாட வேண்டும், தமிழ்த்தாய் வாழ்த்தை பாடக்கூடாது என்று சொல்கிறார். ஆனால் நாம் அதை எல்லாம் ஏற்றுக்கொள்ளவில்லை. எங்களுக்கு தேசிய கீதம் எவ்வளவு முக்கியமோ அதை விட தமிழ்த்தாய் வாழ்த்தும் முக்கியம். எனவேதான் இன்றைக்கு தமிழ்த்தாய் வாழ்த்தோடு தொடங்கியிருக்கிறோம். வெற்றி உங்களின் கைகளில் இருக்கிறது,தேர்தலை சந்திக்க. நம் கையில் இன்னும் 50 நாள்கள் தான் இருக்கின்றன.

இன்னொரு பத்து நாட்களில் தேர்தல் தேதி அறிவித்து விடுவார்கள். நமக்குள் சின்ன சின்ன வித்தியாசங்கள் இருக்கும், மனக் கசப்புகள் இருக்கும் . அதையெல்லாம் கட்டி வைத்துவிட்டு அடுத்த 2 மாதங்கள் நம் ஒரே குறிக்கோள் தேர்தல் வெற்றி என்று இயங்க வேண்டும். தலைவர் யாரை அறிவிக்கிறார்களோ, அவரை நீங்கள் மிகப்பெரிய வித்தியாசத்தில் வெற்றி பெற செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அதுமட்டுமல்ல, மீண்டும் நாடாளுமன்ற பிரச்சார கூட்டத்தை இவ்வளவு மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்த அண்ணன் ராஜகண்ணப்பன் அவர்களுக்கும், மாவட்ட கழகச் செயலாளர் அண்ணன் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்

2014 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின் போது, ராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகை தந்த ஒன்றிய பிரதமர், பல்வேறு வாக்குறுதிகளை உங்களிடம் கொடுத்தார். அவர் சொல்வது எல்லாம் வாக்குறுதி கிடையாது, எல்லாமே வடைதான். “ஏழையாக பிறந்து ஏழையாகவே வளர்ந்தவன் நான், ஏழ்மையின் வலியை நன்கு உணர்ந்தவன்” என்று பேசினார். ஆனால், சொல்லிவிட்டு என்ன தெரியுமா செய்தார்? ஏழை எளிய மக்கள் சிறுக சிறுக சேமித்த 500 ரூபாய் ஆயிரம் ரூபாய் நோட்டை ஒரே இரவில் செல்லாது என்று சொன்னார். ஏ.டி.எம் வாசலில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தது உங்களுக்கு நினைவில் இருக்கும்.

### அவர் ஏழைத்தாயின் மகன்! அவரது நண்பர் உலக பணக்காரர்!

அதன்பிறகு 2000 ரூபாய் நோட்டுகளை அறிமுகம் செய்தார். இப்போது அதையும் செல்லாது என்று சொல்லிவிட்டார். இதையெல்லாம் நாம் மறந்து விட்டோம் என்று நினைக்கிறார். அவர் ஏழைத்தாயின் மகனாம்! அவருடைய நெருங்கிய நண்பர் யார் தெரியுமா? உலக பணக்காரர் பட்டியலில் இரண்டாவது இடம் பிடித்த அதானியிடத்தில் பொதுத்துறை அனைத்தையும் தூக்கி அவர் கையில் கொடுத்து விட்டார்.

ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் பாதி நேரம் இந்தியாவில் இருக்கமாட்டார். நான் இப்போது பேசிக் கொண்டிருக்கிற இந்த நேரம்கூட வெளிநாட்டில்தான் சுற்றுப் பயணத்தில் இருக்கிறார். நான் பலமுறை சொல்லி இருக்கிறேன்.ஒன்றிய பிரதமர் மோடி அவர்களே விமானத்தில் போகிறீர்கள், நீங்கள் விமானி இல்லாமல் கூட போவீர்கள், ஆனால், அதானி இல்லாமல் போக மாட்டீர்கள் என்று அந்த அளவிற்கு நெருங்கிய நண்பர்.

இந்த ஒன்பது ஆண்டு கால ஆட்சியில் ஒன்றிய அரசு செய்திருக்கக் கூடிய ஊழல்களை சி.ஏ.ஜி. அறிக்கை அம்பலப்படுத்தியிருக்கிறது. சி.ஏ.ஜி. அறிக்கை என்பது கண்ட்ரோலர் ஆடிட் ஜெனரல் ஆஃப் இந்தியா. மாநில அரசு, ஒன்றிய அரசு செய்கின்ற செலவுகளை தணிக்கை செய்கின்ற ஒரு அமைப்பு. அவர்கள் வெளியிட்ட அறிக்கையின்படி இந்த ஒன்பது வருடத்தில் ஏழரை லட்சம் கோடி ரூபாய்க்கு கணக்கு காட்டவில்லை ஒன்றிய அரசு.

துவாரகா சாலை திட்டத்தில் ஒரு கிலோ மீட்டர் சாரை அமைக்க 125 கோடி ரூபாய் செலவு செய்ததாக கணக்கு காட்டியிருக்கிறார்கள். அதேபோல் ஆயுஷ்மேன் பாரத் என்ற ஒரு திட்டம். சில வருடங்களுக்கு முன்பு ரமணா என்ற ஒரு படத்தை பார்த்திருப்பீர்கள். அந்தப் படத்தில் ஒரு காட்சி வரும், ஒருவர் இறந்து போயிருப்பார், அவரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துப் போயிருப்பார்கள். இறந்து போனவரை வைத்து மருத்துவர்கள் வெளியே வந்து பொய் சொல்வார்கள். உயிரோடு இருக்கிறார் போய் மருந்து வாங்கி கொண்டு வாருங்கள், ஆபரேசன் செய்ய வேண்டும், பணம் காசு கட்டுங்கள் என்று சொல்வார்கள்.

நாம் திரையில் பார்த்ததை நிஜத்தில் செய்து கொண்டிருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இறந்து போன 88,000 பேருக்கு காப்பீடு கொடுத்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் ஒன்றிய பாஜக அரசை இந்த தேர்தலில் பதில் சொல்லி ஆக வேண்டும்.

ஒரு சிறிய கதையை மட்டும் சொல்லி முடிக்க விரும்புகின்றேன். ஒரு பூட்டப்பட்ட ஒரு பூட்டு, ஒரு சுத்தியல், ஒரு சாவி. இந்த சுத்தியல் பூட்டை உடைப்பதற்காக அதன் தலையில் நன்றாக அடிக்கிறது, பூட்டை திறக்க முடியவில்லை. ஆனால், இந்த சாவி மிகச் சுலபமாக திறந்து விட்டது. அப்போது அந்த சுத்தியல் கேட்டது. சாவியே நான் எவ்வளவு பெரிதாக இருக்கிறேன், எவ்வளவு பலம் வாய்ந்தவனாக இருக்கிறேன் என்னால் திறக்க முடியவில்லை! ஆனால், இவ்வளவு சின்னதாக நீ இருக்கிறாய் உன்னால் எப்படி இந்தப் பூட்டை இவ்வளவு சுலபமாக திறக்க முடிந்தது? என்று கேட்டது. அதற்கு அந்த சாவி சொன்னது உண்மைதான், நீ என்னை விட பெரிய பலசாலிதான், பார்ப்பதற்கு பெரிதாக இருக்கிறாய். ஆனால், நீ பூட்டைத் திறப்பதற்கு பூட்டின் தலையில் அடித்துக்கொண்டே இருக்கிறாய்! நீ தலையில் அடித்தால் பூட்டு திறக்காது. நான் அந்தப் பூட்டின் இதயத்திற்குள் சென்று லேசாக தொட்டேன், அதனால்தான் அந்த பூட்டு நான் சொல்கின்ற பேச்சை கேட்கிறது என்று சொன்னது.

இந்த இடத்தில் நான் பூட்டு என்று சொன்னது நம் தமிழ்நாடு. சுத்தியல் என்று சொன்னது ஒன்றிய பா.ஜ.க அரசு. சாவி என்று சொன்னது நம் திராவிட முன்னேற்றக் கழகம். தமிழ்நாட்டு மக்களிடம் எப்படி எந்த விஷயத்தைச் சொல்ல வேண்டும்? என்னென்ன திட்டங்களைச் செய்து கொடுக்க வேண்டும்? என்று நம் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

இந்தியாவிலேயே ஒரு முதலமைச்சர் கோவிட் வார்டுக்குள் தைரியமாக சென்று வந்தார் என்றால், அது நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். அதன்பிறகு ஒவ்வொரு திட்டமாக செய்துகொண்டு வருகிறோம். எனவே இதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு தேர்தல் பணிகளைத் துவங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்

### மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு இல்லை!

அதேபோல் ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் இன்னொரு முக்கியமான ஒரு வாக்குறுதியை கொடுத்தார். மீனவர்களுக்கு கடலில் மீன்கள் எங்கு இருக்கும் என்று சேட்லைட் மூலமாக கண்டுபிடித்து சொல்வோம் என்று ஒரு வடை சுட்டார். ஆனால், இன்று வரை அந்த வாக்குறுதியை தொடங்கவும் இல்லை, நிறைவேற்றவும் இல்லை.

மீன்கள் எங்கு இருக்கிறது என்று மீனவர்களுக்குத் தெரிவதற்கு முன்பு மீனவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று இலங்கை கடற்படையினருக்குத் தெரிந்து விட்டது. ஒரு வேளை சேட்லைட்டை தப்பாக புரோக்ராம் செய்து விட்டார்களா என்று தெரியவில்லை. அதேபோல தான் ஆட்சிக்கு வந்தால், தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கைக் கடற்படை தாக்கினால் நம் ராணுவத்தை அனுப்பிக் காப்பாற்றுவேன் என்று இன்னொரு வடையை சுட்டார் மோடி. இன்றைக்கு பத்திரிகைகளை எடுத்து பார்த்தாலும், தொலைக் காட்சியில் செய்தியைப் பார்த்தாலும் தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது, தமிழ்நாட்டு மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல், மீன்கள்வலைகள் கொள்ளை அடிக்கப்பட்டன என்ற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

### ஒரு ரூபாய் கூட ஒதுக்கீடு செய்யவில்லை!

இப்படித்தான் மோடி ஒவ்வொருமுறை வரும் பொழுதும் ஒவ்வொரு வடை சுடுவார். 10 வருடத்திற்கு முன்பு மதுரைக்கு வந்து ஒரு வடை சுட்டார், அது உங்களுக்கே தெரியும். ஆமாம், எய்ம்ஸ்தான், இது வரைக்கும் ஒரு ரூபாய் கூட ஒதுக்கீடு செய்யவில்லை. வைத்தது ஒரே செங்கல், அதையும் நான் தூக்கிக்கொண்டு வந்து விட்டேன். ஆனால் எய்ம்ஸ் மருத்துவமனை வந்துவிட்டது என்றார்கள்.

நான் சொன்ன பிறகுதான் அதை ஒப்புக் கொண்டார்கள். எனவே நாங்கள் கேட்டுக் கொள்வதெல்லாம் 2021 இல் நீங்கள் அத்தனை பேரும் சேர்ந்து அடிமைகளை விரட்டுனீர்கள், அ.தி..மு.க.வை ஆட்சியை விட்டு துரத்துனீர்கள். இப்பொழுது நமக்கு இன்னொரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அடிமைகளின் எஜமானர்களை வீட்டிற்கு நீங்கள் அனுப்ப வேண்டிய நேரம் வந்துவிட்டது.

நீங்கள் ஒவ்வொருவரும் மக்களிடம் இவற்றையெல்லாம் எடுத்துச்சென்று மக்களிடம் பரப்புரை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்த மாவட்ட கழக செயலாளர் அவர்களுக்கும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரையாற்றினார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் ராஜ கண்ணப்பன் ராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா (எ) முத்துராமலிங்கம், கழக உயர்நிலைச் செயல்திட்ட குழுவின் உறுப்பினர் சுப தங்கவேல், நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் முருகேசன், கருமாணிக்கம், ராமச்சந்திரன், முன்னாள் அமைச்சர்கள் சத்தியமூர்த்தி, சுந்தர்ராஜன், பாராளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அணிகளின் மாநில நிர்வாகிகள் சம்பத் சுப.திவாகரன் பவானி ராஜேந்திரன், முருகவேல் போஸ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவருமான திசை வீரன் மாநில மாணவர் அணித் தலைவர் ராஜீவ் காந்தி கழகத் திட்டக் குழுச் செயலாளர் அக்ரி கணேசன்,

இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர்கள் ஜோயல், இன்பா ரகு, ஜி.பி, ராஜா, மாநில நிர்வாகிகள் பரணி கார்த்திகேயன், ராமநாதன் விஜய கதிரவன் ஆனந்த், ரவிச்சந்திரன், ராமர், நல்ல சேதுபதி, ராமநாதபுரம் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர்கள் கருப்பையா ஆதித்தன் ,சுஜாதா கணேசன், நகரக் கச் செயலாளர் பிரவீன் கார்மேகம், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மணிராஜ் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் முத்துராமலிங்கம் கணேசன், குழந்தைவேலு உள்பட கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள், தி,மு,க கழக தொண்டர்கள், ஏராளமான பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



நேற்று (18.2.2024) தமிழ்நாடு அரசின் சார்பில், சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் அவர்களின் 165வது பிறந்தநாளையொட்டி, சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அன்னாரின் திருவுருவப்படத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நலவாரியத் தலைவர் எர்ணாவூர் ஏ.நாராயணன், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர்.இல. சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.




இராமநாதபுரம் மாவட்டம் – திருவாடானையில், கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு கழக இளைஞர் அணி சார்பில் உருவாக்கப்பட்டுள்ள நூலகத்தைத் திறந்து வைத்துப் பார்வையிட்டபோது எடுத்தபடம். மாவட்ட பொறுப்பு அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் இன்பா ரகு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சம்பத் ராஜா, துணை அமைப்பாளர்கள் ரமேஷ் கண்ணா, குமரகுரு, சம்பத்குமார், கோபிநாத், சத்தியேந்திரன், தெனபிக் ரகுமான் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.

ஊரக வளர்ச்சி – ஊராட்சித்துறை சார்பில்

# ரூ.338 கோடி மதிப்பில் கட்டப்பட்ட கட்டிடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, பிப்.19-

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத் தின் கீழ் ரூ.204.57 கோடி செலவில் 1374 புதிய வகுப்பறைக் கட்டடங்கள், ரூ.80.85 கோடி செலவில் 270 துறைக் கட்டடங்கள் - பள்ளிக்கல்வித் துறை சார்பில் ரூ.48.56 கோடி செலவில் பள்ளிக் கட்டடங்கள் மற்றும் ரூ.3.92 கோடி செலவில் நூலகக் கட்டடங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து, போதமலையில் அமைந்துள்ள கீழூர் ஊராட்சியில் ரூ.139.65 கோடி மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.**

அதன் விவரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 17.2.2024 அன்று தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 204 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1374 புதிய வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் 80 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 270 கட்டடங்களை திறந்து வைத்து, நாமக்கல் மாவட்டம், போதமலையில் அமைந்துள்ள கீழூர் ஊராட்சியில் 139 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 31 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைகள் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், பள்ளிக்கல்வித் துறை சார்பில் ரூ.48.56 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள் மற்றும் ரூ.3.92 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள நூலகக் கட்டடங்களையும் திறந்து வைத்தார்.

**வகுப்பறைக் கட்டடங்களைத் திறந்து வைத்தல்!**

முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி எண் 110ன் கீழ் ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு சுமார் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6000 புதிய வகுப்பறைகளும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சுமார் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1200 வகுப்பறைகளும், என மொத்தம் 1050 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7200 வகுப்பறைகள் கூடுதலாகக் கட்டப்படும் என அறிவித்ததன் அடிப்படையில் 2022-23-ஆம் ஆண்டில் ரூ.800 கோடி மதிப்பீட்டில் 5,653 புதிய வகுப்பறைகள் கட்ட அரசாணை வெளியிடப்பட்டது. இக்கட்டடங்கள் அனைத்தும் குழந்தை நேய சிறப்பு அமைப்புகளான உயர்த்தப்பட்ட மேற்கூரை, விசாலமான தாழ்வாரம், காற்றோட்டமிக்க ஜன்னல் வசதிகள், வழுக்காத தரைகள், கற்றலை ஊக்குவிக்கும் சுவர் ஓவியங்கள், வாழ்க்கைப் பாடங்கள் அடங்கியனவாகும்.

இத்திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக தமிழ்நாட்டின் 37 மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கட்டி முடிக்கப்பட்ட 1000 வகுப்பறைகள் முதலமைச்சர் அவர்களால் 26.09.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக, மாநிலத்தின் 34 மாவட்டங்களில் 155.42 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 1000 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி வகுப்பறைகள் முதலமைச்சர் அவர்களால் 26.12.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக, 204.57 கோடி ரூபாய் செலவில் 35 மாவட்டங்களில் உள்ள 1374 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கட்டி முடிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடங்களை திறந்து வைத்தார்.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ரூ.80.85 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்தல்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், திருநெல்வேலி மாவட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கட்டடம், திண்டுக்கல் மாவட்டம் - தொப்பம்பட்டி மற்றும் ஆத்தூர், மதுரை மாவட்டம் - திருப்பரங்குன்றம், நாமக்கல் மாவட்டம் - எலச்சிப்பாளையம், பெரம்பலூர் மாவட்டம் - ஆலத்தூர், சேலம் மாவட்டம் - அயோத்தியாபட்டணம், வேலூர் மாவட்டம் - பேர்ணாம்பட்டு ஆகிய 7 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், 62 கிராம செயலகம் / கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், 150 அங்கன்வாடி மையங்கள், 50 பொது விநியோக கடை / உணவு தானிய கிடங்குகள், என மொத்தம் 80 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 270 கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

**கீழூர் ஊராட்சியில் ரூ.139.65 கோடி மதிப்பீட்டில் சாலைகள் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.**

நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழூர் ஊராட்சி, கிழக்கு தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியான போதமலையில் கீழூர், மேலூர் மற்றும் கெடமலை ஆகிய மூன்று குக்கிராமங்களை உள்ளடக்கியது. இவ்வூராட்சியில் 1727 குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடியின மக்கள் (Particularly Vulnerable Tribal Groups) வாழ்ந்து வருகின்றனர். சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆகியும் இவ்வூராட்சிக்கு சரியான சாலை வசதி இல்லாமல் இருக்கிறது. இங்கு வாழும் மக்கள் தங்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கு கரடு முரடான பாறைகளுடன் கூடிய, ஆபத்தான மலைப்பாதையை பயன்படுத்தி வருகின்றனர்.

இம்மக்களின் துயர்துடைக்க, நபார்டு திட்டத்தின் கீழ் கீழூர், மேலூர், கெடமலையை இணைக்கும் வகையில், 139 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 31 கிலோ மீட்டர் நீளத்திற்கு போதமலையில் சாலைகள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் இச்சாலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

**பள்ளிக்கல்வித் துறை சார்பில் ரூ.48.56 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்களைத் திறந்து வைத்தல்**

பள்ளிக்கல்வித் துறை சார்பில் செங்கல்பட்டு, கடலூர், நாகப்பட்டினம், நீலகிரி, பெரம்பலூர், சேலம், தேனி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 48 கோடியே 56 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 227 வகுப்பறைக் கட்டடங்கள், 19 ஆய்வகங்கள், 7 கழிப்பறைகள், 3 பள்ளி சுற்றுசுவர்கள், ஒரு நூலகம், ஒரு கலையரங்கம் மற்றும் ஒரு முகப்பு வளைவு ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**பொது நூலக இயக்ககத்தின் கீழ் ரூ.3.92 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள நூலகக் கட்டடங்களைத் திறந்து வைத்தல்**

“தமிழ்மொழிக்கு அளப்பரிய பங்காற்றிய எழுத்தாளர்கள் மற்றும் தமிழறிஞர்களைப் போற்றும் வகையில், அத்தகைய அறிஞர் பெருமக்களை இளம் தலைமுறையினர் முன்மாதிரியாகக் கொள்ளும் வகையிலும், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 40 இலட்சம் ரூபாய் செலவில் தமிழறிஞர்கள், சாகித்திய அகாடெமி விருது பெற்றவர்கள், தமிழ்மொழி சார்ந்து இயங்கிய பல்துறை தமிழ் அறிஞர்கள் எனப் பிரித்து 180 அறிஞர்களின் ஓவியங்கள் மற்றும் அவர்களைப் பற்றிய சிறு குறிப்புகளுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ள செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி கிளை நூலக வாசகர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் தரை மற்றும் முதல் தளத்துடன் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள முசிறி கிளை நூலகக் கட்டடம்;

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் உருவாக முக்கிய பங்காற்றிய இந்திய நூலகத் தந்தை முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன் அவர்களை நினைவு கூரும் வகையில் அவர் பிறந்த இடமான மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள சீர்காழியில் 1 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் நினைவு நூலகக் கட்டடம்;

செந்நாப்புலவர் .கார்மேகனார் அவர்கள் தமிழுக்கு ஆற்றிய சேவையினை போற்றும் வகையில் அவர் பிறந்த இடமான இராமநாதபுரம் மாவட்டம், அபிராமத்தில் தரை மற்றும் முதல் தளத்துடன் அனைத்து வசதிகளுடன் 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள செந்நாப்புலவர் கார்மேகனார் நூலகக் கட்டடம் - என மொத்தம் 3 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நூலகக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் ஜெ. குமரகுருபரன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா. பொன்னையா, பொது நூலகங்கள் இயக்குநர் கே. இளம்பகவத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் ப. வேலுசாமி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.என். பூங்கொடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும்,

தருமபுரி மாவட்டத்திலிருந்து பள்ளிக்கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். செந்தில் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.க.மணி, எஸ்.சதாசிவம், எஸ்.பி. வெங்கடேஸ்வரன், மாவட்ட ஆட்சித் தலைவர் கி.சாந்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும்,

நாமக்கல் மாவட்டத்திலிருந்து வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன். நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஆர்.என்.இராஜேஷ்குமார், மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும் கலந்துகொண்டனர்.

வணிக வரி – பதிவுத் துறை சார்பில்

# ரூ.28,77 கோடி செலவில் - அலுவலகக் கட்டிடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, பிப். 19 -

**வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில் ரூ.28.77 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடங்களைத் திறந்து வைத்து, சார்பதிவாளர் அலுவலகங்களில் 1865ஆம் ஆண்டு முதல் பதிவு செய்யப்பட்ட 10 கோடி ஆவணங்களின் சான்றிட்ட நகலை பொதுமக்கள் இணைய வழியாகப் பெறும் சேவை மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்களில் உள்ள பதிவறைகளில் ரூ.6.75 கோடி செலவில் பொருத்தப்பட்ட இரண்டு இணையவழி புகைப்படக் கருவிகள் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

அதன் விபரம் வருமாறு :-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 17.02.2024 அன்று தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் சார்பில் 25 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் ஈரோடு மற்றும் தூத்துக்குடியில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடங்கள் மற்றும் கோபிச்செட்டிப்பாளையம், சத்தியமங்கலம், துறையூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள வணிகவரி அலுவலகக் கட்டடங்கள், 3 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் அரகண்டநல்லூர் மற்றும் சத்திரப்பட்டி ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

மாநிலத்தின் வரி வருவாயில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் பங்களிக்கும் முக்கிய துறையாக வணிகவரித் துறை விளங்கி வருவதோடு, வரி வசூல் மற்றும் வரி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனையும் உறுதி செய்து வருகிறது. மேலும், பதிவுத்துறை வாயிலாக மக்கள் தங்கள் சொத்துக்களின் மீதான உரிமையை தமது பெயரில் பதிவு செய்தல், திருமணத்தைப் பதிவு செய்தல், சங்கங்கள், சீட்டுகள் மற்றும் கூட்டாண்மை நிறுவனம் போன்ற குழுவாகக் கூடி செயல்படும் நடவடிக்கைகளைப் பதிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வணிகவரி மற்றும் பதிவுத் துறை செயல்பாடுகளை மேலும் மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

**வணிகவரித் துறை அலுவலகக் கட்டடங்களைத் திறந்து வைத்தல்**

ஈரோடு மாநில வரிக் கோட்டத்திற்குட்பட்ட இணை ஆணையர் வரிவிதிப்பு மற்றும் நுண்ணறிவு கோட்ட அலுவலகம், சேவை மற்றும் சரக்கு வரி மேல்முறையீட்டு அலுவலகம், உதவி ஆணையர், திண்டல், பெருந்துறை மற்றும் சென்னிமலை வரிவிதிப்பு வட்ட அலுவலகங்கள் என மொத்தம் 6 அலுவலகங்களுக்கு ஈரோட்டில் 14 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம்;

ஈரோடு மாநில வரிக் கோட்டத்திற்குட்பட்ட சத்தியமங்கலத்தில் 1 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவிலும், கோபிச்செட்டிபாளையத்தில் 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள வணிகவரி அலுவலகக் கட்டடங்கள்;

திருச்சிராப்பள்ளி மாநில வரிக் கோட்டத்திற்குட்பட்ட துறையூரில் 1 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவிலும், புதுக்கோட்டையில் 85 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள வணிகவரி அலுவலகக் கட்டடங்கள்;

திருநெல்வேலி வணிகவரி கோட்டத்திற்குட்பட்ட, துணை ஆணையர், தூத்துக்குடி சரக அலுவலகம், உதவி ஆணையர், தூத்துக்குடி1, 2 மற்றும் 3 ஆகிய வரிவிதிப்பு வட்ட அலுவலகங்கள் என மொத்தம் 4 அலுவலகங்களுக்கு தூத்துக்குடியில் 4 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம்;

என மொத்தம் 25 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வணிகவரித் துறை கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**பதிவுத்துறை அலுவலகக் கட்டடங்களைத் திறந்து வைத்தல்**

திண்டிவனம் பதிவு மாவட்டத்தில், அரகண்டநல்லூரில் 1 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவிலும், பழனி பதிவு மாவட்டத்தில், சத்திரப்பட்டியில் 1 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**சார்பதிவாளர் அலுவலகங்களில் 1865ஆம் ஆண்டு முதல் பதிவு செய்யப்பட்ட 10 கோடி ஆவணங்களின் சான்றிட்ட நகலை இணைய வழியாகப் பெறும் சேவையினைத் தொடங்கி வைத்தல்**

பதிவுத்துறை தொடங்கப்பட்டதிலிருந்து பதிவு செய்யப்பட்ட 10 கோடி ஆவணங்கள் தற்போது ஒளிவருடல் செய்யப்பட்டு மையக் கணினியில் சேமிக்கப்பட்டுள்ளன. சொத்து தொடர்பான (உயில், டிரஸ்ட், இதர ஆவணங்களை தவிர்த்து) எந்த ஆவணத்திற்கும் இணைய வழியில் விண்ணப்பிக்கவும், தேவையான கட்டணங்களை இணையவழியிலேயே செலுத்தி பொதுமக்கள் பெற்றிட வசதி செய்யப்பட்டுள்ளது. ஒளிவருடல் செய்யப்பட்ட ஆவணங்களை சேமிப்பதற்கும், அதிவிரைவாக மின்னணு கையொப்பமிட்ட சான்றிட்ட நகல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்கும் ஏதுவாக, அதிவிரைவு சேமிப்பு கலன்கள் (SSD Solid State Drive) 31 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டு ஆவண நகல்கள் சேமிக்கப்பட்டுள்ளன.

மின்னணு கையொப்பமிட்ட சான்றிட்ட நகல்களை பொதுமக்கள் https://tnreginet.gov.in என்ற இணையவழியாக பெறும் சேவையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

உயில், டிரஸ்ட் ஆவணங்களின் நகல்கள் சரியான நபருக்கு அவரின் அடையாள விபரங்கள் சரிபார்க்கப்பட்டு சார்பதிவாளர் அலுவலகங்களில் மையக் கணினியிலிருந்து சம்பந்தப்பட்ட நபருக்கு வழங்கப்படும். இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தவுடன், பொதுமக்கள் சொத்து தொடர்பான எந்த ஒரு சான்றிட்ட நகலுக்காகவும் சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு செல்ல வேண்டியதில்லை. 1865ஆம் ஆண்டு முதல் பதிவுசெய்யப்பட்ட 10 கோடி ஆவணங்களின் நகல்கள் உலகின் எந்த மூலையில் உள்ள பொதுமக்களுக்கும் கிடைக்கும் வண்ணம் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**சார்பதிவாளர் அலுவலகங்களில் உள்ள பதிவறைகளில் இரண்டு இணையவழி புகைப்படக் கருவிகள் (IP Camera) பொருத்திடுதல்**

பதிவுத்துறையின் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் தற்போதுள்ள மூன்று இணையநெறிமுறை புகைப்படக்கருவிகளுடன் 6 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் சார்பதிவகங்களில் உள்ள பதிவறைகளில் கூடுதலாக பொருத்தப்பட்டுள்ள இரண்டு இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகளின் (IP Camera) பயன்பாட்டினை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, துறைச் செயலாளர் பா.ஜோதி நிர்மலாசாமி, வணிகவரி ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன், பதிவுத் துறை தலைவர் தினேஷ் ஆலிவர் பொன்ராஜ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

புழல் எம். நாராயணன் முன்னிலையில்

# மாதவரம் வடக்குப் பகுதி தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம்!

## நா. சந்திரபாபு பங்கேற்பு!

*சென்னை, பிப்.19*

*சென்னை வட கிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு. கழக செயல் வீரர்கள் கூட்டம், 19வது வட்டம் மாத்தூர் இரண்டாவது பிரதான சாலை ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.*

*மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாதவரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் நா. சந்திரபாபு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.*

*பகுதி அவைத்தலைவர் வி. திராவிட வீரன் தலைமையில், பகுதி கழக நிர்வாகிகள் கே. சிவசங்கரன், ஆ. ராஜேந்திரன், ஆர் .முரளி, கே. காசிநாதன், பா. சந்திரன், கே.செல்வன், பி. தரணி வட்டச் செயலாளர்கள் இ.கண்ணப்பன், கே. கருணாகரன், வி.ஆர்.குப்பன், கே.அங்குசாமி, பி.எஸ்.சந்துரு ஆகியோர் வரவேற்றனர்.*

*இக்கூட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் கடந்த ஆட்சி காலத்தில் வேலை வாய்ப்பின்றி இருந்த இளைஞர்கள் 60 567 பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி, பணி நியமன ஆணைகளை வழங்கிய முதலமைச்சர், கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*மார்ச் 1 அன்று முதலமைச்சரின் பிறந்த நாளை எழுச்சியோடு மாதவரம் வடக்கு பகுதி முழுவதும் கட்டுரை போட்டி, பேச்சு போட்டி, விளையாட்டு போட்டிகள், பொதுக் கூட்டங்கள், கருத்தரங்கங்கள் நடத்தி சிறப்பாக கொண்டாடி நலத்திட்ட உதவிகளும் வழங்குவது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*சமீபத்தில் மறைந்த அறிவாலயம் துணை மேலாளர் என். ஜெயக்குமார் அவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.*

*இக்கூட்டத்தில் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் மஞ்சம்பாக்கம் ஆர் பாபு, கே ஏழுமலை, எஸ். கோபாலகிருஷ்ணன், பா. கோபிநாத், வீ. மணிகண்டன், எஸ். உதயகுமார்,கே. எம். மனோகரன்,கே. சண்முகப்ரியன், அமுதா ,கா.சேரலாதன், கருணாகரன், துரைசாமி,*

*எம்.என்.அஜய் தென்னவன், த. விக்னேஸ்வரன், என். பிரபு, சசிதரன், அனீஸ்,*

*19-ஆவது வட்டம் கோவர்தன், துளசி, சையத் அப்சல், ரகுவரன், கதிரவன்,*

*15வது வட்டம் பிடி. ரவிச் சந்திரன், இராஜேந்திரன்,ஏ. பக்தவச்சலம், ஆர். பாஸ்கர், ஏ .தசரதன், ஏ ,முகமது வசீம்,*

*17 வது வட்டம் சி. மூர்த்தி, சி .பாலாஜி, வி. பார்த்தசாரதி, எம். ஜான்சன், என். நாகராஜன், டி. திவாகர், விஜயன், ஜோசப்,*

*16வது வட்டம் பரசுராமன், மகேஷ் குமார் ,கே. ஏ. ரமேஷ், முத்தையா,*

*23வது வட்டம் து. எழில் குமார் ,சோ. சரவணன், எம். விக்னேஸ்வரன், டி. நெல்சன் ராஜ், ரவி,க..ந.க. சைமன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்*

*முன்னதாக தலைமை கழகம் வழங்கிய உறுப்பினர் அட்டைகள் வட்ட செயலாளரிடம் வழங்கப்பட்டது.*

*இறுதியாக 19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் நன்றி கூறினார்.*



விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை வட்டம் , குண்டாயிருப்பு கிராமத்தில் இயங்கி வந்த பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் காயமடைந்தவர்களை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் சந்தித்து நலம் விசாரித்து ஆறுதல் கூறினார்கள் .



திருக்கோவிலூர் அருகே கூவனூரில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ரூ.29.37 கோடி மதிப்பீட்டில் உயர்மட்ட பாலம் மற்றும் சாலை அமைக்கும் கட்டுமானப் பணியை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார். இதில் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன் குமார் ஜடாவத் உள்ளிட்ட கழக முன்னணியினர், அரசு அதிகாரிகள் உடன் உள்ளனர்.

திருக்கோவிலூர் அருகே கூவனூரில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே

# ரூ.29.37 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் - சாலை அமைக்கும் பணி!

## கட்டுமானப் பணியை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்

கள்ளக்குறிச்சி, பிப்.19-

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம் ரிஷிவந்தியம் தொகுதிக்கு உட்பட்ட கூவனூர் கிராமத்தில் இருந்து, பிள்ளையார்பாளையம்,சாங்கியம் உள்ளிட்ட கிராமங்களை இணைக்கும் வகையில்,தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே 29.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக உயர்மட்ட பாலம் மற்றும் சாலை அமைக்கும் பணிக்கான கட்டுமானப் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து அதே கிராமத்தில் அமைந்துள்ள அகத்தீஸ்வரர் திருக்கோவிலுக்கு ரூபாய் 72 லட்சம் மதிப்பீட்டில் மர திருத்தேர் செய்வதுக்கான திருப்பணி வேலைகளையும் தொடங்கி வைத்தார், இந்த நிகழ்வானது கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன்குமார் ஜடாவத்,ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் ஆகியோர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் எ.வ.வேலு பேசுகையில் நான் பதிமூன்று வயது வரை கூவனூரில் உள்ள பாட்டி வீட்டில் தான் வளர்ந்தேன். அந்த காலகட்டங்களில்

தென்பெண்ணை ஆற்றில் எப்போதுமே தண்ணீர் ஓடிக் கொண்டே இருக்கும்,அப்போது தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் வந்தாலே கூவனூர் கிராமம் ஒரு தீவுபோல மாறிவிடும்,இதனால் கூவனூரில் இருந்து மற்ற ஊர்களுக்கு செல்ல முடியாமல் அவதிப்பட்ட காலத்தில் நாங்கள் வாழ்ந்தோம் இது அன்றைய காலகட்டத்தில் வாழ்ந்த பெரியவர்களுக்கு தெரியும் இன்றைய காலகட்டத்தில் இளைஞர்களுக்கு அது புரியாது தெரிய வாய்ப்பில்லை ஆகவே கூவனூர், பிள்ளையார்பாளையம்,சாங்கியம் உள்ளிட்ட கிராமங்களை இணைக்கும் வகையில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டினால் இந்த காலத்தில் மட்டுமல்ல பிற்காலத்திலும் பயனாக இருக்கும் என்று நான் நினைத்தேன்,அதனால்

கூவனூரில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட மேம்பாலம் கட்டுவதற்காக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று தமிழகம் முழுவதும் இது போன்ற கிராமங்களில் உயர்மட்ட மேம்பாலம் கட்ட ஆணை பிறப்பித்தார், அந்த ஆணை பிறப்பித்ததில் இந்த கூவனூர் கிராமத்தில் கிராம மக்கள் நலனுக்காக திராவிட மாடல் ஆட்சியில் உயர் மட்ட மேம்பாலம் கட்டப்படுகிறது,ஆகவே ரூபாய் 29.37 கோடி மதிப்பீட்டில் உயர்மட்ட பாலம் மற்றும் சாலை அமைக்கும் பணிக்கான அடிக்கல் நாட்டு விழா இன்று எனது தலைமையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது,எனது நீண்டகால கனவும் நிறைவேறி உள்ளது என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் திருக்கோவிலூர் ஒன்றிய பெருந்தலைவர் அஞ்சலாட்சி அரசகுமார்,துணைத் தலைவர் தனம் சக்திவேல்,வடக்கு ஒன்றிய செயலாளர் எஸ். அய்யனார் மற்றும் மாவட்ட கவுன்சிலர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள்,துணைத் தலைவர்கள், மாவட்ட ஒன்றிய கிளைக் கழக திமுக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், பொது மக்கள் உட்பட அனைவரும் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் படப்பை, வஞ்சுவாஞ்சேரி,ராசிபொறியியல்கல்லூரியில்வேலைவாய்ப்புமுகாம்,இளைஞர்திறன்திருவிழாமற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்தி பொருட்களுக்கு விற்பனையாளர் மற்றும் கொள்முதல் செய்வோருக்கானமாவட்டஅளவிலானகலந்துரையாடல்சந்திப்புநிகழ்ச்சியில்குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜெயக்குமார் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.என்.எம்.உபயதுல்லா

### பிப்ரவரி 19 (2023)



பள்ளிப் பருவத்திலேயே கழகப் பணியில் தன்னை இணைத்துக் கொண்ட இவர், 1962ஆம் ஆண்டு கலைஞர் தஞ்சை தொகுதியில் போட்டியிட்டபோது, சிறப்பாகப் பணியாற்றி தலைவர் கலைஞரின் அன்பைப் பெற்றவர்.

1973ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வட்டக் கழகப் பிரதிநிதியாக 1987ஆம் ஆண்டு தஞ்சை நகரக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று 2014 வரை தொடர்ந்து 27 ஆண்டுகள் அப்பொறுப்பில் சிறப்பாகப் பணியாற்றியவர். 1

1989, 1996, 2006 ஆகிய ஆண்டுகளில் தமிழக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர், 2006 முதல் 2011 வரை தலைவர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் வணிகவரித் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார்.

இலக்கிய ஆர்வம் கொண்ட இவர், கடந்த 30 ஆண்டுகளாக இலக்கியவாதிகளைப் போற்றி வருந்தவர்.

2020–ல் தலைமைக் கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “கலைஞர் விருது” வழங்கிச் சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

எம்.எஸ்.பாபு தலைமை ! ஆர்.தசரதன் - சுப்புலட்சுமி பாபு முன்னிலையில்

# பெரும்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் மு. திருநாவுக்கரசு இல்ல மணவிழா வரவேற்பு!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன்- க.சுந்தர் எம்.எல்.ஏ. - ஜி.செல்வம் எம்.பி. வாழ்த்துரை!

காஞ்சிபுரம் பிப்:19-

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், பெரும்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் மு. திருநாவுக்கரசு சகோதரர் மடையாம்பாக்கம் எம். நல்லசிவம்,அமுதா ஆகியோரின் மகன் என். அருண் என்கிற ஐசக்கிற்கும், சென்னை கோடம்பாக்கம்,புலியூர் புரம் ஜி.சாது,கல்பனா ஆகியோரின் மகள் எஸ். அக்சயா என்கிற ஏஞ்சல் ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி இன்று( 19.2.2024- திங்கட்கிழமை) மாலை 6 மணிக்கு மேல் பி. ஆர். திருமண மண்டபம்,செய்யூரில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு இலத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.எஸ்.பாபு தலைமை ஏற்கிறார்.

பெரும்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் மு திருநாவுக்கரசு,ஆயிரம் விளக்கு 110அ வட்ட துணைச் செயலாளர் எஸ். பாரத்குமார் ஆகியோர் வர



வேற்புரை ஆற்றுகின்றனர். நிகழ்ச்சிக்கு கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆர். தசரதன், ஒன்றிய பெருந்தலைவர் சுப்பு லட்சுமி பாபு, ஒன்றிய துணை பெரும் தலைவர் கிருஷ்ணவேணி தணிகாசலம், மாவட்ட கவுன்சிலர் ஜெயலட்சுமி மகேந்திரன்,மாவட்ட பிரதிநிதி பன்னீர்செல்வம், ஒன்றிய குழு உறுப்பினர்கள் பருவதம் வரதன்,மோகனா கோபிநாத் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மணவிழாவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர்,சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மேலும் நிகழ்ச்சியில் சிறுவேடன் ஜி.செல்வம் எம்.பி,மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக், பனையூர் மு. பாபு எம்.எல்.ஏ, கழக மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் ஆர்.டி.அரசு, சூ.க.ஆதவன்,மு. தமிழினி,பி.ஆர். திருமலை பொன்னுரங்கம் எம்.சி, மு.மோகன்தாஸ், ஒன்றிய கழக நிர்வாகிகள்:எம்.மணி, ப.பத்மநாபன், க. அர்ஜுனன், ஜே.மகாகண பதிராமன், எஸ்.டில்லிபாபு,ஏ. வெங்கடேசன், ஓவியர் அரசு, மா.ரவேந்திரன், வேலூர் வெங்கடேசன்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்:தா. பாபு,எம்.தணிகாசலம்,பி. சுரேஷ்,எஸ்.வி. மகேந்திரன், சத்தியபாமா புருஷோத்தமன்,ஜி.எம். முனுசாமி,எஸ். ஜானகிராமன், பி. சுகன்யா,எம்.பி. கதிரவன், வி. செல்வகுமார், தென்னக செல்வன்,

கழக முன்னோடிகள்: ஆர். ரங்கநாதன்,முகையூர் எம்.பன்னீர்செல்வம், செய்யூர் என். ராஜமாணிக்கம், கருகப்பட்டு புருஷோத்தமன், இரணியசித்தி குமார், சிறுவங்குணம் எம். வெங்கடேசன், தென்பட்டினம் ஏ. அங்கமுத்து,

ஊராட்சி மன்ற தலைவர்கள்: லோகாம்பிகை ராஜமாணிக்கம், வேலாயுதம் சசிகுமார், சுந்தரி ஜனார்த்தனன், காந்திமதி ரமேஷ், ஆர்த்தி செல்வம், இளவரசி ஜனார்த்தனன்,சுதா வாசு உள்ளிட்ட மாநில, மாவட்ட,ஒன்றிய,வார்டு உறுப்பினர்கள் கிளை கழக நிர்வாகிகள் இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மு.சிவா. மு.விநாயகம் ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

நிதிநிலை சீரான பின்பு

# ஒட்டப்பிடாரத்தில் அரசு போக்குவரத்துப் பணிமனை!

## சட்டப்பேரவையில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அறிவிப்பு!

சென்னை, பிப்.19

நிதிநிலை சீரான பின்பு கோரிக்கையை கருத்தில் கொண்டு, ஒட்டப்பிடாரத்திற்கு அரசு போக்குவரத்து பணிமனை அமைத்து தரப்படும் என்று அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்தார்.

இது குறித்து சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்வியும், அதற்கு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அளித்த பதிலும் வருமாறு:-

டி.எம்.தமிழ்செல்வம்: கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஒன்றியம், ஊத்தங்கரையிலிருந்து கல்லாவி வழியாக பெரிய கொட்டகுளம், திருவனப்பட்டி, ஆனந்தூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்: கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஒன்றியம், ஊத்தங்கரையிலிருந்து கல்லாவி வழியாக பெரிய கொட்ட குளம், திருவனப்பட்டி, ஆனந்தூருக்கு பேருந்து இயக்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

டி.எம்.தமிழ்செல்வம்: ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை தொகுதியிலிருந்து கல்லாவி வழியாக ஆனந்தூர் செல்லும் U6 பேருந்து காலை 11 மணிக்கு செல்கிறது. இதனை பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு பயன்படுமாறு காலை 08.30 மணிக்கும், மாலை 04.30 மணிக்கும் பேருந்தை இயக்கித் தருமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்: பேருந்து வசதி கோரியுள்ள வழித்தடத்தின் மொத்த நீளம் 30.5 கிலோ மீட்டர் ஆகும். ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற U6 பேருந்து என்பது நொச்சிப்பட்டி, கல்லாவி, செங்கவழிப்பட்டி வழியாக செட்டிப்பட்டிக்கு 2 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதே பேருந்து ஊத்தங்கரையிலிருந்து மதியம் 12.40 மற்றும் மாலை 17.05 மணிக்கு சாமல்பட்டி, படவலூர், இரயில்வேகேட், கல்லாவி, செங்கேனிப்பட்டி பிரிவு வழியாக திருவனப்பட்டி வரை இயக்கப்படுகிறது. உறுப்பினர்



அவர்கள் பள்ளி நேரத்திற்கு தகுந்தாற்போல் மாற்றி அமைக்க வேண்டுமென்று கோருகிறார். அப்படி மாற்றி அமைத்தால் மற்ற ஊர்களுக்கு செல்கின்ற பகுதிகளில் அதேநேரத்தில் பள்ளிக்குச் செல்வது பாதிக்கப்படும் என்ற கேள்வி வருமா என்று தெரியவில்லை. அதுகுறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொ ள்கிறேன்.

டி.எம்.தமிழ்செல்வம்: அந்த வழியாக மற்ற பள்ளிகளுக்கு செல்பவர்களுக்கு எந்த தொந்தரவும் இல்லை, அதனால் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஊத்தங்கரை, பர்கூர் மற்றும் குப்பம் வழியாக திருப்பதிக்கு செல்லும் ஒரு புதிய பேருந்தை இயக்கித்தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்: மேற்படி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே ஏற்கெனவே இதுபோன்ற பல்வேறு கோரிக்கைகள் என்னிடத்திலே வந்தநேரத்தில், நானே அதற்கு பரிந்துரை செய்து அந்த பேருந்துகள் இயக்கப்பட்டு இருக்கிறது. எனவே, அரூரிலிருந்து கல்லாவி வழியாக செல்கின்ற பேருந்தை செட்டிப்பட்டி வரை இயக்கி கொடுத்திருக்கின்றோம். அதேபோல் தருமபுரியிலிருந்து சின்ன காமாட்சிப் பட்டி வரை சென்ற பேருந்தை சின்ன ஆனந்தூர் வரை நீட்டித்து கொடுத்திருக்கிறோம். இப்போது நம்முடைய உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதிக்குள் கேட்பதைத் தாண்டி திருப்பதி செல்ல கேட்கிறார். அவர் வேலூர் சென்றால் அங்கிருந்து திருப்பதிக்கு நிறைய பேருந்துகள் எந்தநேரத்திலும் தயாராக இருக்கும். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அதை கருத்தில்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எம்.சி. சண்முகையா: ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி அதிகமான கிராமப்புறங்க ள் நிறைந்த பகுதியாகும். கிராமப்புறங்களிலிருந்து பல்வேறு பகுதிகளுக்கு பேருந்து வசதி மிகவும் குறைவாக உள்ளது. அரசு போக்குவரத்து பணிமனை அமைப்பதன்மூலம் பொதுமக்கள் மகிழ்ச்சியோடு பயன்பெறுவார்கள். துறை அமைச்சர் அவர்களிடம் பல முறை மனுக்கள் கொடுத்துள்ளேன். இதை முன்னுரிமை அடிப்படையில் ஒட்டப்பிடாரத்தை மையமாக வைத்து அரசு போக்குவரத்து பணிமனை அமைத்துத் தருமாறு அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்: தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு பணிமனைகள் இருக்கின்றன. மிகவும் குறிப்பாகஇ ஒட்டப்பிடாரத்தை ஒட்டி தூத்துக்குடி நகரத்திலே இரண்டு பணிமனைகள் இருக்கின்றன. அதேபோல் பக்கத்து தொகுதியிலும் பணிமனைகள் இருக்கின்றன. அங்கிருந்து ஒட்டப்பிடாரத்திற்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அரசினுடைய நிதிநிலை காரணமாக கடந்த ஆண்டு புதிய பணிமனைகள் வழங்க முடியாத சூழல். நிதிநிலை சீரான பின்பு இந்தக் கோரிக்கைக் கருத்தில் கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பதிலளித்தார்.

சு.வில்லவன் தலைமை! நந்தனம் மதி- எஸ்.முரளி - மு.இ.ஏழுமலை முன்னிலை!

# மயிலை 123வது வட்டம் கே.கார்த்திகேயன் இல்ல மணவிழா வரவேற்பு!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ- அன்பகம் கலை-பூச்சி முருகன் வாழ்த்து !

சென்னை, பிப்.19-

மயிலை மேற்கு பகுதி 123 வது வட்டக் கழக செயல்வீரர் நினைவில் வாழும் கே. கார்த்தி கேயன்- சாலம்மாள் ஆகியோரின் புதல்வர் கே. கோபிநாத்- ஆர்.ஆஷா என்கிற வரலட்சுமி ஆகியோரின் மணவிழா இன்று (19.2.2024 திங்கள் கிழமை) காலை 6 மணிக்கு சென்னை வடபழனி ஆண்டவர் திருக்கோயில் தூண் எண் 17 இல் நடைபெறுகின்றது. அதனைத் தொடர்ந்து மணவிழா வரவேற்பு இன்று (திங்கட்கிழமை) மாலை 6 மணிகு க சென்னை, 18, தேனாம்பேட்டை, சீத்தம்மாள் கானியில் அமைந்துள்ள ஸ்ரீ மந்திர மூர்த்தி மஹாலில் நடைபெறுகின்றது.

மணவிழா வரவேற்பிற்கு மயிலை சு. வில்லவன் தலைமை வகிக்கிறார். பகுதிச் செயலாளர்கள் நந்தனம் கி.மதி, மயிலை எஸ். முரளி, வட்டச் செயலாளர் மு.இ.ஏழுமலை, எஸ்.ஆர். ராஜாசுரேஷ் குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கே.விஜயகுமார், வழக்கறிஞர் எல்.எஸ்.மணிகண்டன்,எஸ்.மாரிமுத்து, எஸ். செல்வமணி, சு.வி.கதிரவன், வழக்கறிஞர் சு.வி.மதிவாணன், கு.சீனிவா சன், க.சுகுமார்,எம்.சி.சங்கர் கணேன், ர.சதீஷ் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

மணமக்களை மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ். முருகன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே. ஏழுமலை, ராஜா அன்பழகன், யோகேஷ்ரவி, வழக்கறிஞர் எம்.ஸ்ரீதர் ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

எல்டாம்ஸ் பாபு, கே. மலர், எஸ்.சரவணன்,ஆர். பாலு, இ.சிறைசெல்வன், வழக்கறிஞர் சி.கணே ஷ் பாண்டியன், வி.விஜய் வெங்கடேஷ், ஜி.ஆர்.ராஜேந்திரன், பி.பாக்கியதாஸ், கு. ராஜி, மு..ஏ.முல்லைவேந்தன், ஏ.தேவேந்திரன், ம.நந்தகோபால், க.கணபதி, வசந்த் கபாலி, கே.ஜோதி, ஆட்டோ த.சங்கர்,

மேலும், எம்.கே. ஆலைஆனந்த், பி.பார்த்திபன், எம். உஷா, ஆர்.அசோக்குமார், அ.விஜயகுமார்,க.பாஸ்கர்,சு. தமிழ், டி.ஜெகநாதன், எம். குப்பன், வெள்ளை பி.ஏழுமலை, ஆட்டோ ஏழுமலை, ஆர்.தயாளன், எஸ்.விஸ்வநாதன், எம்.நடராஜன், ஏ. அருள்முருகன், எம்.மகாதேவன், டி.ஆர்.தயாளன், பி. கணேசன், எஸ்.புஷ்பராஜ், டி.கஜேந்திரன், கே.வி.டி. பாபு, ஏ.அண்ணாமலை, விடியோ கே.ரவி, பி.வி. சுரேஷ், என்.பாலாஜி, ஜி.சுப்பிரமணி, ஜி.கிரி, எம். இளையராஜா, எம்.சிவசங்கர், ஐயர்ன் மணி, மெடிக்கல் எஸ். கோபி, ஆர்.லோகேண், ஆர். குணசேரன், எம்.சாமிநாதன், எம்.அஜித் மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

த.ஜிவா, ம. சுரேஷ், பா. மனோ, ஜி.பிரேம்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



வேளச்சேரி தண்டீஸ்வரர் சிவபெருமான் ஆலயத்தில் ரூபாய்,ஒரு கோடியே பதினைந்து இலட்சம் செலவில் பல்நோக்கு மண்டபம் கட்டும் பணியினை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி மூலம் தொடங்கி வைத்ததை தொடர்ந்து.கழக தேர்தல் பணிக்குழு செயலாளரும்,சென்னை பெருநகர மாநகராட்சி ஆளுங்கட்சி பொருளாளர்,177 வது வார்டு மாமன்ற உறுப்பினர்,வேளச்சேரி,பெ.மணிமாறன் முன்னிலையில்,வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் .ஜே.எம்.எச்.அசன்மௌலானா பணியினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில்,மாவட்ட பொருளாளரும், 178 வது வார்டு மாமன்ற உறுப்பினர்,எஸ்.பாஸ்கரன், இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள்,மாவட்ட துணை அமைப்பா ளர்கள்.க.பத்மராஜன், ந.நீலகண்டன், பகுதியின் நலச்சங்க நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் அ. வேல்முருகன், த.மேகநாதன், இ.ரவிச்சந்திரன், ஆர்.ராஜேஷ், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.






சிவகாசி அருகே செயல்பட்டு வந்த பட்டாசு தொழிற்சாலையில் எதிர்பாராத விதமாக நேற்று முன்தினம் நிகழ்ந்த விபத்தில் 10 பேர் உயிரிழந்தது அதிர்ச்சியையும் வேதனையையும் தந்தது. இந்த கோர விபத்தால் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு ஆறுதல் தெரிவித்ததுடன், அவர்களுக்கு தலா ரூ.3 லட்சம் நிவாரண உதவியும், காயமடைந்து சிகிச்சை பெறுவோருக்கு ரூ.1 லட்சமும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து முதலமைச்சர் அவர்கள் அறிவித்த நிவாரண உதவிக்கான காசோலைகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கி ஆறுதல் கூறினார். உடன் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், சி.வெ.கணேசன், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது நடவடிக்கை கவலையளிக்கிறது!

# தமிழ்நாட்டு மீனவர்கள் விடுதலை செய்யப்படுவதை உறுதி செய்திடுவீர்!

## பிரதமருக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, பிப்.19**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில், "இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டு மீனவர்கள் விடுதலை செய்யப்படுவதை உறுதி செய்திடுவீர்!" என, பிரதமருக்கும், ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:-

தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது நடவடிக்கைக்கு உள்ளாவது மிகுந்த கவலையளிக்கிறது. கடந்த இரண்டு மாதங்களில், இத்தகைய கைது நடவடிக்கைகள் மிகவும் அதிகரித்திருக்கின்றன; இக்காலத்தில் 69 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதைவிட அதிர்ச்சியளிப்பது என்னவென்றால், மூன்று மீனவர்களை 'மீண்டும் மீண்டும் குற்றம்புரிபவர்' (habitual offender) பட்டியலில் அநியாயமாகச் சேர்த்து விடுவிக்காமல் தொடர்ந்து சிறையில் அடைத்திருப்பதுதான். இது நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிப்பது மட்டுமல்லாமல், அவர்களது படகுகளை நாட்டுடைமையாக்கும் இலங்கை அரசின் செயல், சிறுகச் சிறுகச் சேர்த்த சேமிப்புகளையும் அழிக்கிறது.

இந்தியப் பிரதமர் அவர்களும், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்களும் உடனடியாக இதில் தலையிட்டு நமது மீனவர்கள் விடுதலை செய்யப்படுவதையும் அவர்களது படகுகள் விடுவிக்கப்படுவதையும் உறுதிசெய்திட வேண்டும் எனத் தமிழ்நாட்டு மக்கள் அனைவரின் சார்பாகவும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதனை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதி, நமது மீனவர்களின் நலனைக் காக்கும் வகையில் உறுதியான நடவடிக்கையை எடுத்திட வேண்டும். ஏனென்றால், அவர்கள் தமிழர்கள் மட்டுமல்ல, பெருமைமிகு இந்தியர்களும் கூட.

இவ்வாறு அவர் தமது வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# திருவள்ளூர் மாவட்டத்தில் கால்நடை மருத்துவமனை திறப்பு விழா!

*திருவள்ளூர், பிப். 19 -*

திருவள்ளூர் மாவட்டம் திருநின்றவூர் நகராட்சி பகுதியில் 34.50 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கால்நடை மருத்துவமனை திறப்பு விழா நடைபெற்றது.

இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. பயன்பாட்டிற்கு கட்டடத்தை திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் நகர்மன்ற தலைவர் உஷாராணி ரவி, மண்டல இணை இயக்குனர் செய்தூன், உதவி இயக்குனர், வி.பாஸ்கர், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ஜெயபாலன், சண். பிரகாஷ், பொன்.விஜயன், கால்நடை உதவி மருத்துவர் பிரசாத், சி.அண்ணாகுமார், ஜி.சி.சி.கருணாநிதி, அன்பழகன்,

எஸ்.கமலக்கண்ணன், ரவி, நாகராஜ், குணசேகரன், சசிகால ஜீவா னந்தம், பி.எல்.ஆர்.யோகா, கேட்ரிங் சுரேஷ், சி.தங்கராஜ், அசோக் குமார், ஏகாம்பரம், சாலிம், பால்ராஜ்,

ரவிச்சந்திரன், ஜெயக்குமார், மாதவன், மகேஷ்குமார், மேகா,பாஸ்கரன், சுகுமார், தி.வை. சுரேஷ்குமார், எம்.கிருஷ்ணன், செந்தில் வேலு, கோடீஸ்வரன், சந்தோஷ் குமார், வழக்கறிஞர் பிஜி.பரணிதரன்,

துரைபாபு, ஸ்ரீவாக், பிரசன்னா, சதீஷ்குமார், வி. மகேஷ் குமார், பட்டாணி கார்த்திக் உள்பட பலர் கலந்து கொண்டனர்.






2024 - 25 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் வெற்றியை முன்னே முழங்கும் வகையில்

# 'தடைகளைத் தாண்டி' எனும் முத்திரைச் சின்னம்!

## தமிழ்நாடு அரசு வெளியிட்டது!

**சென்னை, பிப். 19 -**

**"தடைகளைத் தாண்டி" 202425 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் வெற்றியை முன்னே முழங்கும் முத்திரைச் சின்னம் வெளியிட்டுள்ளது தமிழ்நாடு அரசு!**




இது குறித்து அரசின் செய்திக் குறிப்பு வருமாறு :-

"என்னருந் தமிழ்நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலை ஞானத்தால்
பராக்கிரமத்தால் அன்பால்
உன்னத இமயமலை போல்
ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?"

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஏங்கிய காலம் நிறைவேறி; இன்று தமிழ்நாடு உயர்கல்வியில் முன்னணி மாநிலம்! மருத்துவத் துறையில் முன்னணி மாநிலம்! தொழில்துறையில் முன்னணி மாநிலம்! இந்தியப் பொருளாதாரத்தில் உயர்ந்துள்ள முன்னணி மாநிலம்! வேளாண்மையில் முன்னணி மாநிலம்! விளை யாட்டுத் துறையில், இளைஞர்தம் ஆற்றல் நிறைந்துள்ளதில் முன்னணி மாநிலம் - என எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் கண்டு எத்திசையிலும் புகழ் பதித்துத் திகழ்கின்றது. ஏடும், நாடும் இதர மாநிலங்களும் இதற்குச் சான்று பதிக்கின்றன.

இந்நிலையில் ஆட்சிப் பொறுப்பேற்ற மே 2021ஆம் ஆண்டில் ஆட்டிப் படைத்த கொரோனாவை முறியடித்து, காலமல்லாக் காலத்தே புயலும், மழையும், வீசி கடும் சேதங்களை விளைவித்த நிலையிலும், மக்களின் துயர் நீக்கி, நமது மாநிலத்திற்கு இயல்பாக வரவேண்டிய நிதிகளும், உதவிகளும், ஒத்துழைப்பும் கிடைக்காமல் தடைகள் பல தொடர்கின்ற நிலையிலும், முறையான, சிதையாத, கட்டுப்பாடான நிர்வாக நடைமுறைகளால் தடைகளை எல்லாம் தகர்ந்தெறிந்து, தொடர்ந்து முன்னேற்றத் திசையினில் தமிழ்நாட்டினை செலுத்திடும் நோக்கில் இந்த திராவிட மாடல் அரசு "எல்லோர்க்கும் எல்லாம்" என்ற இலக்கினை எளிதில் எய்திடும் வண்ணம் இன்று நான்காம் ஆண்டில் நிதிநிலை அறிக்கையைப் பேரவையில் அளிப்பதில் பெருமிதம் கொள்கிறது.

தமிழ்நாடு அரசின் 2024-25 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை "தடைகளைத் தாண்டி" எனும் தலைப்பில் பேரவையில் பெருமிதத்துடன் அளிக்கப்படுவதைக் குறிக்கும் சின்னமாக நிதிநிலை அறிக்கையின் முத்திரைச் சின்னம் அழகுற வடிவமைக்கப்பட்டுள்ளது.

"யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே" எனும் பழமொழிக்கேற்ப வரும் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் வெற்றியை முன்னே முழங்கிடும் முத்துச் சின்னமாக இது விளங்கிடும் என்பது திண்ணம்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பெருநகர சென்னை மாநகராட்சி 122வது வட்ட மாமன்ற உறுப்பினரும், கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான மறைந்த திருமதி. ஷீபா வாசு அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளையொட்டி அவரது திருவுருவப்படத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் த.வேலு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது கழக பகுதி செயலாளர்கள் நந்தனம் மதி, முரளி, மாவட்ட துணை செயலாளர்கள் வேதா, திருமதி மலர், வட்ட செயலாளர் நாகராஜ், கழக முன்னோடிகள் சித்திரைமல்லி எத்திராசன், எம்.டி.ஆர்.நாதன், மகளிர் அணியினர் கிருஷ்ணவேணி, கவிதா, யசோதா மற்றும் திருமதி. ஷீபா வாசு அவர்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

# திராவிட மாடல் அரசு 56

'**மு**த்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.








## தமிழ் சூழ் கணினி!

"**சா**ர், கணிப்பொறியே தானாக மொழி பெயர்க்கும் தொழில்நுட்பம் வந்துவிடும் என்கிறார்களே, அப்படி வந்தால் என்ன ஆகும்?" என்று பத்திரிகையாளர் ஒருவர், எழுத்தாளர் சுஜாதாவிடம் கேட்க, அவருக்கே உரிய பாணியில் இப்படிச் சொல்லியிருக்கிறார்: "ஒருவேளை கம்ப்யூட்டரே மொழிபெயர்க்கத் தொடங்கிவிட்டால், உங்களுக்கெல்லாம் வேலை போய்விடும். பரவாயில்லையா?".

இந்த விவாதம் நடந்தது, 1995-ஆம் ஆண்டு, சென்னை அண்ணா பல்கலைக்கழகக் கணிப்பொறித் துறை நடத்திய '**தமிழும் கணிப்பொறியும்**' என்ற மாநாட்டில்! 'தமிழ் கம்ப்யூட்டிங்' என்று சொல்லப்படும் தமிழ்க் கணினி அல்லது கணினித் தமிழ் குறித்து, தமிழ்நாட்டில் நடைபெற்ற முதல் மாநாடு அதுவாகத்தான் இருக்கும் என்கிறார்கள், பல வல்லுநர்கள்.

சுஜாதா அவ்வாறு சொல்லி, கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் ஆகப் போகின்றன. ஆனால், இன்று வரையிலும் கணினியால் இயல்பான தமிழில் மொழிபெயர்ப்பை மேற்கொள்ள முடியவில்லை. அதற்கு ஒரு துல்லியத்தைக் கொடுப்பதற்காக உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் கணினித் துறையில் தங்களின் பங்களிப்பைச் செய்து வருகிறார்கள்.

'கணினித் தமிழ்' எனும் அறிவுக் களத்தில், மொழிபெயர்ப்பு என்பது ஒரு பகுதி மட்டும்தான். 'கீ போர்டு' என்று சொல்லப்படும் கணினி விசைப்பலகை தொடங்கி, 'ஃபான்ட்' எனப்படும் எழுத்துருக்கள் உருவாக்குவது, தமிழிலேயே நிரல்கள் (புரோகிராமிங்) எழுதுவது, இணையத்தில் தமிழில் மின் இதழ்கள் நடத்துவது என்று பல வளர்ச்சிகளைக் கண்டு, இன்று 'ஏ.ஐ.' எனப்படும் 'ஆர்டிஃபீஷியல் இன்டெலிஜென்ஸ்' (செயற்கை நுண்ணறிவு) தொழில்நுட்பத்தைக் கணினியில் தமிழின் வளர்ச்சிக்கு எப்படிப் பயன்படுத்துவது என்று விவாதிக்கும் நிலைக்கு இன்று வளர்ந்திருக்கிறது.

அந்த வளர்ச்சியை, இனி வரும் காலத்தில் எப்படி முன்னே கொண்டு செல்வது, அப்போது நாம் சந்திக்கும் சவால்களுக்கு எப்படித் தயாராவது, தமிழ்க் கணினியால் ஏற்படப் போகும் வாய்ப்புகள் என்ன என்பது குறித்தெல்லாம் உலக அளவிலான நிபுணர்களோடு கலந்துரையாட, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான 'திராவிட மாடல் அரசு' நடத்தியதுதான் '**கணித்தமிழ்-2024**' மாநாடு.

### தமிழிணையம்-99..!

1996-இல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக ஆட்சிக்கு வந்தார். அப்போது அவர், கணினி தொடர்பான கருவிகளின் மீதிருந்த வரியைக் குறைத்தது முதல் மாநிலம் முழுவதும் சுமார் 13 ஆயிரம் சமுதாய இணைய மையங்களை அமைப்பது வரை என கணினித் துறை சார்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இந்த முன்னேற்றங்களையொட்டியே 1999-ஆம் ஆண்டு பிப்ரவரியில், 'தமிழ்நெட்-99' என்ற தலைப்பில் 'உலகத் தமிழ் இணைய மாநாடு' நடைபெற்றது. அதில் தமிழ் கீபோர்ட், தமிழ் எழுத்துருக்கள் தொடர்பான பிரச்சினைகள் சார்ந்து விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன. அந்த மாநாட்டில் மலேசியா, இலங்கை, சிங்கப்பூர், மொரிஷியஸ், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நார்வே, அயர்லாந்து, குவைத் எனப் பல நாடுகளிலிருந்தும் கணினி நிபுணர்கள், தமிழ் ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.

அந்த மாநாட்டில் பேசிய கலைஞர் அவர்கள், "தமிழக அரசு பிரம்மாண்டமான முறையில் தகவல் புரட்சியை மக்களிடத்திலே எடுத்துச் செல்வதில் தீவிரமாக இருக்கிறது. தமிழ்நாட்டு நிர்வாகத்தின் அனைத்துத் துறைகளிலும் கணிப்பொறியை நுழைத்திட, தமிழக அரசு திட்டமிட்டுச் செயல்படுகிறது. இம்மாநாடு அங்கீகரிக்கும் மென்பொருட்களைத்தான் தமிழக அரசு இனிமேல் வாங்கும் என்ற உறுதியையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார். அந்த உறுதிமொழியும் செயல்படுத்தப் பட்டது. அந்த மாநாட்டின் விளைவாக உருவானது தான் 'தமிழ் இணையப் பல்கலைக்கழகம்'. தற்போது அது, 'தமிழ் இணையக் கல்விக் கழகம்' என்று அறியப்படுகிறது.

### வெள்ளி விழாவில் புதிய பாதை...

'தமிழிணையம்-99' மாநாடு நடைபெற்ற 25-வது ஆண்டு இது. அதனைக் கொண்டாடும் வகையில், நம் கழக அரசு 2023-2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், 'தமிழ்க் கணினி பன்னாட்டு மாநாடு', 2024 பிப்ரவரியில் தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலம் நடத்தப்படும் என்று அறிவித்தது. அதன் அடிப்படையில், பிப்ரவரி 8-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை, சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் சிறப்பாக நடைபெற்று முடிந்திருக்கிறது.

'தமிழிணையம்-99' மாநாட்டுக்குப் பிறகான காலகட்டத்தில் தொழில்நுட்பம் அடைந்திருக்கும் வளர்ச்சி அபரிமிதமானது. செயற்கை நுண்ணறிவு குறித்து கடந்த நூற்றாண்டின் இறுதியிலேயே நாம் பேசத் தொடங்கிவிட்டாலும், வெகு சமீபமாகத்தான் அது முழுவீச்சில் களம் கண்டிருக்கிறது. எனவே, வளர்ந்து வரும் இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் தமிழுக்கான இடத்தினை வலுப்படுத்த வேண்டும் என்பதுதான் 'கணித்தமிழ் -2024' மாநாட்டின் நோக்கமாக இருந்தது.

### நல்ல தமிழ், இனி நான்கு..!

நம் 'திராவிட மாடல் அரசு' ஏற்கெனவே அரசுப் பள்ளிகளில் 'நான் முதல்வன்' திட்டம் மூலம் கோடிங், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட கணினித் தொழில்நுட்பங்கள் குறித்து அறிமுகப்படுத்தி வருவது அனைவரும் அறிந்ததே. அதிலிருந்தும் இன்னும் முன்னே செல்ல வேண்டும் என்பது, மாநாட்டின் நோக்கமாக இருந்ததால், அந்த இலக்குக்கு ஏற்ப ஆங்கிலத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுவரும் 'நேச்சுரல் லாங்குவேஜ் பிராசஸிங் டூல்ஸ்' (Natural Language Processing Tools), செயற்கை நுண்ணறிவு, இயந்திர வழிக் கற்றல் (Machine Learning), இயந்திரவழி மொழியாக்கம் (Machine Translation), உணர்வுப் பகுப்பாய்வு (Sentimental Analysis), மொழி மாதிரிகள் (Large Language Model), பேச்சுகளைப் புரிந்துகொள்ளல் (Automatic Speech Recognition) உள்ளிட்ட தொழில் நுட்பங்களை, தமிழில் உருவாக்கும் முயற்சிகள் குறித்து, இந்த மாநாட்டில் கருத்துரைகள், விவாதங்கள், ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தல் போன்ற வடிவங்களில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கூடுதலாக, இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் என இரண்டு விதமாக 'ஹேக்கத்தான்' எனும் நிரலாக்கப் போட்டியும் நடத்தப்பட்டது. இந்தப் போட்டியின் வழியாக, இளம் தொழில்நுட்ப வல்லுநர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களின் முயற்சிகளுக்குப் பரிசுகள் வாயிலாக அங்கீகாரம் தந்து, அவர்களுக்கு வேண்டிய வழிகாட்டுதலும் வழங்கப்பட்டது. போலவே, மொழித் தொழில்நுட்பங்கள் தொடர்பான அதிநவீனத் தயாரிப்புகள், திட்டங்கள், புதிய சிந்தனைகள் போன்றவற்றைப் பிரதிபலிக்கும் விதமாக கண்காட்சியும் அமைந்திருந்தது. இந்தக் கண்காட்சியில் தொழில் துறையைச் சேர்ந்தவர்கள், புத்தொழில் (STARTUP) நிறுவனத்தினர் ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழ் மொழியைக் காப்பதற்கும், அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதற்கும் மிகப்பெரிய வாய்ப்பாக இந்த மாநாடு நடைபெற்றிருக்கிறது. தாய்மொழிக்காக இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் செய்யாத முன்னெடுப்பு இது. ஆம்... இனி முத்தமிழ் அல்ல... இயல், இசை, நாடகம், கணினி என நால் தமிழ் என்று பெருமிதம் கொள்வோம்!

...சாதனை தொடரும்

### 'கணித்தமிழ்-2024' பன்னாட்டு மாநாட்டின் சில சிறப்பம்சங்கள்...

- **2** மாநாட்டுச் சிறப்பு மலர்கள் 'கணித்தொகை', 'கணிக்கோவை' என்ற தலைப்புகளில் வெளியிடப்பட்டன.
- **4** அரங்குகளில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அந்த நான்கு அரங்குகளுக்குக் கணினித் தமிழ் முன்னோடிகளான டாக்டர் வ.செ.குழந்தைசாமி, நா.கோவிந்தசாமி, மு.அனந்தகிருஷ்ணன், எம்.ஆண்ட்டோ பீட்டர் ஆகியோரின் பெயர்கள் சூட்டப்பட்டிருந்தன.
- **7** பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன.
- **10** நாடுகள் மற்றும் **9** மாநிலங்களில் இருந்து **62** அறிஞர்கள் பங்குகொண்டனர்.
- **31** ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.
- **40** கல்லூரிகள் பங்கேற்றன.
- **43** நிகழ்வுகள் நடைபெற்றன.
- **44** கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.
- **269** மாணவர் குழுக்கள் நிரலாக்கப் போட்டியில் கலந்துகொண்டன.
- **1,000** மொழி அறிஞர்கள், தொழில்நுட்ப வியலாளர்கள், கல்வி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் கலந்துகொண்டன.
- **2,000**-க்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்றனர்.

## ஒன்றிய அரசின் திட்டத்தில் எத்தனை ஓட்டைகள்?

'**ஆ**யுஷ்மான் பாரத்' என்ற 'பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா' சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் 2018-ஆம் ஆண்டில் மோடி அரசால் அறிமுகப்படுத்தப் பட்டது. குடும்பம் ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூ.5 லட்சம் வரையில் காப்பீட்டுச் சேவைகள் கிடைக்கும் என்பது இத்திட்டத்தின் இலக்கு. இத்திட்டத்தில் 7.5 லட்சம் பயனாளிகளின் பதிவுகள், ஒரே செல்போன் எண்ணுடன் இணைக்கப்பட்டு, மோசடி நடைபெற்றுள்ளதாக சி.ஏ.ஜி அறிக்கை சமீபத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

அதற்கெல்லாம் உரிய மறுப்போ, விளக்கமோ கொடுக்க முடியாமல் திணறியது ஒன்றிய பா.ஜ.க அரசு. இப்போது மேலும் சில புள்ளிவிவரங்கள் வெளியாகி, அத்திட்டத்தின் நோக்கத்தையே கேள்விக்குட்படுத்தியிருக்கின்றன. அரசு மருத்துவமனைகளைவிட குறைவான எண்ணிக்கையில்தான் தனியார் மருத்துவமனைகளில் இத்திட்டத்தைப் பயனாளிகளால் பயன்படுத்த முடிந்திருக்கிறது என்று 'தி ஸ்கிரால்' ஊடகம் கூறியிருக்கிறது. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க தனியார் மருத்துவமனைகள் தயக்கம் காட்டுகின்றன என்பதைத்தான் அச்செய்தி கூறுகிறது.

அதுமட்டுமல்ல, கொரோனா பெருந்தொற்று காலத்தில்கூட 11.9% நோயாளிகள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் காப்பீடு வசதிகளைப் பெற முடிந்திருக்கிறது. பேரிடர் காலத்தில்கூட உதவாத இத்திட்டத்தைத்தான் பா.ஜ.க.வினர், உலகிலேயே மிகப்பெரிய காப்பீட்டுத் திட்டம் என்று புகழுரைகள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

## :.ப்ளாஷ்பேக்



### நினைவஞ்சலிக்கு வருகை!

**கு**ம்பகோணம் பெருநகர தி.மு.க செயலாளராக கழகப் பணியாற்றி, பேரறிஞர் அண்ணா அவர்களிடமும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடமும் நன்மதிப்பைப் பெற்றவர் என் தந்தை மிசா சு.பத்மநாபன். கலைஞர் அவர்களின் உற்றநண்பர். 1989-ஆம் ஆண்டு கழகம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த சில நாட்களில் என் தந்தை மறைந்தார். என் தந்தை அவர்களின் மறைவையொட்டி, எங்களது இல்லத்துக்கு வருகை தந்த அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதி அவர்கள் நினைவஞ்சலி செலுத்தினார். அருகில், குடந்தை பெருநகர கழகச் செயலாளர் மிசா இரா.துரை, பொதுக்குழு உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் அவர்கள், நான் மற்றும் கழக உடன்பிறப்புகள் ஆகியோர் உள்ளோம்.



தமிழழகன்

**-சு.ப.தமிழழகன், மாநகரக் கழகச் செயலாளர், துணை மேயர், கும்பகோணம் மாநகராட்சி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033 -24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### இணையற்ற வீரனுக்குத் தடையா?

**1948-இல் பாரதிதாசனின் 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' நாடகம் தடை செய்யப்பட்டது. தடைக்கு எதிராக பலர் இரணியன் வேடமணிந்து கைதாகினர். அதன் பிறகு இந்நாடகத்துக்கான வரவேற்பு பெரிதும் அதிகமானது. தொன்மங்களில் கொடியவனாகச் சொல்லப்பட்ட இரணியனை, திராவிட இயக்க வீரனாக சமூக ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்துப் போராடும் போராளியாகச் சித்தரித்து நாடகத்தை எழுதியிருந்தார் பாரதிதாசன். 1934-இல் சென்னை விக்டோரியா அரங்கில் தந்தை பெரியார் தலைமையில் குத்தூசி குருசாமி இரணியனாக நடித்து அரங்கேற்றப்பட்ட நாடகம் இது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 393




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131